இணுவில்

# சைவ மகாஜன

# பொன்விழா

# மலர்



J / INUVIL SAIVA MAHAJANA
GOLDEN JUBILEE NUMBER
1930 — 1980

*With best compliments of*

# SRI NADARASAH BROTHERS

GENERAL MANUFACTURERS, MERCHANTS &
COMMISSION AGENTS.

*Dealers in:* Hardwares, Building Materials, Electrical Goods, Groceries Oilman Goods, Motor spare parts, Poultry foods & Chemicals.

கால்நடை வளர்ப்போருக்கு:

★ CHICK MASH ★ GROWERS MASH
★ LAYERS MASH ★ BROILER MASH

மற்றும்

மாட்டுத்தீனி வகைகளும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*தயாரிப்பாளர்களும் ஏகவிநியோகஸ்தர்களும்:*

# ஸ்ரீ நடராசா பிறதர்ஸ்

கே. கே. எஸ். வீதி, இணுவில்.

யாழ் — இணுவில்

# சைவ மகாஜன வித்தியாலயம்

# பொன்விழா மலர்

ரௌத்திரி ஸூ ஆனி மீ,

# GOLDEN JUBILEE NUMBER

1980

## மலர்க் குழு

திரு. தம்பு சண்முகநாதன்
பண்டிதர் திரு. வேலுப்பிள்ளை சண்முகலிங்கம்
திரு. செல்லத்துரை சோதிப்பெருமாள்
திரு. கந்தையா நடராஜா

Editorial Board:

Mr. T. Shanmuganathan
Pundit, V. Shanmugalingam
Mr. S. Sothiperumal
Mr. K. Nadarajah


உ



### வாணி வணக்கம்

பாடும் புலவருந்தாம் பாடுதற்கு ஏற்றவழி
கூடும் எனநினைந்து கும்பிடுவர் — பீடும்
நிலையான கல்விகற்கும் நெஞ்சுரமும் வேண்டிற்
கலைவாணி பாதம் கருது.

எமது அதிபர்



**Mr. K. RATNAM,** B. A. (sp.), Post Graduate Trained

## எமது துணை-அதிபர்



செல்வி நா. சிவசுப்பிரமணியம்

# வித்தியாலயக் கீதம்

இராகம் - ஹம்சத்வனி :: தாளம் - ஆதி.

பல்லவி

மன்னும் மகாஜன மகாவித்தியாலய
மாதாவைப் பணிந்திடுவோம் இணுவையூர்

அநுபல்லவி

கன்னல் மொழித்தமிழ் கல்விகலை அருளி
கற்பவை கற்றுமே கற்றுங்கொழுக நல்கும்

சரணம்

1. ஆன்ம ஞான போத அற நெறி காட்டியே
மேன்மைகொள் சைவநீதி மேவிட ஊட்டியே
நான் மறை போற்றிடும் நல்வழி காட்டியே
தேன் தமிழ் பொழிந் திடும் இணுவை நாட்டிலே
(மன்னும்)

2. மெஞ்ஞானமாம் சமயம் கணிதம் ஆங்கிலம்
விஞ்ஞான பௌதிகம் விளங்கு நுண்கலைகளும்
அஞ்ஞானம் அகற்றிடும் அறிவொளி காட்டியே
எஞ்ஞான்றும் ஞானமதை எழிலாகத் தரும் அன்னை
(மன்னும்)

3. எழுத்தறிவித்திடும் இறையவரைப் பணிவோம்
பழுத்திடும் செந்தமிழ் பண்பினை நாம் மறவோம்
வழுத்தியே வாழ்த்துவோம் வண்டமிழ் அன்னையை
செழித்திடும் கல்விகலைச் செல்வியாம் இணுவையூர்
(மன்னும்)

4. மகாஜன மகாவித்தியாலயம் வாழி
மன்னிடும் அதிபரும் ஆசிரியர் வாழி
சிகாமணியாய் அன்னை சிறந்து உயர்ந்துவாழி
சீர்நிறை கல்விகலை ஊர்பெருக வாழி.
(மன்னும்)

# எம் வித்தியாலயத் தாபகர்கள்

மதிப்புக்குரிய

அமரர். திரு. மு. அப்பாக்குட்டி
,, ,, சி. மயில்வாகனம்
,, ,, க. பொன்னையா

ஆகிய மூவருக்கும்

இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

# THIS GOLDEN JUBILEE NUMBER

**IS**

***dedicated to our founders***

The Late **Mr. M. APPAKUTTY**
,, **Mr. S. MYLVAGANAM**
and ,, **Mr. K. PONNIAH**

***of***

## REVERED MEMORY

# எமது தாபகர்கள்

அமரர்
முருகேசு அப்பாக்குட்டி
வைத்தியர்
அவர்கள்



அமரர் சி. மயில்வாகனம்



அமரர் க. பொன்னையா

[அமரர் முருகேசு அப்பாக்குட்டி அவர்களின் நிழற்படம் இல்லாமைக்கு வருந்துகிறோம்.
— ஆசிரியர்]

# பொருளடக்கம்


ஆசிரியர் எண்ணம்
அதிபர் அறிக்கை
முப்பதிலிருந்து — எண்பது வரை
பாடசாலை அபிவிருத்திச் சபை அறிக்கை
'இதை' — பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
இந்து சமயக் கல்வி மரபு — ப. சந்திரசேகரம்
தமிழ் வளர மொழிக் கலப்பு — செல்வி. இ. பெரியதம்பி
நாவலர் பெருமானின் சிந்தனைகள் — இரா. வை. கனகரத்தினம்
கூட்டுறவு இயக்கமும் இலங்கையும் — க. தேவராஜா
வாழ்த்து விருத்தங்கள் — அமரர். சி. ஆறுமுகதாசன்
கணிதம் — கற்றல் — கற்பித்தல் — வே. நடேசபிள்ளை
விஞ்ஞானத்தைக் கற்பிப்பதில் ... ... ... — ஐ. ஜெகநாதன்
Teaching of English in our shools — S. Theivathavapalan
பொதுக் கல்வித் திட்டத்தில் ... ... ... — ச. சுப்பிரமணியம்
நோயற்ற வாழ்வும் ... ... ... — ந. சிவசுப்பிரமணியம்
ஜனரஞ்சக இசையும் ... ... ... ... — ந. வீரமணி ஐயர்
மாணவர் பக்கம்
மன்ற அறிக்கைகள்
விளையாட்டுத்துறை அறிக்கை
ஆசிரியர் மன்றம்
ஆசிரியர்...
நன்றி ஒரு சொல்

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
# நிர்வாக சபை உறுப்பினர்

தலைவர் : திரு. க. இரத்தினம் அவர்கள் - அதிபர்

உப தலைவர்கள் : அ. பொன்னம்பலம்
க. குமாரசாமி

செயலாளர் : செ. சோதிப்பெருமாள்

துணைச் செயலாளர்கள் : திரு. பெ. கனகசபாபதி
,, வி. ஜெயரட்ணசிங்கம்

பொருளாளர் : க. நடராசா

குழு உறுப்பினர்கள் : திருவாளர்கள். சி. சிவபாலசிங்கம், இ. செ. இலகுநாதன், த. சண்முகலிங்கம், சி. கருணாமூர்த்தி நா. சீவரத்தினம், செல்வி. நா. சிவசுப்பிரமணியம், திருமதி பு. அரியராசா, செல்வன். ந. சிவசக்திநாதன்

கணக்குப் பரிசோதகர் : திரு. ச. அரியராசா

## பொன்விழாக் குழு

தலைவர்: திரு. க. இரத்தினம் - அதிபர்

செயலாளர்: செ. சோதிப்பெருமாள்

பொருளாளர்: க. நடராசா

உறுப்பினர்கள் : திருவாளர்கள். ச. அரியராசா, செ. இலகுநாதன், பெ. கனகசபாபதி, தி. சி. சண்முகலிங்கம், த. நடராசா, க. குமாரசாமி, இ. புண்ணியமூர்த்தி, ச. சிவானந்தராசா, ம. மகாலிங்கம், K. S. ஆனந்தன், சி. ஸ்ரீஸ்கந்தராசா, சி. புவனேசமூர்த்தி. வே. சண்முகலிங்கம்.

பல கல்விமான்களை உருவாக்கி

# இன்று பொன் விழாக் கொண்டாடும்
# இணுவில் யாழ் சைவ மகாஜனசபை

நாம் வாழ்த்துகின்றோம்

காந்தியடிகளின் கருத்துரைகள்

1 மிதமாகப் பேசு
2 எவர் எது சொன்னாலும் கேட்டுக்கொள்;
உனக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்
3 ஒவ்வொரு நிமிடத்தையும் முக்கியமாகக் கருதிக்
குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்
4 ஏழைபோல் வாழ். செல்வத்தில் பெருமை கொள்ளாதே.
5 நீ செய்யும் செலவிற்குக் கணக்கெழுது.
6 மனம் ஒன்றிக் கல்வி கற்றுக்கொள்
7 நாள்தோறும் உடற்பயிற்சி செய்.
8 அளவோடு சாப்பிடு.
9 நாள் தவறாமல் நாட்குறிப்பெழுது.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரித்துப் பல பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# மில்க்வைற் தொழிலகம்

**525/2, காங்கேசன்துறை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

*With the best compliments from:*

# YOGA TRADING COMPANY

General Merchants, Commission Agents
&
Dealers in Local Produce

**68 A Fourth Cross Street,**
COLOMBO - 11

Phone: 26065

With best wishes and kind regards
from:

# A S I N A & Co.

94, Fourth Cross Street,
COLOMBO - 11

ஐம்பதாவது ஆண்டைப் பூர்த்திசெய்து விழாவெடுக்கும்

இணுவில் சைவ மகாஜனசபை

வாயார வாழ்த்துகிறோம்.

V

க. கோபாலபிள்ளை

காங்கேசன்துறை வீதி,

கோண்டாவில் மேற்கு,

கோண்டாவில்.

நவீன மின்சார சாதனங்களுக்கும்

மற்றும்

''றெபின்'' நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கும்

''சென்றிக்'' மின் பம்புகளுக்கும்

''ஜெம்'' மின் மோட்டர்களுக்கும்

— வடமாகாண ஏக விநியோகஸ்தர் —

இன்றே விஜயஞ்செய்யுங்கள்

நியூரோன் எலெக்றிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7016

மாணவர்கள் பரந்த அறிவும்
சிறந்த சித்தியும் பெற

— ஞானசுரபி வெளியீடுகள் —

1980 ஆம் ஆண்டுக்கான பாட நூல்கள்

△ புதிய பாடத் திட்டத்திற்கமைய செயல் மூலம் கற்றற்கான பால கணித நூல்கள்

△ ஒன்றிணைந்த பாடத் திட்டம் 11 அலகுகளையும் உள்ளடக்கிய

(1) சுற்றாடற் கல்வி நூல்கள்

(2) சுகாதாரக் கல்வி நூல்கள்

△ ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசிற் பரீட்சைக்கான பயிற்சிகள் விற்பனையாகின்றன.

ஞானசுரபி புத்தகக் கம்பனி

217, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

குளிர்பானங்கள் எந்நேரமும் கிடைக்கும்

காரம், இனிப்பு, உணவுகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

கரன் கூல் பார்

கே. கே. எஸ். வீதி,

இணுவில்.

உரிமையாளர்:

வி. சிவபாலசிங்கம்

அன்பளிப்பு

நித்தியானந்த ஸ்ரோர்ஸ்

கே. கே. எஸ். வீதி,

இணுவில்

Dealers in:

TEXTILES

READY MADE GARMENTS

FANCY GOODS

SVP SEEVAM

T'Phone:
7423


14 A, Power House Road,
New Market,
Jaffna.

*Space*

*Donated by*

A. KIRUBAMOORTHY
Sivan Stores & Weaving Centre
Inuvil West,
INUVIL.

அன்பளிப்பு



பல துறைகளிலும் புகழ் பெற்று
எமது வித்தியாலயம்
சிறப்புடன் வளர
வாழ்த்துகிறோம்

# ஐங்கரன் அரிசி ஆலை

இணுவில் தெற்கு
இணுவில்.

நல்லாசிகள் கூறுகிறோம்

சுத்தமான
உணவு வகைகளுக்கு
நாடுங்கள்

# ராஜன் ஸ்ரோர்ஸ்

நியூ காளிங்கன் தியேட்டர் அருகாமை,
இணுவில்.

விவசாயிகளுக்குரிய
கிருமிநாசினிகள்,
— உரவகைகளுக்கு —
விஜயம் செய்யுங்கள்

# FARMERS STORES

K. K. S. Road
CHUNNAKAM.

அன்பளிப்பு:

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்

இல: 14, பஸ் நிலையம்

யாழ்ப்பாணம்.

வித்தியாலயத்தின் சேவைக்கு நமது பாராட்டுக்கள்

செ. சண்முகரத்தினம்

கே. கே. எஸ். வீதி,

இணுவில்

எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவார்

# சிவன் ஸ்ரேரர்ஸ்

கே. கே. எஸ், வீதி,

இணுவில்.

உரிமையாளர்; சு. தம்பிராஜா

அன்பளிப்பு

முருகன் எலெக்றிக்கல் ஸ்ரோர்ஸ்

6/8, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7110 தந்தி: ''கறன்ட்''

விற்பனையாகின்றது

பொருளியல் இலக்கணம்

GRAMMAR OF ECONOMICS

(உயர்தர வகுப்பு நூல்)

ஆக்கம்:

அ. ஸ்ரீஸ்கந்தராசா M. A. (Cey.)

பதிப்பாளர்:

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

235, காங்கேசன்துறை வீதி.

யாழ்ப்பாணம்.

*Heartiest Greetings to*

*Our Alma Mater*

# MAHESWARY RICE MILL

**Thavady North.**

**KOKUVIL.**

Proprietor; **R. Maheswaran**

## வாழ்த்துகிறோம் !

சூடான கோப்பி, சுவையான சிற்றுண்டி,

மற்றும் குளிர்பானங்கள்

சர்பத், ஒறேஞ்சுகிறஸ், நெல்லிரசம்

கட்லெட், மஸ்கற். பிஸ்கட், தொதல் வகைகளுக்கும்

சுவையான உணவு வகையறுக்களுக்கும்

"சண்யோ" பீடாவுக்கும்

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

**சண்யோ கோப்பி அன் கூல் பார்**

இல. 16B, நவீன சந்தை,

**சுன்னாகம்.**

( வேறு கிளை ஸ்தாபனங்கள் இல்லை )

சைவ மகாஜனாவின் இன்சேவை தொடர
வாழ்த்துகிறோம்.

# ஜெயம் சைக்கிள் வேக்ஸ்

கே. கே. எஸ் வீதி,
இணுவில்.

எமது உளம் கனிந்த வாழ்த்துக்கள்

# முருகன் அரிசி ஆலை

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

*With the best compliments from:*

# S. RASANAYAGAM

*INUVIL WEST*

INUVIL.

வாழ்த்துகிறோம்!

## ஸ்ரீ லிங்கம் ஸ்டோர்

உரிமையாளர் செ. பரமலிங்கம்

98 A, பிரதான வீதி, எட்டியாந்தோட்டை,

நம்பிக்கை, நாணயமுடன்

பொருட்களைக் கொள்வனவு செய்யும் சிறந்த இடம்

— திறமான ஸ்ரீ காலிங்கம் சுருட்டுக்கள் —

சுவையான புகையிலைத் தினுசுகள்

உள்ளூர் விளைபொருட்கள், வாசனைப் பொருட்கள்

றப்பர் ○ கோப்பி ○ பாக்கு ○ கொக்கோ

மிளகு ○ மஞ்சள் ○ கொறக்கா ○

மற்றும்

உள்ளூர் விளைபொருட்கள் தொகையாகவும் சில்லறையாகவும்

கொள்வனவு செய்யுமிடம்

பொன்விழாக் காணும்
இணுவில்
சைவமகாஜனு வித்தியாலயத்திற்கு
எமது ஆசிகள்

வெலிகம ஸ்ரோர்ஸ்
139, 4 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11

தொலைபேசி: 23271 | WS | தபாற்பெட்டி: 1625

உழவு இயந்திரம்
மோட்டார் வாகன
உதிரிப் பாகங்கள்

V

DEVAKUNA & Co.
Kandy Road,
VAVUNIYA:

*Dealers*
Tractor Corporation

சைவமும் தமிழும் வாழ
சேவைசெய்யும்
சைவமகாஜனுவிற்கு
எம்
இதயங்கனிந்த
— நல்லாசிகள் —

பொன்னம்பலம்
குடும்பத்தினர்
மருதனுமடம்

With best compliments
of:

K

M

C

Dealers in all kinds of Local Produce

**KADIR MANI & Co.**

142, 144, Fourth Cross Street,
COLOMBO - 11

Phone; 20246

இணுவையூர் சைவமகாஜனாவின் பொன்விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

**'கல்யாணி'**

இயந்திர மரத் தொழிற்சாலை

கட்டடங்களுக்குத் தேவையான

— நிலை — யன்னல் — கதவு —

ம ற் று ம்

வீட்டுத் தளபாடங்கள்

ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்,

உரிமையாளர்:

நா. நவரத்தினம்

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.

## R. சிவலோகநாதன் அன் கோ.

நம்பர் 6, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

எங்களிடம்

அரிசி ஆலைக்குரிய இயந்திர வகைகளும்

ஸ்கூட்டர் உதிரிப்பாகங்களும்

விற்பனைக்குண்டு.

நாகரீக முறையில்

உங்கள்

- சேட்
- பெல்பொட்டம்
- லுங்கி
- மெக்ஸி
- பிளவ்ஸ்

மற்றும் பல உடுப்புகளும்

தைப்பவர்கள்

**சஹீத் ரெயிலறிங் மாட்**

ஆஸ்பத்திரியடி,

இணுவில்.

உரிமையாளர்: V. சஹீத்

விழாமலர் சிறப்புற

வாழ்த்துகிறோம்

## S. செல்வம்

நீர் இறைக்கும் இயந்திரங்கள்

திருத்துபவர்

கே. கே. எஸ். வீதி,

இணுவில்

சிவன் கோவிலடி வைத்தியசாலை

த. சோமசுந்தரம்

முறிவு நெரிவு வைத்திய நிபுணர்

244, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

புதிய இலக்கம்: 352

# பரீக்ஷித்து விலாஸ்

※ சைவ ஹோட்டல் ※

348, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்,

☞ சுவையான சிற்றுண்டி வகைகள்

☞ உயர்தரமான பலகார வகைகள்

(குறித்த நேரத்தில் விசேடமாக ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்)

சிவன் கோவிலடி வைத்தியசாலை
பரீக்ஷித்துவிலாஸ்
சைவ ஹோட்டல்
இரு ஸ்தாபன உரிமையாளர்
த. சோமசுந்தரம்

தரமான ஜவுளிகளுக்கு
தனிப்பெரும் நிறுவனம்

த குமாரசாமி

ரெக்ஸ்ரைல்ஸ்

42 - 44, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

போன்: 7034

50வது ஆண்டு
நிறைவு விழாவிற்கு
எமது
நல்லாசிகள்

நியூ சுத்தானந்த பவன்
சைவ போசன மாளிகை
வவுனியா.

இணுவில்
சைவ மகாஜன வித்தியாலயத்தின்
இனிய சேவை
தொடர
வாழ்த்துகிறோம்

# ஸ்ரீவரதாஸ் புடவை மாளிகை

SRI VARATHAS TEXTILES

155, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

Phone: 7635

ஒட்டு மாங்கன்றுகள் :::: மாதுளை :::: பலா
தோடை :::: எலுமிச்சை
பலவித பூஞ்செடிகள்
கிடைக்குமிடம்

ஸ்ரீ காந்த தோட்டம்

அரசாங்கப் பதிவு பெற்றதும்,
பலரது பாராட்டுதல்களைப் பெற்றதும்
நம்பிக்கையுடன் விளங்கும் ஒரே தோட்டம்

# ஸ்ரீகாந்த தோட்டம்

உங்கள் இல்லங்களை இன்பச் சோலைகளாக்க
இன்றே விஜயம் செய்யுங்கள்


K. K. S. வீதி,
4 ஆம் கட்டை,
இணுவில்.

உரிமையாளர்:
க. செல்லப்பா


எமது நல்லாசிகள் உரித்தாகட்டும்

# ச. மகேஸ்வரன்


( தேநீர்க்கடை )
இணுவில் சந்தி,
இணுவில்.



பாடசாலை அபிவிருத்திச் சபை



பொன்விழா மலர்க்குழு



1930 இலிருந்து வளர்ந்துவரும் எமது வித்தியாலயத்தின்
முகப்புத் தோற்றம்.

பாராளுமன்றம்,
கொழும்பு 1.
Parliament, Colombo 1.
80 - 05 - 23.

எதிர்க்கட்சி முதல்வர் அலுவலகம்
OFFICE OF THE LEADER OF THE OPPOSITION

# ஆசிச் செய்தி

தமிழ்ப் பற்றும் சைவப் பண்பும் நிறைந்த கிராமங்களில் இணுவில் முன்னணியில் நிற்பதொன்ருகும். அத்தகைய பெருஞ் சிறப்புப் பெற்ற கிராமத்தில் 1930 ஆம் ஆண்டு ஆனி மாதம் 2 உ, ஆனி உத்திர புனிததினத்திலன்று ஆரம்பிக்கப்பட்ட இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை தனது பொன் விழாவைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் அதையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்

திரு. மு. அப்பாக்குட்டி அவர்கள் உபகரித்த காணியில், திரு. சி. மயில்வாகனம் அவர்களுடைய பண உதவியோடு இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதென்று அறிகிறேன். இவ் விரு பெரியார்களையும் இவ் வித்தியாசாலை முகாமையாளராகப் பணி புரிந்த திரு. க. பொன்னையா அவர்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது நன்றி மறவா மக்களின் கடமையாகும். அவர்கள் ஆரம்பித்து நடாத்திய பாடசாலை இன்று வளர்ச்சிபெற்று கனிஷ்ட பொதுத் தராதர, உயர்தர வகுப்புகளும் நடாத்தும் நிலையை எய்தியிருப்பது பாராட்டுக்குரியது. இவ் வித்தியாசாலை மேன்மேலும் வளர்ச்சி பெற்று மகா வித்தியாலயமாக உயர்ந்து, அறிவுச்சுடர் பரப்ப என் நல் வாழ்த்துக்கள் உரியனவாகுக.

வணக்கம்.

அ. அமிர்தலிங்கம்,
எதிர்க்கட்சி முதல்வர்.

# W. D. C. Mahatantila Esq.

**Addl. Director-General of Education**
**Ministry of Education, Colomdo - 2**

It gives me great pleasure in issuing this message for the Golden Jubilee Issue of Inuvil Saiva Mahajana School. Inuvil saiva Mahajana School was established in June 1930 and it completes 50 years of its useful and glorious existence on the 20th of June 1980 This school was started by a number of sincere and ardent Hindu farmers who had a very great desire to preserve and propagate Tamil Language and Hindu culture among the younger generatien at a time when there was opposition to the development of Hindu culture and Tamil Language, We owe a great debt of gratitude to those hardy band of people who braved all difficulties and worked very hard to develop the school for the good of the many. They had to face innumerable difficulties. They had to find their own funds and put up buildings. They had to pay the teachers They maintained with difficulty but with great enthusiasm, this school and developed it as one of the finest Tamil Hindu Schools in the North It produced a large number of men of character, men of integrity with a great love for their own Language and Culture. Teachers who were recruited served the school wiih great devotion and commitment. After the school was taken over in 1960 the second phase of development started.

When I was Regional Director of Education, Jaffna. I had the pleasure of reorganising the school giving it a high stature among the other schools in the area The School has been continuing to do great service to the people of Inuvil in particular and Jaffna in general and it has kept to its great motto "Learn what ought to be learnt and live accordingly". This school has a great future. I wish the Teachers and the children to remember that this is their own school created on the sweat and toil of their forefathers and to work harder to preserve its good name for years to come.

It is my sincere hope that Inuvil Saiva Mahajana School will some day be one of the finest Educational Institutjon in this country,

*17 June 1980* *Sgd.* W. D. C. Mahatantila

# George Mendis Esq.

**Deputy Director - General of Education**

## J/Inuvil Saiva Mahajana Vidyasalai

According to the information that We have received in regard to the status of the above school, we could without doubt say that it has existed so as to provide 'learning in the way matters of life should be learnt and also to live correctly what has been learnt'

This school celebrates its 50 Years of good work in June, 1980. In as much it has served the cause of education in this country it has helped to propagate Tamil and Hindu culture in particular among the youth of the nation.

I wish to offer my appreciation of the good work done in this school and also hope that we will be able to see better things - things to learn in the coming years.

**Ministry of Education**
**Colombo - 2**
*13 June 1980.*

*Sgd:* GEORGE MENDIS

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியரும்
கலைப் பீடாதிபதியுமான
கலாநிதி க. கைலாசபதி அவர்கள்
வழங்கிய

# ஆசிச் செய்தி

யாழ் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை பொன் விழாக் கொண்டாடுவதையும், அதனை முன்னிட்டு மலர் ஒன்று வெளியிடுவதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்நியர் ஆட்சிக் காலத்திலே நமது நாடு பல வழிகளிலும் நலிவுற்றிருந்தது. குறிப்பாகக் கலாசாரத் துறையில் பர சமய, மொழி ஆதிக்கம் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தின. நம் நாட்டு மக்களின் பொருளாதார, சமூக, ஆன்மீக புனருத்தாரணத்தை மனங்கொண்டு தேசாபிமானமிக்க பெருமக்கள் பல்வேறு கிராமங்களில் பாடசாலைகளை நிறுவினர். பண பலமோ அரசினர் ஆதரவோ கிடைக்காத சூழலிலே தமது இலட்சியப் பற்றையே துணையாய்க் கொண்டு அப் பாடசாலைகளை நிறுவிக் கல்வித்தானம் செய்து வந்தனர். ஆறுமுக நாவலரின் முன் மாதிரியைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் சைவப் பள்ளிக்கூடங்கள் தாபிக்கப்பட்டன. நமது சமூகத்தின் நன்னிலைக்கு இப் பாடசாலைகளின் பங்களிப்பு மகத்தானது.

'கற்பவை கற்று கற்றுங்கு ஒழுகுப'

என்ற வாசகத்தைக் குறிக்கோளாகக் கொண்டியங்கும் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை அரை நூற்றுண்டாக அரும்பணி ஆற்றி வந்திருப்பதை மகாஜனம் நன்கு அறியும். உயர்நிலை வகுப்புகள் நடத்தும் கல்விக்கூடமாக இப்பொழுது இவ் வித்தியாசாலை பரிணமித்திருப்பது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியதாகும்.

இவ் வித்தியாசாலை மேன் மேலும் வளர்ச்சி பெற்றுப் பல துறைகளிலும் சிறப்புற்று விளங்க வேண்டுமென உளமார விழைகின்றேன்.

க. கைலாசபதி

பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
6-6-80,

வடமாநில மேலதிகக் கல்விப் பணிப்பாளர்

திரு. க. சிவநாதன் அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

யா / இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை 1930 ம் ஆண்டு ஆனி மாசம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஐம்பது ஆண்டுகள் நிறைவெய்திப் பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. முப்பது பிள்ளைகளோடு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை தற்போது எழுநூறுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டதாகவும் வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளைக்கொண்ட உயர்தர வகுப்புகளுடன் இயங்கி வருவதாகவும் திறமைமிக்க பல பட்டதாரி ஆசிரியர்களையும் விசேட ஆசிரியர்களையும் கொண்டு விளங்கி ஆண்டு தோறும் அதிக மாணவர்களை அரசாங்கப் பரீட்சைகளில் அதி சித்தி பெறச் செய்வதாகவும் அறிந்து மிக மகிழ்ச்சி அடைகின்றேன். மேன் மேலும் இக் கல்விச்சாலை பல துறைகளிலும் முன்னேறிப் பிரகாசிக்க இறைவனை வேண்டி இப் பொன்விழா வேளையில் இவ் வாசிச் செய்தியை மிக மகிழ்ச்சியுடன் வழங்குகின்றேன்.

க. சிவநாதன்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
15-5-80

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி

திரு. ச. தனஞ்சயன் அவர்கள்

நல்கிய

# நல்லாசியுரை

யாழ்ப்பாணத்து இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் தனது ஐம்பதாண்டைப் பூர்த்தி செய்தமையைக் குறிக்குமுகமாக இவ்வாண்டில் பொன் விழாவைக் கொண்டாட விருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எனது கல்வி வட்டாரத்தில் இருக்கும் வித்தியாலயங்களுள் இப்பாடசாலை முதன்மை பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. இவ் வித்தியாலயம் சமீபத்திய ஆண்டுகளில் கல்வி, விளையாட்டுத்துறை போன்றவற்றில் முன்னேற்றம் அடைந்து வருவது குறிப்பிடத்தக்க சம்பவமாகும். இம் முன்னேற்றத்துக்கு முதற் காரணியாக விருப்பது நிருவாகத் தலைமையெனின் மிகையாகாது.

இன்றைய பாடசாலைகளின் முன்னேற்றம், அவை அமைந்திருக்கும் சூழல், ஆங்குள்ள பெற்றோர் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரது அயராத ஒத்துழைப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இப் பாடசாலை பெற்றிருக்கும் கட்டட வசதி, விளையாட்டு மைதான வசதி, குடி நீர் வசதியாதியன இவ்வூர் வாழும் பெரு மக்களின் தயாள சிந்தையின் பலனே.

இன்றைய நாளில், இவ் வித்தியாலயம் நல்லதொரு நினைவு விழாவை நடத்த நாட்டங் கொண்டமை சாலவும் பொருந்தும்.

விழா நன்கு அமைவது, விழாவை ஒட்டி விழா மலர் ஒன்று வெளியிடுவதும், இவ் வித்தியாலயப் பணியினையும் சிறப்பினையும் மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. விழாவிற்கும் மலருக்கும் எனது நல்லாசிகள்.

வட்டாரக் கல்வி அலுவலகம்,
இணுவில்.
23. 5. 80.

ச. தனஞ்சயன்

எமது பாராளுமன்ற உறுப்பினர்

திரு. வி. தர்மலிங்கம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையின் ஐம்பதாவது ஆண்டுப் பூர்த்திவிழாவைக் கொண்டாடுகின்ற வேளையில் அதையொட்டி வெளிவருகின்ற பொன் விழாச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது தொகுதியில் இப்பாடசாலையின் தரத்தில் இருக்கின்ற பல பாடசாலைகளில் இப்பாடசாலை முதல் வரிசையில் நிற்கிறது. இப்பாடசாலைக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள் ஆகியோருடைய ஒத்துழைப்பு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பூரணமாகக் கிடைத்துள்ளது. இந்த ஒத்துழைப்பினால் இப்பாடசாலை ஒரு குடும்பமாக வாழ்ந்து குறுகிய காலத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

பாடசாலை மேலும் மேலும் வளர்ந்து இணுவிலிலும், அயற் கிராமங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு கல்வியின் பல்வேறு பகுதிகளிலும் சேவையாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

வி. தர்மலிங்கம்

சுன்னாகம்,
18-05-1980.

# ஆசிச் செய்தி

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளிவரும் பொன்விழா மலருக்கும், விழாக் காணும் வித்தியாசாலைக்கும் எனது வாழ்த்துச் செய்திகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

யான் இப் பகுதியில் கடமையேற்ற குறுகிய காலத்தில் இவ் வித்தியாலயம் பல துறைகளிலும் முன்னேறி வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இவ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதற்குச் சென்ற ஆண்டு (1979) காணி அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது. அக் காணியைச் சுவீகரிப்பதற்கு யான் அப் பாடசாலைக்குச் சென்றபோது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் யாபேரும் மிகுந்த அக்கறையுடன் பாடசாலை வளர்ச்சியில் நாட்டங் கொண்டு உழைத்து வருவதை அறியக்கூடியதாக விருந்தது.

இவ்வாண்டு இவ் வித்தியாலயத்தில் க. பொ. த. (உயர்தர) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது ஐம்பதாவது ஆண்டுப் பூர்த்தி விழாவில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்,

இவ் வித்தியாலயம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து இணுவில் கிராமத்திற்கும் அயற் கிராமங்களுக்கும் கல்வியின் பல துறைகளிலும் சேவையாற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

A. C. செபநாயகம்

A. C. செபநாயகம் S. L. A. S.
உதவி அரசாங்க அதிபர்,
உடுவில்.

"திருவருள்"
நவாலி தெற்கு,
நவாலி,
2-05-80.

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை
பழைய மாணவர் சங்க
கொழும்புக் கிளைத் தலைவர்
திரு. க. குமாரசாமி அவர்களின்

# ஆசிச்செய்தி

எமது பாடசாலையின் பொன்விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கல்விச் செல்வத்திற்கு வேறு எந்தச் செல்வமும் ஈடாகாது. அப்படிப்பட்ட கல்வியைப் போதிப்பதற்கு நம் முன்னோர்கள் எடுத்த பெரு முயற்சியின் பயனாக ''இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை'' தோன்றியது. இப் பாடசாலை இணுவில் கிராமத்திற்கு மட்டு மல்லாது அயலில் அமைந்துள்ள கிராமங்களுக்கும் கல்விச்செல்வத்தை வழங்கி வருகிறது. பொன் விழா எடுக்கும் இந் நேரத்தில் இப்பாடசாலையின் தோற்றத்திற்கும் உயர்வுக்கும் அல்லும் பகலும் உழைத்த பெரியார்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், கொடை வள்ளல்கள் ஆகியோரின் தன்னலமற்ற சேவையை நினைவு கூர்வது எமது கடமையாகும். வாழ்க, அவர்கள் பொதுப் பணி.

இப் பாடசாலை மேலும் பல கல்விமான்களை உருவாக்கி எமது கிராமத்திற்கு மேலும் பெருமை தேடித்தர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இப் பொன் விழாவும் அதையொட்டி வெளியாகும் பொன் விழா மலரும் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

க. குமாரசாமி

கொழும்பு.
7. 6. 80.

# வரலாற்று வசந்தத்தை வரவேற்கும் வாழ்த்துக்கள்

இலங்கையின் கல்வி வரலாற்றில் பெருஞ் சுவாலையாகக் கிளர்ந்தெழுந்த இந்துக் கல்வி இயக்கங்களின் மத்தியிலே ஒரு தனிப் பெருஞ் சுடராகப் பொலிந்தெழுந்ததே எங்கள் சைவ மகாஜனு.

இந்துக் கல்வி இயக்கங்களும், கிறிஸ்தவ சமயக் குருமாரும், எழுத்தறிவின்மையை ஒழிக்கும் முயற்சியிற் கண் துஞ்சாது செயற்பட்டமையாற் கல்வியிலே சிறந்த கலையகமாக யாழ்ப்பாணம் வளர்ச்சியுற்றது.

கல்வியின் மகத்தான செயற்பாடுகளுள் ஒன்ருக விளங்கும் சிந்தனைப் புரட்சி எங்கள் கிராமத்தை அழகு செய்வதற்குச் சைவ மகாஜனு ஒளி விளக்காக விளங்குகின்றது.


சைவ மகாஜனுவின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த சான்ருேர்களையும், தன்னலங் கருதாத நல்லாசிரியர்களையும், எங்கள் கிராமத்தின் செல்வங்களாகிய உழைக்கும் மக்களையும் இத் தினத்தில் நினைவு கூருவோமாக.

எங்களூரின் ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கும் சுவாலையாகவும், ஏக்கங்களை ஒழிக்கும் வசந்தகாலத் தென்றலாகவும் சைவ மகாஜனு விளங்கவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.


என்னைப் போன்ற எத்தனையோ மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்று ஆராய்ச்சிகளில் ஈடுபடவும், அமுதூட்டும் தமிழன்னையை அணிசெய்யும் இலக்கியங்கள் படைக்கவும் வழிகாட்டிய சைவ மகாஜனு எங்கள் இதயத்தின் பொன் விளக்காகும்.

சபா. ஜெயராசா, பீ. ஈ. டி., எம். ஏ
(கலாநிதி ஆராய்ச்சி மாணவன்)

கொழும்பு
*15- 6- 80*



'கல்கி' அவர்களினது பேருதவியுடனும் P. T. A. & அரசாங்க உதவியுடனும் எழுந்த இருமாடி விஞ்ஞானகூடம்.




இரு மாடிக் கப்டிடத் திறப்புவிழா — 1974
பிரதம அதிதி திரு. ஜீ. விக்கிரமரட்ண D/E., N. R. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.


## நீர்த்தொட்டித் திறப்புவிழாவின்போது
### சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா அவர்களின்



வருகையும் வரவேற்பும்



மேடையில்



எமது மாணவ
கலைஞர்கள்
கௌரவிக்கப்படல்

# ஆசிரியரின் எண்ணம் . . . .

ஐம்பது ஆண்டுகள் நிறை வெய்தி, இன்று பொன்விழாக்காணுகின்றது எமது வித்தியாலயம். இந் நன்னாளில் இப் பொன் விழா மலரையும் மலர வைப்பதில் பெரு மகிழ்வுறுகின்றோம்.

தாபகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்; அபிமானிகள் ஆகியோரும் கல்வித்திணைக்கள மூலம் அரசும் எம் வித்தியாலய வளர்ச்சிக் கென ஆற்றிய சேவை களையும், உதவிகளையும் சுருங்கக் கூறிவைக்கின்றது இம்மலர்.

பல்வேறு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது புதுமைக் கருத்துகள் பொதிந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கல்வியுலகின் வெவ்வேறு துறைகளிலும் விசேட அறிவு, அனுபவம், ஆற்றல் மிக்க சேவைக்காலப் பயிற்சியாளர் பலரது, ஆய்வுடன் கூடிய கட்டுரைகளும் கற்றல், கற்பித்தல் உலகினுக்கு எழுச்சி தந்துதவும் பொக் கிஷமாக வெளிவருகின்றது இம்மலர். பேரறிஞர்கள், கல்வி மான்கள் பலரது ஆசியுரை களும் பாராட்டுரைகளும் அச்சில் அழுத்தப்பட்டு என்றென்றுமே நிலைபெற மலர்கின் றது இம்மலர்.

எம் வித்தியாலய மாணவரின் படைப்புகளும் கல்லூரி நிகழ்ச்சிகளும் இயன்றளவு கோவைப்படுத்தப்பட்டு, தாபகர்களது குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் உங்கள் கரங்களை மணக்க வைக்க வெளிவருகின்றது இம் மலர்.

பெற்றோரும் மற்றோரும் தமது உளங்கனிந்த அன்பையும் ஆதரவையும் மேலும் மேலுந்தந்து வித்தியாலய வளர்ச்சிக்குதவ வேண்டிக் கொண்டு இப்பொன் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

## நன்றி


இம்மலர் பொருளுடனும், பொலிவுடனும் அணிபெற்று மலர்ந்துவர, தம்ஆசியுரை களையும், கட்டுரைகளையும், ஆய்வுரைகளையும் எமக்குத் தந்துதவிய பேரறிஞர்கள் பலருக்கும் எமது பணிவான நன்றிகளைச் செலுத்துகிறோம்.

விளம்பரங்கள், அன்பளிப்புக்கள் தாராளமாகத் தந்து இம்மலரை உருவாக்க உதவிய வள்ளல்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

பொன்விழாக்குழுவின் பணிப்புக்கும் எமது நோக்குக்கும் இயைய, அழகாக இம் மலரை அச்சேற்றியுதவிய சைவப்பிரகாச அச்சகத்தாருக்கும், செட்டியார் அச்சகத் தாருக்கும், படங்களைத் தெளிவாகவும் எமது விருப்பினுக்கமையவும் தயாரித்துதவிய ''போட்டோ ஸ்ரீ'', ''ஞானம்ஸ்'' நிறுவனத்தாருக்கும் எமது நன்றி.


இம் மலர், இவ் வித்தியாலய வரலாற்றில் ஒரு கன்னிப் படைப்பு. தவறு களுக்கு மன்னிப்புக் கோருகிறோம்.


தம் வெளியீடுகளை எமக்கனுப்பிக் கௌரவித்த சகோதர பாடசாலைகளுக்கும் எம் நன்றி.


ஆ

# அதிபரின் அறிக்கை

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் பேணிக்காக்கும் இணுவையூரில் அந்நியராட்சிக் காலத்தில் கிறிஸ்தவம் தலைதூக்க சைவம் தன்நிலை குன்றத் தொடங்கியது. சைவச் சிறுர்கள் கிறீஸ்தவ பாடசாலைகளில் கிறீஸ்தவ சூழ்நிலையில் கல்வி புகட்டப்பட்டமையினுல் சைவஅறிவு குன்றியதோடல்லாமல் மதமாற்றமும் தலைதூக்க ஆரம்பித்தது. இதனைக் கண்ணுற்ற சைவப்பற்று மிகுந்த அவ்வூர்; சைவப் பெரியார்கள் மனம் புழுங்கி உணர்ச்சி மீதூரப்பெற்று, தம் சிறுர்கள் சைவச்சூழலில் சிறப்புறக் கல்வி பயில வேண்டுமென்ற திடசங்கற்பத்துடன் அயராது உழைத்து இப்பாடசாலையைத் தாபித்தனர்.

## தாபகர்கள்

இப்பெரு முயற்சி நிறைவெய்தத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து அரும்பணியாற்றியோர் வரிசையில் முதலிடம் வகித்தோர் மும்மூர்த்திகளென விளங்கிய அமரர், திரு. சி. அப்பாக்குட்டி வைத்தியர் அவர்கள, அமரர், திரு. சி. மயில்வாகனம் அவர்கள், அமரர், திரு. க. பொன்னையா அவர்கள் ஆகிய மூவருமாவர். திரு. மு. அப்பாக்குட்டி அவர்கள் தமது காணியையே அன்பளிப்புச் செய்து ஒரு கொட்டிலும் அமைத்துக் கொடுத்து 1930-ம் ஆண்டு ஆனி உத்தரத்தன்று இப்பாடசாலையை உருவாக்கினுர். [முப்பது பிள்ளைகளுடன் ஆரம்பித்த இப்பாடசாலை அவர் பெயர் நிலைக்குமுகமாக இக்கிராமத்தவரால் "அப்பாக்குட்டிப் பள்ளிக்கூடம்" என்று அழைக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் திரு. சின்னத்தம்பி அவர்கள் அதிபராக அரும்பணியாற்றிப் பாடசாலையை முன்னேற்றம் காணச் செய்தார். முன்னேறி வருவது கண்டு பெருமிதம் கொண்ட திரு. க. பொன்னையா அவர்கள் ஊரவர்கள் பலரின் உதவியுடன் பாரிய கட்டடம் ஒன்றைக் கட்டுவித்தார். அவரது திட்டம் மேன்மாடி ஒன்றையும் கட்டிப் பூரணப்படுத்துவதை நோக்கமாகக கொண்டது. அது இன்னும் பூர்த்தியாகவில்லை. திரு. சி. மயில்வாகனம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது சிங்கப்பூர் வரை சென்று பாடசாலைக்கெனப் பணம் சேகரித்து ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கியதுமல்லாமல் பாடசாலையின் நிதிநிலையை ஸ்திரப்படுத்தினுர். இமூவரதும் மனப்பூர்வமான கனவுகளுக்கியைய இப்பாடசாலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நனவாகி வருகின்றது. இவர்களின் சேவையைப் பல்லாண்டு நினைவு கூருமுகமாகப் பாடசாலை இல்லங்கள் இம்மூவரதும் பெயர்தாங்கி இயங்குகின்றன.

## கடந்தகால அதிபர்கள் — ஆசிரியர்கள்

இந்நிறுவுனர்களின் நோக்கம் நிறைவேற அதிபர்களும், ஆசிரியர்களும் மனமுவந்து ஒத்துழைத்தனர். திரு. ஆ. செல்லப்பா, திரு. வை. நடராஜா ஆகிய இரு அதிபர்களினதும் நீண்ட சேவைக் காலத்தில் பாடசாலை க. பொ. த. (சாதாரணம்) வரை வகுப்புகளையுடையதாக மிக உன்னத நிலையை அடைந்தது எனலாம். பகிரங்கபரீட்சைகளில் மிகத் திறமையான பேறுகளைப் பெற்றுக் காட்டியதோடு சமயத்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் ஒழுக்கம் கட்டுப்பாடு போன்ற விஷயங்களிலும் மற்றைய பாடசாலைகளுக்கு இப்பாடசாலை ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. திரு. வை. நடராஜா அவர்கள் இளைப்பாற, திரு. சி. சரவணமுத்து, திருமதி. சோ. இரத்தினம், திரு. கே. வைத்தியநாதசர்மா, செல்வி. நா. சிவசுப்பிரமணியம் ஆதியோர் முறையே அதிபர்களாக இருந்து பாடசாலையை மிகத் திறம்பட நடாத்தி, மேலும்மேலும் உயர்நிலையடைய வழிகோலி வைத்தனர். கடந்த காலத்தில் இங்கு கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியர்களும் உயர் பதவிக்காக இடமாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களும் திணைக்களத்தினுல் இடமாற்றம் செய்யப்பட்டு வேறுபாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களும் எமது பாடசாலைக்கு ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்து பாராட்டுகின்றேம்.

## வித்தியாலய வளர்ச்சி

இன்று இப்பாடசாலை ஏறக்குறைய எழுநூறுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ளது. எமது பாடசாலைப் பிள்ளைகள் க. பொ. த. சாதரணப் பரீட்சையில் சித்தியெய்தியதும் உயர் கல்விபெற மற்றும் கல்லூரிகளுக்கு இடம் தேடி அலைய வேண்டி ஏற்பட்டது. இதனைநிவர்த்தி செய்ய இவ்வருடத்திலிருந்து கலை, வர்த்தகம் ஆகிய இருபிரிவுகளையும் கொண்ட க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் வித்தியாலயம் 1- C தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. காலப்போக்கில் கணித விஞ்ஞான உயர்தரவகுப்புக்களும் தொடங்கப்பட்டுவிடும். என்பதற்கு ஐயமில்லை. எமது பாடசாலையில் க. பொ. த. சாதாரண வகுப்புக்களில் நூற்றுக்கும் சிறிது மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி பயிலுதல், இவ்வட்டாரத்திலுள்ள எமது தரத்திலுள்ள வித்தியாலயங்கள் எதுவும் பெருமிதமடைய முடியாத ஒரு விடயமாகும்.

எமது வித்தியாலயத்திற்கு இடவசதி ஒருபெரும் இடர்ப்பாடாகும். இதனைப் போக்க முன்னைய பெற்றோர் ஆசிரியர் சங்கமும் ஊர் அபிமானிகளும் கொடைவள்ளல் 'கல்கி' அவர்களும் கல்வித்திணைக்களமும் அளித்த உதவிகளின் பேறுக விஞ்ஞான கூடமாக ஓர் இருமாடிக் கட்டிடம் திருமதி சோ. இரத்தினம், பிரமஸ்ரீ கே. வைத்திய நாதசர்மா இருவரும் முறையே அதிபர்களாக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மில்க்வைற்தாபன அதிபர் சிவதர்ம வள்ளல் திரு க. கனகராஜா அவர்கள் நீரிறைக்கும் யந்திர மொன்றையும் மின்வசதிகளையும் செய்துதர பொதுமக்கள் நீர்த்தொட்டி யொன்றை அமைத்துத் தந்தது எமது பாடசாலை மாணவர்க்கு என் றென்றும் மறக்க முடியாத ஓர் பேருதவியாகும். எமது பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாமை பெரும் குறையாக இருந்தது. அக்குறையை நீக்க எமது (கொழும்புக்கிளை) பழையமாணவ சங்கம் பல ஆயிரம் பெறுமதியான காணி வாங்கி எமக்குதவியது. அதனைத் தொடர்ந்து அரசாங்கமும் இன்னொரு காணியை சுவீகரித்து எமக்கு உதவியது. அக்காணிகள் பாடசாலை அபிவிருத்திச்சபையினராலும் எமது வித்தி யாலய ஆசிரிய மாணவ மாணவிகளாலும் சிரமதானப் பணி மூலம் திருத்தியமைக் கப்பட்டு தேவை ஒரளவு' பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கென உதவிய அனைவரை யும் பராட்டுகின்றோம்

அரசாங்க பாடத்திட்டத்திற்கமைய தொழில் முன்னிலைக் கல்விக்கென நாம் நெசவு, மனையியல், வணிகம் ஆகியவற்றை எமது மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றோம். தாப கர்களின் பெரு நோக்கிற் கமைய இங்கு சமயக்கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்துள் ளோம். சமய விழாக்களும் சமய தினங்களும் தவறாது கொண்டாடப்படுகின்றன. இசை நடனம், சித்திரம் முதலியவற்றிலும் எமது பாடசாலை குறிப்பிட்ட தரத்தை நிலைநாட்டி வருகின்றது. விளையாட்டுத்துறையில் எமது பாடசாலை மாணவ மாணவிகள் இல்ல அடிப்படையில் பெரும் சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். நாம், சைவமன்றம், மாணவ இலக்கிய மன்றங்கள், ஆங்கில மன்றம் எனப் பல மன்றங்கள் செயல்பட வழிவகுத் துள்ளோம். க. பொ. த உயர்தர வகுப்புக்கென தனியொரு மன்றமும் இயங்குகிறது.

## ஆசிரியர் குழு

இன்று எமது வித்தியாலயத்தில் சுமார் இருபத்தைந்து ஆசிரியர்கள் கடமை யாற்றுகின்றனர். போதிய அனுபவமும் அறிவும் நிறைந்த திரு. M. S. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் கணிதத்திற்குப் பொறுப்பாக இருப்பதோடமையாது பாடசாலை யில் நடக்கும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பாடசாலை ஆசியர்கள், மாணவர்கள் எல்லோ ரதும் மனதைக் கவரக்கூடிய வகையில் பங்கு பற்றச் செய்து ஒத்துழைப்பையும் பெற்றுத் தானும் உழைப்பதுடன் எமது வித்தியாலயம் கல்லூரி நிலையையடையவேண்டுமென்ற அவாவுடன் இயங்கி வருகின்றார். திருவாளர் க. நடராசா அவர்கள், பெற்றார் ஆசி

ரியர் சங்கத்திலும் தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலும் பொருளாளராக விருந்து பாடசாலையில் இடம் பெறுகின்ற எந்தவொரு ஆக்கப்பணிக்கும் நிதிப் பொறுப்பாளராகவும் பாடசாலை பொதுமக்கள் இணைப்பாளராகவும் தொண்டாற்றி வருகின்றார். திருவாளர் த நடராசா அவர்கள் மேல் வகுப்புக்களில் தமிழ், சமயம் திறம் படக் கற்பிப்பதோடு மாத்திரமன்றி மாணவர்களின் உடற் பயிற்சி விடயத்திலும் அதி கம் ஈடுபட்டுத் தொண்டாற்றுகின்றார். அவரது பெருமுயற்சியினாலேயே இம்முறை மானிப் பாய் வட்டாரத் தேகப்பயிற்சிப் போட்டியில் எமது பாடசாலை முக்கிய இடத்தைப் பெற்றது. திருவாளர் ச. செல்வநாயகம் அவர்கள் சமயத்துறையின் பொறுப்பாளராக இருந்து மேல்வகுப்புக்களில் சமயம் கற்பிப்பதோடு சமயபாடப் பரீட்சைகள், குரு பூசை கள், நவராத்திரி விழா ஐப்பசிக்கடைசி வெள்ளியன்று சமய தீட்சை வைப்பித்தல், விஜய தசமியில் அன்று குழந்தைகளுக்கு வித்தியாரம்பம் செய்தல் போன்ற விடயங்களைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றார். சென்ற ஆண்டு க. பொ. த சாதாரணப் பரீட் சையில் எம் பாடசாலை மாணவர்களிற் பலர் சமயபாடத்தில் திறமைச்சித்தியும் விசேட சித்தியும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. திரு. சி. சிவகுமாரன் அவர்கள் எந்த வேலையை யும் மனந்தளராமல் துடுக்காகச் செய்து முடிக்கக் கூடிய இளஞ்செயல் வீரர். அத்துடன் செயல் திறனும் ஆற்றலும் படைத்த திருவாளர்கள் த. சண்முகநாதன், சி. லோகேஸ் வரன், கமலநாதன், கணேசராஜா ஆகியோர் பாடசாலை அதிபருக்கோ மற்றும் வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்கோ எவ்வித சிரமமும் ஏற்படாது பாடசாலையின் வழமையான வேலைகளோடு புறவேலைகளாகிய சுற்றுலா, விளையாட்டுப்போட்டி, பொருட்காட்சி கலைவிழா, சமய விழா ஆகியவற்றிலும் திறம்படச் செயல்பட்டு வருகின்றனர்.

எமது துணை அதிபர் செல்வி நா. சிவசுப்பிரமணியம் அவர்கள் சில காலம் பாட சாலை அதிபராகக் கடமையாற்றி அனுபவம் பெற்றவர். நிர்வாகப் பொறுப்பை திருப்தி கரமாக நடாத்துவதோடு அவருக்கென ஒதுக்கப்பட்ட வகுப்பையும் திறம்படக் கவனித்து வருகின்றார். திருமதி உ. தியாகராஜா அவர்கள் மாணவர்களைக் கட்டுப்படுத்துவதில் திறமைமிக்கவராக விளங்குவதோடு விஞ்ஞான பாடம் போதிப்பதிலும் முதன்மை யிடம் பெறுகின்றார். திருமதி க. இராசையா, திருமதி பு. அரியராஜா, திருமதி தி. ஹென்றி ஆகிய மூவரும் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள். க. பொ. த. சாதா ரண, உயர்தர வகுப்புக்களில் இவர்களின் சேவை அத்தியாவசியமாகின்றது. திருமதி. ச. சிவபாலசங்கம், திருமதி. சி. இராசரெத்தினம் செல்வி. விஜயலட்சுமி ஆகியோர் சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாலர் வகுப்புக்களில் தங்கள் திறமைகளைக் காட்டி அரும் பணியாற்றுகிறார்கள். பாடசாலைப்புற வேலைகளிலும் அவர்களது ஊக்கம் பாராட்டு வதற்குரியது. திருமதி ச. வேலாயுதபிள்ளை நீண்டகாலம் இப்படசாலையில் ஆங்கில ஆசிரியையாகச் சேவை செய்வதோடு; மாணவர்களின் அன்புக்கும் பாத்திரமாக விளங்கு கின்றார். இவர் கடமையே கண்ணுயிருப்பார். திருமதி கீதா செல்லத்துரை விஷேட பயிற்சி பெற்ற ஓர் ஆங்கில ஆசிரியை. என்றும் எங்கள் அவசிய தேவையை முன் னிட்டு வரைதல் வீட்டுப்பணி போன்ற பாடங்களையும் கற்பித்து வருகின்றார்கள். சங் கீத ஆசிரியையாகிய திருமதி கி. செல்வராஜா அவர்கள் எங்கள் பாடசாலையில் சேர்ந்த குறுகிய காலத்தில் க. பொ. த சதாரணப் பரீட்சையில் அதிகமாணவிகள் அதிதிறமைச் சித்தியும், விசேடசித்தியும் பெறச் செய்தமை பாராட்டுதற்குரியது. திருமதி இ. செல்லத்துரை நெசவு ஆசிரியையாகப் பணிபுரிந்து, மெச்சத் தகுந்த பெறுபேறு களைப் பெறச் செய்வதோடு மாணவிகளின் ஒழுக்கம் கட்டுப்பாடு போன்ற விடயங்களி லும் மிகவும் அக்கறை செலுத்தி வருகின்றார். எங்கள் பாடசாலைக்கு மிக அத்தியா வசியமென கருதப்பட்ட க. பொ. த உயர்தர வர்த்தக வகுப்புக்களில் வர்த்தக பாடங் களைச் செவ்வனே கற்பிக்கக் கூடிய வர்த்தக ஆசிரியராகிய திரு. பொ. கமலநாதன் அவர்கள் கல்வித்திணைக்களத்தால் எங்கள் பாடசாலையில் நியமிக்கப்பட்டமை போற்று தற்குரியது, எங்கள் ஆசிரியர்களில் ஒருவராகிய திரு. பாலநாதன் அவர்கள் வட்டாரக் கல்வி அதிகாரியின் உதவியாளராகக் கடமை யாற்றுகிறார் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

## எமது தேவைகள்

எமது வித்தியாலயத்தில் தேவைகள் பலவுண்டு. தற்பொழுது எமது வித்தியாலயத்தை அடுத்துள்ள விளையாட்டு மைதானம் பரப்பளவில் சிறியது. சிறப்பான விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்த அது போதியது அல்ல.

ஆண்டு தோறும் நடாத்தப்படும் கலைவிழாக்கள் செவ்வனே நடாத்தப்படுவதற்கு திறந்த வெளி அரங்கு ஒன்று தேவை.

எமது நோக்கம் இவ் வித்தியாலயம் க. பொ. த. உயர்தர வகுப்புக்களுக்கும் விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய வசதிகளைக் கொண்ட இன்னோர் கட்டிடம் அமைத்தல் ஆகும்.

க. பொ. த. உயர்தர வகுப்புக்களுக்கென நூல் நிலையத்தினை விஸ்தரித்து இட வசதி கொண்ட இன்னொரு தனிக்கட்டிடத்தையும் அமைக்கவேண்டியிருக்கிறது.

எமது வித்தியாலயம் பெண்பிள்ளைகளைப் பெரும்பான்மை மாணவர்களாகக் கொண்டுள்ளது. அவர்களுக்குத் தேவையான இயற்கைவசதிக் கூடமொன்றும் அமைக்க வேண்டி இருக்கிறது.

இத் தேவைகளைப் பூர்த்தி செய்தற் பொருட்டு பெரியார்களினதும் நலன் விரும்களினதும் பேருதவிகளைக் கோருகின்றோம்.

## நன்றியுரை

இறுதியாக எமது பாடசாலையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு கடமைகளைச் செவ்வனே புரிவதற்கு இது காறும் உதவி புரிந்த, இப்போது உதவி புரிகின்ற இனி மேலும் உதவி புரிய இருக்கின்ற அனைவருக்கும் நன்றிகூற நான் கடமைப்பட்டவன். நிர்வாகத் துறையிலும் பாடசாலை சம்பந்தமான வேறுதுறைகளிலும் தேவையான விடத்து எனக்கு புத்திமதி நல்கியும் உதவிகளைப் புரிந்தும் வந்த கல்வி அதிகாரிகளுக்கு எனது நன்றியை முதற்கண் செலுத்துகின்றேன். விசேடமாக தற்போதைய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் அவர்களின் பேருதவி என்றென்றும் நிலையானது. வடமாநிலக் கல்வித்திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர்களும் கல்வித் திணைக்களத் தாரும் அளித்துவரும் உதவிகள் எம் நெஞ்சை விட்டகலா. இப்பாடசாலையின் உயர்ச்சிக்கு எவை எவை செய்யப்பட வேண்டுமோ அவை அவற்றை உடனுடன் நிறைவேற்றி உதவிபுரியும் எமது பாராளுமன்ற உறுப்பினராகிய திரு. வி. தருமலிங்கம் அவர்களுக்கும் நாம் என்றென்றும் கடப்பாடுடையேம்.

எமது பாடசாலை அபிவிருத்திச் சபை வித்தியாலய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது செயல்பட்டு வருகின்றது. க. பொ. த. (உயர்தரம்) வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் ஆற்றிய பங்கு விசேடமாகக் குறிப்பிடத் தக்கது. அவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எமது வித்தியாலய வளர்ச்சிக்குத் தமது பூரண ஒத்துழைப்பைத் தந்து உதவுகின்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி

க. இரத்தினம்
அதிபர்

# முப்பதிலிருந்து எண்பதுவரை . . .

ச. அ. சிவரத்தினம்
இளைப்பாறிய ஆசிரியர்

இவ்வித்தியாலயம் சைவசமய விருத்தியில் பேரார்வம் கொண்ட இணுவையூர் மக்களின் பெருமுயற்சியால் பிரபல வைத்தியர் திரு. முருகேசு அப்பாக்குட்டி அவர்களின் வீட்டு முன்புறத்தில் அவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூன்று பரப்பு நிலத்தில் கொட்டகையாக அமைக்கப்பெற்று 1930 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 2 ஆம் நாளன்று கணித ஆசிரியர் திரு. ஆ. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் மூன்று ஆசிரியர்களுடனும் 26 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாண்டு ஆவணி மாதத்திலேயே 5 ஆசிரியர்களும், 73 மாணவர்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டு வளர்ச்சியுற்றது.

1930 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 3 ஆம் நாள் அதிபராக திரு. ஆ. செல்லப்பா அவர்கள் நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் இணுவையூரில் சிதம்பரநாத உடையார் மகனாக அவதரித்தவரும், சிங்கப்பூரில் அரசாங்க அலுவலராக இருந்தவருமான திரு. சி. மயில்வாகனம் அவர்கள் தொடர்ந்து மூன்று வருடங்களாக ஆசிரியர்களுக்கான வேதனத்தை முன்வந்து உதவினர். அன்னர் பாடசாலையின் பொது முகாமையாளராகவும், திரு. க. கதிர்காமசேகரம்பிள்ளை அவர்கள் நிருவாக முகாமையாளராகவும் பொதுமக்களால் நியமிக்கப்பட்டனர்.

பாடசாலைக்கான வருடாந்தப் பரீட்சை முதன் முதலாக 27-3-31ல் நடாத்தப்பட்டு, 1933ல் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதியப்பட்டது. 1935ல் ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்க ஆரம்பிக்கப்பட்டது. 1936ல் மதியபோசனம் வழங்கப்பட்டது. 1937ல் வித்தியாதிபதி கௌரவ. றெபிசன் அவர்கள் பாடசாலையைத் தரிசித்து கனிஷ்ட, சிரேட்ட வகுப்புகள் வைப்பதற்கு அனுமதியளித்தார். 1938 ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்கள் பகிரங்கப் பரீட்சைக்குத் தோற்றினர்.

பாடசாலையிலுள்ள தற்போதைய பெரிய கட்டிடம், 1938ல் கட்டப்பட்டது. இப்பாடசாலை காலந்தோறும் மாவட்டரீதியிலும், வட்டாரரீதியிலும் நடைபெறும் பொருட்காட்சிகள், சங்கீத விழாக்கள் ஆகியவற்றில் முக்கியபங்கு எடுத்துவந்துள்ளது. 1943, 1944 ஆம் ஆண்டுகளில் வலிகாமம் வடக்கு பகுதி சுகாதார கல்விப் பொருட்காட்சி இப்பாடசாலையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
1948ல் இல் அதிபர் திரு. ஆ. செல்லப்பா அவர்கள் மறைவுக்குப் பின்னர் திரு. வ நடராசா அவர்கள் அதிபராகவும், 1953 ல் முகாமையாளர் திரு. க. பொன்னையா அவர்கள் மறைவுக்குப்பின் அவர் சகோதரர் திரு. க. மார்க்கண்டு அவர்கள் முகாமையாளராகவும் கடமையாற்றினர்கள். இக்காலத்தின் அதிபர் திரு. வ. நடராசா அவர்களின் முயற்சியினுல் பலதுறைகளிலும் பாடசாலை சிறப்பாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

1960 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1 ஆம் திகதி இவ்வித்தியாலயம் அரசு உடைமையாக்கப்பட்டது. பாடசாலை அரசுடமையாக்கப்பட முன்னர் பாடசாலையின் வளர்ச்சி கருதி மாணவர்களின் விளையாட்டிற்காக திரு. அ. பொன்னம்பலம், திரு. க. குருசாமி

ஆகியோர் தமது நிலத்தை தற்காலிகமாக வித்தியாலயத்திற்கு உதவினர். பாடசாலை அரசுடமையாக்கப்பட்டதன் பின்னர் பாடசாலையின் வளர்ச்சிகருதி மேற்குறிப்பிட்ட இருவரும் தமது மூன்று பரப்பு நிலத்தையும் வித்தியாலயத்திற்கே உரித்தாக்கினர்.

1970 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் அதிபர் திரு. வ. நடராசா அவர்கள் இளைப்பாற திரு. சி. சரவணமுத்து அவர்கள் அதிபராகவும், 1971 தை மாதம் தொடக்கம் திருமதி சோ. இரத்தினம் அவர்கள் அதிபராகவும், 1971 பங்குனி தொடக்கம் பிரம்மஸ்ரீ. கா. வைத்தியநாயசர்மா அவர்கள் அதிபராகவும் கடமையாற்றினர். திருமதி சோ. இரத்தினம் அவர்களின் காலத்தில் தற்போதைய மாடிக்கட்டிடத்திற்கு அத்திவாரமிடப்பட்டது. பிரம்மஸ்ரீ கா. வைத்தியநாதசர்மா அவர்களின் காலத்தில் கீழ் கட்டிடம் முடிக்கப்பட்டது. 1973 இல் தற்போதைய அதிபர் திரு. க. இரத்தினம் அவர்கள் கடமையேற்ற பின்னர் மேற்கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

மாடிக்கட்டிடத்திற்கு அரச உதவியாக ரூ 15000/- மட்டுமே கிடைத்தது. மிகுதி பெற்றோர்கள், நலன்விரும்பிகள் பழைய மாணவர்கள் உதவியுடன் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கட்டடத்தை கட்டி முடித்தது. பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பராளுமன்ற உறுப்பினர் அவர்கள் அன்று தொட்டு இன்றுவரை உழைத்து வருகின்றார்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு நிலம் பற்றாக்குறையாக இருப்பதைக்கண்ட கொழும்பு பழையமாணவர் சங்கத்தினர் பல ஆயிரம் ரூபாவுக்கு ஒரு காணியை வாங்கி வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்தனர்.

1979 இல் மேலும் அரசு உதவியுடன் வித்தியாலயத்திற்கு காணி வாங்கப்பட்டது. இவ்வாண்டு க. பொ. த. (உயர்தர) வகுப்புகள் (கலை வர்த்தகம்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மேலும் வித்தியாசாலை வளர்ச்சியடைய க. பொ. த (உயர்தர) விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பிக்க அதிபர், ஆசிரியர்கள் வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் முயற்சி செய்து வருகின்றார்கள்.

---

நீதிபதிக்கு நான்குவகைக் குணங்கள் உள. பொறுமையுடன் செவிசாய்ப்பது; புத்திசாலித் தனமாகப் பதில் அளிப்பது; தீர்க்கமாக ஆலோசனை செய்வது; நீதி மார்க்கத்திலிருந்து சற்றும் விலகாது தீர்ப்பு அளிப்பது.

— சாக்கிரட்டீஸ்

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை 1980 இல் பொன்விழா கொண்டாடும் நேரத்தில் அபிவிருத்திச்சங்கம் தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

எமது வித்தியாலயம் உதவி நன் கொடைபெறும் பாடசாலையாக இருந்த நேரத்தில் முகாமையாளர்களுடனும் அதிபர், ஆசிரியர்களுடனும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் பூரணமாக ஒத்துழைத்து பாடசாலை வளர்ச்சிக்கு தன்னாலான உதவிகளைச் செய்து வந்தது.

பாடசாலையை அரசினர் சுவீகரித்தபின்னர் பெற்றோர் ஆசிரியர்சங்கம் பழைய மாணவர்சங்கம் ஆகியன ஆசிரியர்களுடன் சேர்ந்து வித்தியாலய வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு உழைத்து வந்தன. பாடசாலைக்கு விஞ்ஞானகூடம் அமைப்பதற்கு அரசின் உதவியுடன் பெற்றோர் ஆசிரியர்சங்கம் ரூபா. 65, 000 க்கு மேல் செலவு செய்து மாடிக் கட்டிடத்தை அமைத்தது. அரசு உதவி ரூபா 15, 000 மட்டும் கிடைத்தது. பிரபல வர்த்தகர் திரு சி. சின்னத்துரை அவர்களின் உதவியுடனும், ஆசிரியர்கள் பொதுமக்கள், பழைய மாணவர்கள், உதவியுடனும் மிகுதிப்பணம் சேர்க்கப்பட்டது. கொழும்பு பழையமாணவர் சங்கம் நிலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பல ஆயிரம் ரூபா பெறுமதியான காணியை வாங்கி அன்பளிப்பு செய்துள்ளது. 1961 ஆம் ஆண்டு தொடக்கம் 1978 ஆம் ஆண்டுவரை பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம், என இயங்கி வந்த சங்கங்களானவை 1979 தொடக்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்ற பெயருடன் இயங்கி வருகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலை உள்ளக நிருவாகத்தில் தலையிடாது வித்தியாலத்தின் வளர்ச்சிக்காகஅதிபர், ஆசிரியர்கள், ஆகியோருடன் சேர்ந்து உழைத்துவருகின்றது. வித்தியாலயத்தின் வளர்ச்சிகருதி அபிவிருத்திச்சங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு மானிப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் தந்து வருவதோடு, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதியும் ஒதுக்கியுள்ளார்.

மாணவர்களின் உயர்கல்வி வசதிக்காக வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அபிவிருத்திச் சங்கம் எடுத்த முயற்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிருவாகத்தினரும் தந்த உதவிகளுக்கு அபிவிருத்தி சங்க சார்பில் நன்றியைத் தெரிவிப்பதோடு மேலும் தொடர்ந்து எமது பாடசாலை வளர்ச்சிக்கு உதவி புரிய வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

நிருவாகக் குழு

**20. 6. 1980** பாடசாலை அபிவிருத்திச் சங்கம்




அமரர் ஆ. செல்லப்பா அவர்கள்

★


**கடந்தகால**

**அதிபர்கள்**

★



அமரர் வ. நடராசா




அமரர S. சரவணமுத்து



திருமதி S. இரத்தினம்



பிரமஸ்ரீ K. வைத்தியநாத சர்மா



1980 - வட்டார உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்ற எமது மாணவர்

# கீதை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

சந்ததமும் எனது செயல் நினது செயல் என்கிறார் தாயுமானவர்.

சரீரத்தின் செயல், ஆன்மாவின் செயல். ஆன்மாவின் செயல், பரமான்மாவாகிய கடவுளின் செயல் ஆகவே செயல்கள் அனைத்துக்கும் மூல கருத்தா பரமான்மாவாகிய கடவுளேயாம். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது'

ஆன்மாவின் தூண்டுதலின்றிச் சரீரம் எதனையுஞ் செய்யாது. அவ்வாறே பரமான்மாவின் தூண்டுதலின்றி ஆன்மா எதனையுஞ் செய்யாது; செய்ய இயலாது.

அ. சரீரம் சடம்: அறிவற்றது. ஆன்மாவின் செயலுக்கு அது கருவி.

ஆ. ஆன்மா சித்து அறியுந்தன்மை யுள்ளது. ஆயினும் தானாக ஒன்றையும் அறியாது. பரமான்மாவின் உபகாரத்தால் அறிவது; கண் போல, ஒளியின் உபகாரத்தாற் காண்பது கண்.

இ. இது, இச்சை செயல்களுக்கும் பொருந்தும்.

அ. ஆன்மாவுக்குச் சரீரமாகிய சடம், கருவி. அவ்வாறே பரமான்மாவுக்கு ஆன்ம சித்துக் கருவியாயிருக்கற்பாலது.

ஆ. சரீரமாகிய கருவியாற் பயன் பெறுவது ஆன்மா; அவ்வாறு ஆன்ம கருவியாற் பரமான்மா பயன் பெறுவதில்லை. கருவியா யிருந்து பயன் பெறற் பாலது ஆன்மாவே, இரு கருவிகளுக்கும் இவை தம்முள் வேற்றுமை கருவியை உபயோகித்தும் கவிருயாயிருந்தும் பயன் பெறுவது ஆன்மா.

அ. சரீரம் சடமாதலின் தான் கருவியாயிருத்தலை அறியாது. அது அதன் இயல்பு; குற்றமன்று; குணம்.

ஆ. ஆன்மா சித்தாதலின், தான் பரமான்மாவின் கருவி என்பதை அறியற்பாலது, அறிகின்றலது, அறியாமை குற்றம் இயல்பான குணமன்று.

இ. ஆன்மா, தான் கருவியாதலை அறியாமை மாத்திரையின் அமையாது தன்னால் நிகழுஞ் செயலுக்கு 'தானே கருத்தா' என்றும் எண்ணுகின்றது. இது குற்றத்தின் மேற் குற்றம்; மகாகுற்றம் உய்தியில் குற்றம்.

அ, ஆன்மாவுக்குக் கருவியாகிய இந்தச் சரீரம் எப்படிக் கிடைத்தது. சரீரத்தைப் பயன்படுத்தற்குரிய சக்தி எங்கிருந்து வந்தது. என்ற விசாரத்தில் ஆன்மா ஈடுபடுவதில்லை. அதனால் மகாகுற்றத்துச்குப் பாத்திரம் ஆகின்றது.

ஆ. ஆன்மாவுக்கு அருமந்த புத்தியைக் கடவுள் அருளியிருக்கின்றார். புத்தியைப் ''பாவியாம்'' புத்தி என்கின்றது சித்தியார். பாவி — பாவிப்பது ஆன்மாவைப் பாவிக்கச் செய்வது.

இ. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடன். என்கின்றது கொடிக்கவி. ஒன்று — ஆன்மா ஒளி — அருள்.

1. ஆன்மா அறியாமை இருளிற் கிடக்கின்றது. இருளிலிருந்து விலகும் வரை 'நான் கருத்தா' என்கின்ற பாவனை அதனை விட்டு விலகுவதில்லை. 'பாவியாம் புத்தி' அப்படிப் பாவனை செய்யச் செய்கின்றது.

2. ஆன்மா ஒளியாகிய அருளை அணுகும் போது அந்தப் 'பாவியாம் புத்தி' முத்திப் பயன் கொள்ளும் பண்பிற்று 'ஆகி மிளிரும்' அப்பொழுது ஆன்மா தான் பரமான், மாவின் கருவியாதலை உணர்ந்து நாணும். 'என் செயலாவது யாதொன்று மில்லை என்ற ஞானம் உதயமாகும். அஃது உதயமாக, செய்யாமை என்ற நிலை கைகூடும்.

3. செய்யாமை செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

4. இறைவனிடம் பெறும் பேறுகளுள் ஒப்புயர்வற்ற பேறு செய்யாமை என்கின்ற பேறு. அது முத்திப்பேறு. செய்யாமை பிறந்தவர்கள் 'சும்மா' இருப்பவர்கள். அவர்களை இறைவன் எடுத்துச் சுமப்பான்.

''கிடைக்கத் தகுமோநற்
கேண்மையருக் கல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று''

— திருவருட்பயன்

அ. செய்யாமை பிறந்தவர்கள் சிலசமயம் செயல் செய்வதுண்டு. அச்செயல், செய்விப் பானுகிய இறைவன் செயலேயாம். சண்டீசர் தாதையைத் தாளறத் தடித்தார் அச்செயல் செய்விப்பான் செயலேயாம்.

ஆ. சிலசமயம் செய்யாமை பிறந்தவர்களுக்குத் தெரியாமலே, செயலொன்று நடந் திருக்கும், அச்செயலும் செய்விப்பான் செயலேயாம், சாக்கியர் சிவலிங்கத்தைப் பூசித்தார். கன் மலரால் அர்ச்சனை யொன்று நடந்திருந்தது.

இ. மேற்குறிப்பிட்ட இருவகைச் செய்யாமையையும் செயலிற் செயலின்மையும் செயலின்மையிற் செயலும் என வகுத்துச் செப்புகின்றது கீதை.

[4ம் அத். 18ம் சுலோகம்]

ஈ. செய்யாமை பிறந்தவர்களின் கரணங்களைப் பசு கரணங்கள் என்று சொல்லுவ தில்லை. பசு கரணம் சிவகரணம் ஆனவர்கள் அவர்கள். அவர்களைப் 'பேயொன் றுந் தன்மை' பிறந்தவர்கள் என்கின்றது திருவருட்பயன், அவர்கள் தம்மை இறை வனுக்குக் கருவியாக்கி, எவ்வித பொறுப்புமின்றி, தேனுண்டவண்டு போலச் சிவத்தை அநுபவித்துக் கொண்டு இறுமாந்திருந்திருப்பார்கள். அதுவே பேரின்பம். பரமசுகம்.

வேற்படை தவிர்ந்த பதினொரு படைகளும் உருத்திரர்கள். அவர்கள் சுப்பிரமணிய சுவாமியின் திருக்கரங்களிலிருந்து தாம் கருவியாயிருத்தற்குச் சாதகஞ் செய்பவர்கள்

''பார்த்தனுர் இரத மேறிப்
படைதனைப் பார்த்துச் சார்பைக்
கூர்த்த அம்பாலே எய்து
கொன்றர சாளேன் என்ருர்

சித்தியார்

பரமாத்மாவாகிய பார்த்தசாரதி சிரித்தான். பார்த்தன் — அருச்சுனன் அவன், 'நான் இது செய்வேன், நான் அது செய்யேன்' என்று செய்விப்போனும் செயல் களுக்கெல்லாங் கருத்தாவும் ஆகிய பகவானுக்குச் சொன்னல், அவன் சிரியாமல் வேறென்ன செய்ய முடியும்! ஆட்டுவோன் வாளா இருந்தாலோ!

பார்த்தனின் ஐம்புலக் குதிரைகளை ஒரு கையால் இறுகப் பற்றிக் கொண்டு அவன் மனக் குதிரையை 'சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின் பாலுய்ப்ப' தற்கு மற்றக் கையாற் சவுக்கை ஒச்சி, அவனறிவைத் தூய்மை செய்ய எத்தனை மாயா தந்திரங்கள் செய்து பார்க்கின்ருன், மாமாயனுகிய அந்தப் பார்த்த சாரதி. அவ்வாறு செய்தும் 'பாவியாம் புத்தி முத்திப் பயன் கொளும் பண்பைத் தலைப்பட்டதேயோ! செய்யாமை என்ற நிலையைப் பார்த்தன் எய்தி விட்டானே?

அ. செய்யாமையாவது செயல் சென்று முற்றுகின்ற முடிந்த இடமாம். செயல் கரு 'மம் எனப்படும். கருமத்தை ஆராய்ந்தது பூர்வமீமாஞ்சை. அது கரும மீமாஞ்சை எனவும் படும். தூய கருமத்துக்கு மூலவேர் தருமம். 'தருமத்தை அறிய ஆசை' என்று தொடங்குகிறது பூர்வ மீமாஞ்சை. அது செய்தவர் சைமினி. உத்தர மீமாஞ்சையாகிய பிரம மீமாஞ்சை எனப்படும். வேதாந்த சூத்திரஞ் செய்த வியாசரின் சீடர் சைமினி, உத்தர மீமாஞ்சை ஞானத்தை ஆராய்ந்தது.

ஆ. கருமம் ஞான நிமித்தம் கருமத்தின் தூய்மையில் ஞானம் உதயமாகும். அவ் வாறே கரும நிமித்தம் ஞானமென்றுங் கூறலாம். கருமத்தின் மூலமான தரு மத்தை அறிய எத்துணை ஞானம் வேண்டும்?

'செய்யாமை சித்திக்கின்ற முடிந்த ஞானத்துக்குக் கீழே கருமமும் ஞானமும் ஒன்றையொன்று பற்றிக் கொண்டு தூய்மையும் வளர்ச்சியும் எய்திக்கொண்டிருக்கும். இரண்டும் ஒன்றையொன்று விடாத இருபுரிக் கயிறேயாம்.

'வளர்ந்து செல்லும்' ஞானத்தையும் அதற்குபகாரமான தூய கருமத்தையும் இறுகப் பற்றிக் கொண்டு உயர்வதற்குப் பத்தி யென்னும் பசை இன்றியமையாதது. கருமம், பத்தி, ஞானம் மூன்றும் ஒன்றுபட்ட பிரஸ்தானத் திரயங்கள்; செய்யாமை விளைவிப்பவைகள்.

பூ பாரந் தீர்க்க உதித்தவன் கண்ணன், மகாபாரத யுத்தத்துக்கு அவனே மூல கர்த்தா 'பத்தூர் பெறுதே பாரதங்கை செய்த அத்தூதன்' கண்ணன் என்கின்ருர் ஆழ்வார். பத்தூராவது கொடுத்துத் தற்காலிக சமாதான மொன்று செய்ய விரும் பினன் துரியோதனன். ஐந்தூராவது தாரானுயின் ஐந்து வீடாவது பெற்றுச் சமா தானத்தை விரும்பினுர் தருமர். கண்ணனே குழப்பஞ் செய்து போரை மூளச் செய்து விட்டான். அன்றிப் போர்க் கருவிகளுள் பிரதானமானதொரு கருவியாகத் தன் சீடனும் அருமை மைத்துனனுமான அருச்சுனனைப் பயன்படுத்தவும் துணிந்துவிட்டான். அருச்சுனனே போர்முனையில் தான் கண்ணனுக்குக் கருவி என்பதை மறந்து போர்ச் செயலுக்கு 'நான் கருத்தா' என்ற நிலையில் தலை தூக்கினன்.

அந்தத் தலை யெடுப்பை - 'நான் கருத்தா' என்கின்ற தலையை — கொய்ய வேண்டிய தொரு நிலை கண்ணனுக்கு நேர்ந்தது.

மகாபாரதம் பதினெட்டுப் பருவம்; பாரதப் போர் பதினெட்டு நாள்; கண்ணனாகிய குருவுக்கும் அருச்சுனனாகிய சீடனுக்கும் நடந்த யுத்தம் பதினெட்டு அத்தியாயம்; அது கீதை.

கீதோபதேசம் பலமுகமாக நடந்தது. கண்ணன் தனது விசுவரூபத்தையுங் காட்டினான். எந்தப் பாட்டனை - எந்தக் குருவைக் கொல்லுவதற்கு அருச்சுனன் கூசினானோ அவர்களெல்லாம் முன்னமே கண்ணனால் கொன்று குவிக்கப்பட்டிருப்பதையும், அந்த விசுவரூபத்தில் தரிசிப்பானாயினான் அருச்சுனன். இறந்தவர்களுக்குத் தானா இனிப் பாணந் தொடுப்பது என்ற எண்ணமும் அவனுக்கு வந்தது கண்ணனே சகல செயல் களுக்குங் கருத்தா, தனக்கு எவ்வித பொறுப்புமில்லை யென்பதுந் தெரிந்தது. ஆயினும் தெளிவு பிறக்கவில்லை.

ஸ்ரீராமனின் கன்னிப் போர் தாடகையால் நிகழ்ந்தது. 'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைத்தான்'. அதனால் அவன் கை பாணந்தொடுக்கக் கூசியது. அப்பொழுது விசுவாமித்திரர் 'ராமா' 'ஆறிநின்றது அறனன்று' என்றார். உடனே இராமபாணம் தாடகையைப் பிளந்தது. 'ஐய நின்னுரை வேதமெனக் கொடு செய்கை யன்றோ அறஞ்செயும் ஆறு' என்று கூறி விசுவாமித்திரரிடம் மன்னிப்புக் கேட்டுக் குரு வாக் கிய பரிபாலனஞ் செய்தான் இராமன்.

இராமனைப் போலவே கண்ணன் கட்டளைகளை மேற்கொண்டு வேதந் தெரிந் தவனும் தருமமூர்த்தியுமாகிய கண்ணன் வழியில் நின்று பாரதப் போரைச் செய்து, குருவாக்கிய பரிபாலனஞ் செய்தான் அருச்சுனன்.

எந்தத் துரியோதனாதியர்களைப் பொடிபடுத்தக் கொதித்துக் கொண்டிருந் தானோ அவர்களெல்லாம் பூதூளியாய்ப் போனார்கள். அதனால் கொதி யடங்கி வெற்றிச் சுவை பிறக்க வேண்டும். பிறக்கவில்லை; அன்புக்குரிய பீஷ்மரை-அருமந்த குருவை இழந்த வனுக்கு எப்படி வெற்றிச் சுவை உண்டாகும்; போர் முடிந்தது. சோகம் தலை நிமிர்ந்தது.

ஸ்ரீராமனுக்குச் சில சமயங்களிற் செய்யாமை பிறப்பதுண்டு. மற்றொன்று எடுத்து நடத்துவது தெளிவாகத் தெரிவதுண்டு. அந்நிலை வாலி விஷயத்தில் இரா மனுக்குச் சித்தித்தது. வாலி 'யார் இது செய்தான்' என்று கொதித்தான். இராமன் அவன் எதிரில் தோன்றினான்.

கண்ணுற்றான் வாலி நீலக்
கருமுகில் கமலம் பூத்து
மண்ணுற்று வருவி லேந்தி
வருவதே போலும் மாலை

வாலி தன்னெதிரில் அந்த நாராயண மூர்த்தியையே தரிசித்தான்: வெறும் தசரத குமாரனை அவன் தரிசிக்கவில்லை. தன்னை ஊடுருவிய பாணத்தின் நுதியில் தருமதேவதை குடியிருப்பதையும் வாலி கண்ணாரக் கண்டான். பரிபூரண சரணாகதி எய்தினான்.

இராவண வதத்தின் பின் வீரகத்தி நீங்கச் சிவபூசை செய்தவன் இராமன். வீரகத்தி வீரனைக் கொன்ற பாவம், வாலி வதத்தின் பின் அப்படி ஒரு கழுவாய் செய்யாமை சிந்திக்கத்தக்கது.

அன்று இராமனுக்கு எய்திய நிலை செய்யாமை நிலை. அந்நிலை அருச்சுனனுக்குக் கைகூடியது என்று சொல்லுவது சாலாது.

பாரதப்போர் முடிந்தது. கண்ணன் மறைந்தான். துவாரகைக் கடல் கோட்பட்டது. அருச்சுனன் சோகமயமானன். தப்பியிருந்த சில பெண்களைத் தேரிலேற்றிக் கொண்டு, காட்டுவழியில் அத்தினபுரம் நோக்கி வந்தான் அருச்சுனன். இடையில் வேடர்கள் தடுத்து நிறுத்தி, அருச்சுனனுக்கு அடியும் கொடுத்துப் பெண்களையுங் கவர்ந்து சென்றார்கள். மகா பாரதம் நடத்திய அருச்சுனன் காண்டீபத்தை எடுக்க முயன்றான். அசைக்கவும் முடியவில்லை. 'ஓ' என்று அழுதான். வியாசர் தோன்றினர். அவருடைய கைகள், செயல்களனைத்துக்குங் கருத்தா பரமாத்மாவாகிய கண்ணனே, அவன் வந்த காரியத்தை முடித்துவிட்டுப் போய்விட்டான் என்பதைப் புலப்படுத்தின.

என் செயலாவது
யாதொன்றுமில்லை
சந்ததமும் எனது செயல்
நினது செயல்

என்று சொல்லும் நிலை அந்தச் சந்தர்ப்பத்தில் அருச்சுனன்பால் முளைகொண்டிருக்கும்.

துரியோதனதியருக்குத் தொடுத்த பாணமும், பீஷ்மர் ஆதியோருக்குத் தொடுத்த பாணமும் ஒன்றேதான், என்று அபேத உணர்ச்சி தலைப் பட்டு 'பகையார்' 'உறவு யார்' நானர் என்கின்ற விசாரவித்து வேடர்கள் அடித்த அடியாகிய உழவினல் பக்குவப்பட்டிருக்கும்.

பீஷ்மராதியோர்களுக்குப் பாணந் தொடுக்காததொரு நிலை, அஃதாவது நான் கருத்தா என்கின்ற நிலை, நிலைத்திருக்குமாயின் குறிப்பிட்ட பக்குவம் எவ்வாறு கைகூடும்! வேடர் கொடுத்த அடி கீதா உபதேசத்துக்கு உரஞ் செய்துவிட்டது. இந்த வேடர் பாடங் கற்பிக்கும் ஐம்புல வேடர் போலும், ''தான் கண்ட வீண்பாவம் எந்நாள் விழும்'' என்று வினவுகின்றது திருவருட்பயன். அந்த நன்னாள் அருச்சுனனுக்கு வேடரிடம் அடிவாங்கிய இந்நாள் ஆகலாம்.

தேர்த்தனிலிருந்து மாயை செய்து மால் கொல்லச் செப்பும் வார்த்தை, தான் கீதாரகசியம் என்கின்றது சிவஞானசித்தியார். மால் - கிருஷ்ணபகவான். பார்த்தசாரதி மாயை செய்தலாவது சீடனைப் பக்குவப்படுத்தும் பொருட்டுத் திரோபவித்தலாம். திரோதானமும் அநுக்கிரகமேயாம், திரோதனம் - மறைத்தல்.

கொல்லச் 'செப்பும் வார்த்தை என்பதற்குப் பீஷ்மராதியோரைக் கொல்லச் செப்பும் வார்த்தை என்று உரைப்பது வெறுந் தூலப்பொருளாம். அதன் சூக்குமப் பொருளாக அருச்சுனன் தன்னைத்தானே கொல்லச் செப்பிய வார்த்தையே கீதை' என்றுரைப்பதே பொருத்தம்.

கீதோபதேசத்தின்போது 'நானே கருத்தா' என்று தலைநிமிர்ந்த அருச்சுனன், வேடர்களின் அடியோடு மறைந்துவிட்டான். அதன்மேற் காணப்படும் அருச்சுனன்

செயல்களுக்கெல்லாம் கருத்தா எவனோ, அவனின் கருவியாய அருச்சுனனேயாம். அவன் வேறு, இவன் வேறு; அப்பொழுது கருத்தா, இப்பொழுது கருவி; ஆட்ட ஆடிய கருவி.

இனி, அருச்சுனன் என்போம். அருச்சுனன் அடுத்த பிறப்பில் கண்ணப்பரானார். கீதோபதேச வித்து முளைகொண்டு வளர்ந்து கனிதரும் விருட்சமாயது.

காளத்தியப்பரைக் கண்டார். செய்யாமை தலை கூடியது. செய்யாமலிருக்கமாட்டாமையாகிய நிஷ்காமியம் தலைப்பட்டது. கரணங்கள் சிவகரணங்களாயின. காளத்தியப்பர் உதவிய கண்களை உடையவரிடம் ஒப்பித்தார்; காளத்தியப்பரே யாயினார் கண்ணப்பர்.

" நின்செயலை மன்செயலாக மதி" என்கிறது திருவருட்பயன். கண்ணப்பர் செயலனைத்தும் மன்செயலேயாம்.

---

வெற்றியைப் போலத் தொடர்ந்து வரும் பொருள் வேறொன்றும் கிடையாது. மனிதப் படைப்பிலே அஞ்சிச் செல்லுபவர்களுக்கல்ல; அருங்கலையில் வெற்றி ஆற்றல் கொண்டவர்களுக்கல்ல வெற்றி. மிக வெற்றிஉணர்வு உள்ளவர்களுக்குத் தான் வெற்றி; படுகளத்தில்கூட வெற்றி; எடுத்த செயல் எதிலும் வெற்றி; எடுத்த செயலில் கண்ணுங்கருத்துமாக இருப்பதுதான் வெற்றிமண்டபத்தின் கதவுகளைத் திறக்கும் திலவுகோல்.

— தமிழ்வாணன்

Log entry made dy

# G. WICKRAMARATNE Esq,

D. E, / N. R. Jaffna

who was the chief Guest on the occasion of opening ceremony of our Science - Laboratary on 20-11-74

I had the great pleasure of being present at Saiva Mahajana Vidyasalai this evening on the occasion of the opening of a New Building and the handing over of a deed of gift of a block of land, to the Department of Education for the purpose of the school by the O. B. A.

The building had been constructed by the P. T. A. with a subsidy from the Department.

The school under the present Principal is reported to be doing good work in the field of Education. I thank the principal members on the staff, the P. T. A. and the O. B. A. for having taken a great interest in the development of the school.

(Sgd) *G. Wickramaratne*
DE/NR

Log entry made by the C. E. O. (English)

## Mrs. J. G. VARNAR

(on the occasion of our English Day Celebration)

on 19-7-79


I was present at the school's English Day today. It was well organized and the pupils had been trained well. They were able to write and sing and act well without any stage fear. Their pronunciation was quite good and they sang well without any musical accompaniment. They also staged two English Dramas which were of a fairly good standard. The teachers of English and the Principal and the other teachers should be commended for the fine Co-operation and efficient organisation. Mr, S. Thananchayan C. E. O. Manipay circuit presided. The school has made a good start.

(Sgd) *J. G. Varnar*
G. E. O. (English)




English Day — 1979
( Plays & action Songs )

## எமது மாணவர்கள்



விஞ்ஞான கூடத்தில்




நெசவு கூடத்தில்



நுண்கலைக் கூடத்தில்

கலைவிழாக்களின்போது
திரு. வி. தர்மலிங்கம் (பா. உ.) அவர்கள்




வரவேற்பு | | கொடியேற்றல்
கலைவிழாவின்போது | பொருட்காட்சியின்போது | பா. அ. ச. செயலாளர்




ஆசியுரை | பிரதம அதிதி உரை | நன்றியுரை

## எமது பாடசாலை விழாக்களின்போது



வித்தியாலயத்துக்கு வருகைதந்து சிறப்பித்தோர்



கொழும்புக் கிளை — பழைய மாணவர்கள்
காணி நன்கொடை அளிக்க நடாத்திய விழாவின்போது எடுக்கப்பட்ட படம்

# இந்து சமயக் கல்வி மரபு

ப. சந்திரசேகரம்,
இலங்கைப் பல்கலைக்கழகம்,
கொழும்பு.

'' ஈசன்ருள் மெய்ஞ்ஞான வொளிவிளக்கத் திருத்தி
இழிந்துழன்ற வாருயிரை யிருக்கையி லிருத்தி
ஆசையெனுங் கனலவித்திவ் வேழையை யன்ருண்ட
அணிமலர்ச் செஞ்சேவடியை அனைத்தினையும் பணிவோம்.''

இந்து சமயம், தத்துவம், தருமம் தொன்மை பொருந்தியது; என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பது.

உலக கலாச்சாரப் பண்பாட்டு வளர்ச்சியில் நாம் அறிந்த ஐயாயிரம் ஆண்டுகளின் நாகரிக வளர்ச்சியில், நாற்பது கோடி மக்கள் வாழ்ந்த ஆன்மீக வாழ்வின் வடிவமே இந்துசமயத்தத்துவ மரபாகும் என்பது உலகப் பிரெஞ்சு அறிஞரும், கீழைத் தேய ஞானிகளையிட்டு நூலெழுதி நோபல் பரிசு பெற்றவருமான ரோமன் ரோலந்து அவர்களின் கருத்தாகும்.

சத்தியம் ஒன்றே; ஞானிகள் அதைப்பல பெயரிட்டு வழங்குகின்ருர்கள் என்பது இந்துசமய நெறி; உண்மை ஒன்று வழிகள் பல என்பது இந்து தருமத்தின் உன்னத கோட்பாடு.

இம்மரபு தத்துவ நிலையிலும், சமய நிலையிலும், அறிவியல் நிலையிலும் அமைகின்றது. இந்துசமயக் கொள்கையின்படி, மனிதன் தான் வாழ்கின்ற சமுதாயத்தோடும், பரம் பொருளோடும் இணைந்து வாழ்வதனுல் அவன் ஆளுமை பெறுகின்ருன். மக்களோடும், பரம் பொருளோடும் இணைந்து வாழ்கின்ற மனிதன், இயற்கையோடும் இணைந்து வாழ்வது முக்கியமாகின்றது. இந்த இலட்சியத்தை அடைவதற்கு திட்டவட்டமான வழி முறைகள் எவையுமில்லை. தன்னை ஆட்கொள்ளும் எந்த வழியையும் மக்கள் பின்பற்றலாம் என்பது இந்துமத நீதி.

வெவ்வேறு விளக்குகளில் வெவ்வேறு திரிகள் இடப்பட்டிருந்தாலும், திரிகள் எரியப்படும்பொழுது நமக்கு ஒரு ஒளியே கிடைக்கின்றது என வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர், நமக்கு இந்து தருமத்துக்கு விமர்சனம் தரும் பொழுது, இந்துசமயம் பன்மையில் ஒருமை காணும் தத்துவத்தைக் கொண்டது என்பது புலனுகின்றது. கல்வியின் சிறந்த நோக்கங்களுள் ஒன்று பன்மையில் ஒருமை காணுதலாகும்.

இந்து சமயம் அதனது, தத்துவஞானிகள், சிந்தனையாளர்கள், பக்தர்கள் வெவ்வேறு சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம், கல்விச் சிந்தனையை உருவாக்கி

அதனைச் செயல் ரூபமாக்கி கல்வித்தத்துவத்தை வளம்படுத்தி வந்துள்ளது. நிச்சயமாகப் பாரதநாட்டிலும், இந்து மக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கு இச்சமயக் கல்வி மரபு பொதுக்கல்வி மரபுக்கு உயிரூட்டி புனரமைப்பு அளித்து பலம் வாய்ந்த ஆத்மீக அறிவு சார்ந்த, சமூக கலாச்சாரச் சாதனமாக விளங்கி வருகின்றது. இந்து சமயத்தினை நியமமாகத் தழுவாத பல சிந்தனையாளர்களும் அறிஞர்களும் இம்மரபின் கல்விச்சிந்தனைகளைக் கற்று உணர்ந்து, உலகக் கல்விச் சிந்தனைக்கு இந்துச் சிந்தனையின் பொருத்தப்பாடு சிறப்பிடம் கொள்கின்றதாகக் கருதுகின்றார்கள்.

இம்மரபு, ஒரு அனைத்துலகக் கண்ணோட்ட மரபுமட்டுமல்ல, அது மனிதகுலத்தின் முழுமை பொருந்திய, மறுமலர்ச்சியின் வித்தாகும் எனக் கொள்ளுதல் பொருந்துமென்று 'ஓர் உலகம்' காண விழைந்த வரலாற்றுப் பேராசிரியர் ஆர்னல்ட் ரொயினபி கொள்ளுவார்கள். தமிழ், இந்து நெறியாளர் திருமூலர் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனும் நிறை தத்துவம் பொருந்திய கருத்தினை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அளித்தார்கள்.

உலக நெறி எனும் நாம் இன்று கொள்ளும் கல்வி மரபு, இந்து மரபில் ஊற்றெடுத்தது என்று கொள்வது சாலவும் பொருந்தும்.

இந்து சமய நெறிநின்று அதன் வழி, அமைதி, மகிழ்ச்சி, வாழ்க்கையில் ஒளி என்பவற்றைக் காண்பதற்கு அன்றி விசேடமாக இச்சமய நெறியின், கல்விச் சிந்தனை மூலமாக, இலட்சிய வாழ்வை உருவாக்குவதே எனது வாழ்க்கை நெறியாகும் என்பது நமக்குக் காந்தியடிகள் தருகின்ற கருத்தாகும். இதன் தாற்பரியம், கல்வியின் நோக்கம் அமைதியான வாழ்க்கையில், மகிழ்ச்சிபெற்று, வாழ்க்கையில் விளக்கம் பெறுதல் எனும் கருத்துப் பிறக்கின்றது.

மனிதன் தோன்றிய காலம் தொட்டு, உலகில் பல சமயங்கள் இருந்து வந்துள்ளன. அவற்றினைப் பேண மனிதன் தயங்கலாம். உலகில் இன்று சமயத்தைப் போற்றி வளர்க்காத பல சமுதாயங்கள் உண்டு. ஆனால் சமயப்பண்பிலிருந்து நாம் முற்றாக விடுபடுதல் முடியாது,

சமயம் மனிதனின் வாழ்வு, அவனது ஆன்மாவிற்கு ஒளி கொடுப்பது. வாழ்க்கைப் பாதைக்குத் தீபமாக விளங்குவது. சமயம் என்பது அறம். இது இந்துக்கள் கண்ட சமயம்.

கல்வியின் இலட்சியங்கள், கோட்பாடுகள், செயற்பாடுகள் ஆகியன மனிதனை மையமாக வைத்தே வளர்ந்து வருகின்றன. கற்ற மனிதன் யார் எனும் கருதுகோளுக்கு உலகிலுள்ள சமயங்கள் எல்லாம் வரைவிலக்கணம் தருகின்றன. இந்து மரபு மக்களெல்லோரும் கற்று அறிந்தவர்களாக விளங்கவேண்டுமென்று கொள்வது; கல்வி எல்லா மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டும், அளிக்கப்படலாம் என்று கொள்வது; உலக மக்கள் எல்லோருக்கும் கல்வி அளிப்பதன் மூலமே உலகப் பொதுப் பண்பு வளரமுடியும்.

இந்து மக்கள் இறைவனைத் தந்தையாகவும், அன்னையாகவும் கொள்வர், ஆண் உருவின் வெளிப்பாடு சிவன் என்றும் பெண் உருவின் வெளிப்பாடு சக்தி என்றும் கொள்ளுகின்றோம். சிவன் நுண்அறிவு; சக்தி ஆற்றல், நுண்ணறிவு கருத்துருபத்தில் மட்டும் இருப்பதில் அர்த்தமில்லை. எனவே, நுண்ணறிவு செயல்ரூபம் பெற்று, செயல் சார்ந்த வெளிப்பாட்டினைக் கொள்ளும் பொழுதுதான் அது அர்த்தம் பெறுகின்றது. சக்தி ஊட்டப்படுவதன் மூலம், அறிவு செயல்த்திறனைப் பெறுகின்றது. நுண்ணறிவும், ஆற்றலும் இணைக்கப்படும் பொழுது கல்வி ஆக்கரூபம் பெறுகின்றது.

இறைவன் ஞான உருவன், அறிவு உருவன், அன்பு உருவன், கருணை உருவன் என்று அப்பர் சுவாமிகள் சொல்லும் பொழுது ஞானமும், அறிவும், அன்பும், கருணையும் ஒருமித்து இறைவன் ரூபம் பெறுகின்றான் என்று கூறி கல்வியின் வரைவிலக்கணம் ஞானம், அறிவு, அன்பு, கருணை, ஆகியவற்றை வளர்த்தல் எனக் கொள்வார்.

இந்து மரபு எல்லா மக்களும் தெய்வீகம் நிறைந்தவர்கள் என்று கொள்வது மானிட உடல், இறைவனின் ஆலயமாகும். இதனை இருளில் வைத்திருத்தல் கூடாது. எனவே, மனிதனில் அறிவுச்சுடர் ஏற்றப்படுதல் வேண்டும். அறிவு விளக்கு ஏற்றப் படுதல் வேண்டும்.

மணிவாசகப் பெருமான் மனிதனின் இதயம், இறைவனும், ஞானமும் ஒன்றிடு மிடமெனக் கூறுவார்.

இந்து தர்மத்தின் உயர் நோக்கம் ஞானத்தை அளிப்பதாகும். மெய்அறிவு, சிந்தனை, வாழ்க்கைநெறி ஆகியவற்றை இந்துநெறி போற்றுகின்றது.

உலகின் பண்பாட்டுச் சிகரமாக விளங்கியது சிந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம், இப்பண்பு சமய தத்துவத்தைமட்டுமல்ல, கவின் கலைகளையும் போற்றி வளர்த்தது. இக்கலைகள் இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் சிறந்த அம்சமாக விளங்கின.

அறிவுவிருத்தி, பக்தி, சமத்துவம், உலக ஒருமைப்பாடு ஆகியவற்றினைக் கல்வியின் மூலம் வளர்த்த இந்துசமய நோக்கு பள்ளிக்கூடங்கள் மூலமும், மணிமேகலை கூறும் செழுங்கலை நியமங்கள், கம்பநாட்டாழ்வார் கூறும் தெரிநிலைக்கழகங்கள் எனும் பெயர்களைத் தாங்கிய உயர்நிலைக்கழகங்கள் மூலமும் கல்வியைப் பரப்பின.

இந்து தருமம் தருகின்ற கல்விமரபு நித்தியமானது; எனினும் நித்தியத்தில் மாற்றம் பெறுவது, நித்தியமும், மாற்றமும் ஒன்றிற்கொன்று முரணல்ல,

கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஐரோப்பிய நாடுகளிலும், தூரகிழக்கு நாடுகளிலும், விசேடமாக ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் இந்துசமய மரபின் கல்விச் சிந்தனைத் தாக்கம் செல்வாக்குப் பெறுவதைக் காண்கின்றோம்.

இந்து சமயம் நித்திய வாழ்வுள்ளது என்று கொள்ளும் பிரித்தானிய அமெரிக்கத் தத்துவஞானி அல்டஸ் கக்ஸ்லி அவர்களும் உளவியல் வல்லுநர் உவில்லியம் ஜேம்ஸ் அவர்களும், தற்கால அமெரிக்கக் கல்வித் தத்துவமான மனிததத்துவ பயன் கொள் வாதம் எனக் கொள்ளப்படுவது, பாரதம் அளித்த வேதாந்த தத்துவத்தில் ஊற் றெடுத்தது என்று கொள்ளும் கருத்து சிந்தனைக்குரியது, விமர்சிக்க வேண்டியது.

மனிதன் தன்னை அறிதல் வேண்டும்; தன்னைப் பற்றிய அறிவை மீட்டல் செய் தல் வேண்டும் எனும் உன்னத கருத்துக்களைத் தருகின்ற இந்து தருமம் மெய்யியல், அறிவியல், சமூகவியல் ஆகியவற்றினைத் தன்னகத்தே கொண்டது.

மனிதன் தன் வாழ்க்கையில் அச்சம் தவிர்ந்து, இடர்களை ஒழித்து, பூரண உளவியல் விடுதலை பெற்று வாழும் பொழுதே முழுமை பெறுகின்றான் என்பது இந்து தரும நீதி.

இத் தர்மத்தின்படி வாழ்க்கை என்கின்ற காட்சி, அறிவினால் எழுந்த அன் பினடிப்படையில், ஒற்றுமைப் பண்பில் வளர வேண்டும்.

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவுஞ் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே!

---

கண்ணைத் திறந்துகொண்டு படுகுழியில் விழுவதுபோல மனித ஜாதி நன்மையை நன்றாய் உணர்ந்தும் தீமையை உதறித் தள்ளுவதற்கு வலிமை யின்றித் தத்தளிக்கிறது.

— பாரதியார்

நம்மிடம் தாழ்வு மனப்பான்மை இருந்தால் அது பிறருக்குத் தெரியக் கூடாததாக இருப்பது உத்தமம். தோழனோடும் ஏழைமை பேசேல்.

— காண்டேகர்

# தமிழ் வளர, மொழிக் கலப்பு

செல்வி இ. பெரியதம்பி,
மொழியியல் துறை,
களனிப் பல்கலைக்கழகம்.

பன்னெடுங்காலமாக பல கோடி மக்களால் பேசப்பட்டும், பாராட்டப்பட்டும் வருகின்ற மொழி நம் தமிழ்மொழி. இம்மொழியின் வளர்ச்சிக்கு மொழிக்கலப்பு எவ்வகை துணை புரிகின்றது என்பதனை இங்கு நாம் சிந்திப்போம்.

மொழியானது சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதால் என்றும் நிலையாக ஒரே மாதிரியாக இருக்குமென நாம் கூறமுடியாது. எல்லா மொழிகளும் பேச்சுவழக்கில் மக்களால் பேசப்பட்டு வரும்வரை மாறுதல்களை ஏற்றுக் கொண்டேயிருக்கும். காலத்தின் போக்கிற்கும், நாகரீக வளர்ச்சிக்கும் ஏற்ப ஒரு மொழியானது மாற்றம் அடைந்தால் தான் அம்மொழியானது மேலும்மேலும் வளர்ச்சி யடைந்துகொண்டு போகும்.

எடுத்துக்காட்டாக சங்கத்தமிழ் ஆன்றோர் தமிழாக மிளிர்ந்தது. பின்பு பக்தி இலக்கியங்களில் கையாளப்பட்ட மொழிநடை மக்கள் மனதை ஈர்க்க வேண்டியிருந்ததால் எளிமை பெற்றது. பக்திப்பாடல்கள் ஓரளவு மக்கள் தமிழையே பின்பற்றி அமைந்துள்ளன. திருவாசகத்தில் கையாளப்பெற்றுள்ள எடுத்துக்காட்டாக விச்சை, பிச்சன், ஆராலும் போன்ற சொற்களையும் தாமறியார் போற்றுவதே போன்ற சொற்றொடரையும் காண்க. தாமறியார் போற்றுவதே என்னும் தொடரில் தாமறியார் என்பதன் பயனிலையை கருத்திற் கொள்க.

காலத்திற்குக் காலம், கருத்து கொள்கை, சூழ்நிலை, சந்தர்ப்பங்கள் என்பவற்றுக்கேற்ப மொழிநடை மாறுகின்றது. செய்யுளிலே வாழ்ந்த தமிழ்மொழி உரைநடையாகச் சிறந்து மக்கள் தேவையை ஒட்டி வளரத் தொடங்கியது ஆறுமுகநாவலர் காலத்திலேயாகும். நாவலரை உரைநடையின் தந்தை என்பார்கள். ஆனால், அப்பெருமானாரின் உரைநடையையும் இன்று மக்கள் விரும்புவதாகக் காணோம்; ஏன்? இன்று உரைநடை மாறிவிட்டது. நாவலர் பெருமான் காலத்தில் வாக்கியங்கள் நீண்டு அமைந்தன; வடசொற்கள் இடம்பெற்றன. இன்று காணும் எளிமையை அவரது உரைநடையில் காண முடியாது. மறைமலையடிகள் நடையிலும் வாக்கியங்கள் நீண்டு அமைந்தன. வடமொழி கலவாத தனித்தமிழ் நடையிலே நாம் தமிழ்மொழியையே வளர்க்க வேண்டும் என்ற கருத்

தினைக் கொண்டவர், மறைமலையடிகள். பிறமொழி கலவாத தனித்தமிழிலே தமிழ் மொழியை வளம்பெறச் செய்ய முற்பட்டார். அவ்வாறு அவர் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டினைத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் மறந்துவிடப் போவதில்லை. எனினும் அவரது தனித்தமிழ் நடை சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய நிலையில் இல்லை. அவர் தமது படைப்புக்களில் வடமொழி எழுத்துவடிவங்களைக்கூட கையாளவில்லை. இவர்கள் நடை அறிவின் விளக்கமாக அமைந்தது. பாமர மக்களுக்கு அப்பாற்பட்டதாக அமைந்தது. ஆனால், பாரதியாரோ பாமரரையும் உள்ளத்திற் கொண்டு கவிபாடி, உரைநடையிலும் எழுதினார்.

அரசியலில் ஈடுபடுவோர் ஆரவாரத்தை விரும்புவார்கள். அவர்கள் மக்களின் ஐம்புலன்களையுமே கவர விரும்புவார்கள். அவர்கள், தாம் சொல்லுகின்ற கருத்துக்கள், மக்கள் மனதைக் கவர்ந்து, அவர்களின் உள்ளத்தில் பதிய வேண்டுமென்று விரும்புவார்கள். இவற்றிற்கெல்லாம் ஏற்றதான ஒரு நடையை அண்ணாத்துரை கூட்டத்தினர் அமைத்துக் கொண்டனர். இவர்கள் நடையில் ஒலி நயமும், சொல்லடுக்கும் சிறப்பு அம்சங்களாக அமைந்தன. இவர்கள் நடையும் மாறிவிட்டது. இன்று இந்நடையிலும் மக்களுக்கு அலுப்புத் தோன்றிவிட்டது போலும். ஏன் அறிஞர் அண்ணாவின் தோழர்களே தமது நடையைக் கைவிட்டு விட்டாகள். எனவே, ஒரு மொழியானது தான் தோன்றிய காலத்தில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே என்றும் இருக்க வேண்டும் என்ற நியதிக்குட்பட்டதல்ல.

தமிழ்மொழிக் கலப்பைப் பற்றி ஆராயும்போது தமிழ் வடமொழியோடு கொண்ட தொடர்பைத்தான் நாம் சிறப்பாக ஆராய வேண்டும். பன்னெடுங் காலமாகவே தமிழ்மொழியும் வடமொழியும் சிறப்பான மொழிகளாகத் தமிழ்நாட்டிற் கருதப்பட்டன. வடமொழிச் சொற்கள் ஏராளமாகத் தமிழில் வந்து சேர்ந்தன. இதற்குக் காரணம் மதம், தத்துவம், அரசியல் போன்ற துறைகளே.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தனித்தமிழ் இயக்கமொன்று தோன்றியது. தமிழில் உள்ள வடசொற்களை முற்றாக நீக்கவேண்டுமென்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். ஆனால் வடமொழியை முற்றாக நீக்கி விடக்கூடிய நிலை இதுவரை எழவில்லை. தேவை ஏற்படும்போது கலைச்சொற்களை வடமொழியில் இருந்தும் எடுத்துப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகவே இருந்துவருகின்றது.

வடமொழி மாத்திரமல்ல, இன்று எத்தனையோ நவீன மொழிகளுடன் தமிழ்மொழி தொடர்பு கொண்டுள்ளது. உதாரணமாக, தெலுங்கு, மலையாளம், மராட்டி, இந்துஸ்தானி, சிங்களம், மலாய், சீன,

அரபிக், கிரீக், போர்த்துக்கேய, டச்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளி லிருந்து சொற்களைக் கடன் பெற்றுள்ளது. இப் பிறமொழிகளிலிருந்து சொற்கள் நம்மையறியாமலே வந்து தமிழ்மொழியில் கலந்து விடுகின்றன. இவற்றை நாம் தவிர்க்க முடியாத நிலையில் உள்ளோம். ஏனெனில் இச்சொற்கள் நம் தமிழ்மொழிச் சொற்கள் போலவே மொழியில் இரண் டறக் கலந்திருப்பதை நாம் கண்டுகொள்ளலாம். உதாரணமாக பத்தர், பறைதல், அபின், கிட்டங்கி, பீங்கான், அலவாங்கு, அலுமாரி, விருந்தை, கச்சேரி, கார், றப்பர், கொப்பி இன்னும் இவை போன்ற பல சொற் களை மக்கள் தம் அன்றாட பேச்சில் கலந்து பேசுகின்றனர்கள். பொதுமக் கள் இச்சொற்களையெல்லாம் தமிழ்ச்சொற்கள் என்றே உறுதியாகக் கூறு வர். இவற்றை நாம் பிறமொழிச் சொற்கள் என ஒருபோதும் ஒதுக்கி வைப்பதில்லை.

மேலே கூறப்பட்ட மொழிகளுள் ஆங்கில மொழிக்குத் தற்காலத் தில் நாம் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றமையால் ஆங்கிலச் சொற் கள் பல தமிழ்மொழியில் புகுதலை நாம் தடுக்க முடியாதிருக்கின்றது. உதாரணமாக Bus, Radio, Maxi என்னும் இவை போன்ற பல சொற் களை மக்கள் தம் அன்றாடப் பேச்சில் பயன்படுத்துகின்றனர்.

இன்னும் தாய்மொழிமூலம் விஞ்ஞானக் கல்வி விருத்தியடைந்து வரு கின்ற இன்றைய சூழ்நிலையில் அதிகமான ஆங்கில விஞ்ஞானச் சொற்கள் மொழியில் கலக்கின்றன. ஆங்கிலச் சொற்கள் பலவற்றை நாம் தமிழ் மொழி ஒலிக்கேற்ப அமைத்துவிட முடியும். உ+ம்: Cement - சீமெந்து Flask - பிளாஸ்க். எல்லா ஆங்கிலச் சொற்களையும் அவ்வாறு தமிழ் மயப்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை. தமிழிலே புதிய சொற்களைப் படைத்தும் கொள்ளலாம். இவ்வாறு படைப்பதில் இடர்பாடு தோன்றி னால் ஆங்கிலச் சொல்லையே தமிழ் ஒலிக்கேற்ப அமைத்துக் கொள்ளலாம். உதாரணமாக Oxygen என்ற சொல்லில், ஒட்சிசன் என எழுதப்படு கிறது. இச்சொல் ஆங்கிலச் சொல்லுமல்ல, தமிழும் அல்ல. இதற்குக் காரணம் சில ஒலிகளைக் குறிக்கும் குறியீடுகள் தமிழில் இல்லாமையே ஆகும். இந்நிலையில் மேலதிகமான சில குறியீடுகளை (Diacritics) தமிழ் எழுத்துக்களோடு சேர்த்து எழுதலாம். ஆனால் ஒரு சொல்லின் பொருளை உணர்ந்துகொள்வதற்கு, அச்சொல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் (Context) மிகத் துணை செய்யும் என்பதனை நாம் மறக்கக் கூடாது.

தமிழ்மொழியில் காணப்படும் எல்லா வரிவடிவங்களும் எழுத்து மொழியில் கையாளப்பட்டு வருகின்றன. எனினும் பேச்சுமொழியில் இடம்பெறும் தொழில்நுட்ப வேறுபாடுகளை இந்த வரிவடிவங்கள் எடுத் துக் காட்டுவன அல்ல. உதாரணமாக, தமிழில் Ga, Ba, Tha, Da, Fa

போன்ற உச்சரிப்புக்களைத் தரக்கூடிய வரிவடிவங்கள் இல்லை **Ka, Pa, Ta** போன்ற வடிவங்கள், அதாவது க, ப, த போன்ற எழுத்துக்களாலேயே நாம் உச்சரிக்கின்றோம். எடுத்துக்காட்டாக,

காது, காகம், தங்கம்

இந்த மூன்று சொற்களிலும் காணப்படுகின்ற க' கரத்தின் ஒலி நுட்ப வேறுபாடுகளை உச்சரித்துப் பார்ப்பதன்மூலமே நாம் உணர்ந்துகொள்ளலாம். ஆனால், இம்மொழியைக் கற்க விரும்பும் பிறமொழியினர்க்கு இவ்வெழுத்துக்கள் பெரும் பிரச்சினையை உண்டாக்கக்கூடியன. எனவே, தமிழின் வளர்ச்சி கருதி இத்தகைய ஒலி வடிவங்களுக்கு நிகரான புது வரிவடிவங்களை ஆக்குதல் அல்லது மாற்றுதல் ஓர் தவறான காரியமல்ல.

இன்று நாம் சிங்கள மொழியை எடுத்துக்கொண்டால், புதியபுதிய கலைச்சொற்களை மொழியில் சேர்த்துக்கொள்வது மட்டுமல்ல, புதுப்புது வரிவடிங்களும் ஆக்கப்படுவதை நாம்கவனிக்கலாம். சிங்கள கலைச்சொல் ஆக்கக்குழு இன்று இக்கடமையினைச் செய்து வருகின்றது என்பதனையும் நாம் அறிந்துகொள்ளல் அவசியம். இவ்வாறு தமிழ்மொழியின் வளர்ச்சி கருதியும் நாம் சில ஆக்கங்களைச் செய்துகொள்ளுதல் தவறுதல் ஆகாது.

மொழி என்பது எப்பொழுதும் மக்களுக்கு இலகுவானதாகும். இலகுவில் கருத்தை வெளிப்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் மொழியினால் பயனும் மொழி வளர்ச்சியும் உண்டு. எனவே, தமிழ்மொழி வளர்ச்சி கருதி மொழிக்கலப்பை ஏற்றுக்கொள்ளுதல் தவறில்லை.

---

தான் செய்த ஒரு பாவத்தைப் பிறர் யாரும் அறியாதிருக்கவும், தான் அதைச் செய்துவிட்டேனென்று உண்மையான நாணத்தோடு மறைக்காது எடுத்துக் கூறிவிடுமொருவனைப் பிறர்முன் ஒருவராலும் நாணச் செய்யமுடியாது.

— *மகாத்மா காந்தி*

# நாவலர் பெருமானின் சிந்தனைகள்

இரா. வை. கனகரத்தினம்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ் - இந்து பண்பாட்டுத்துறை,
களனிப் பல்கலைக்கழகம்,
களனியா.

> "ஆறுமுக நாவலர் என்பவர் தமிழுலகத்தில் தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெரியவர்களுள் ஒருவர். அவரளவு சிறந்தவர் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில், இத்தமிழ் நாட்டில் ஒருவரும் இருந்திலரென்று ஒரு தலையாகச் சொல்லலாம். அவ்வளவு சிறந்தவர்."

உலகச் சிந்தனையாளருள்ளும் இந்தியச் சிந்தனையாளருள்ளும் நாவலரவர்களும் ஒருவராவார். 19-ம் நூற்றாண்டில் இந்தியாவிலும் ஈழத்திலும் தோன்றிய சமூக, சமய, ஆன்மீக சிந்தனையாளருள் நாவலரவர்கள் குறிப்பிடத் தகுந்த உயர்ந்ததோர் இடத்தைப் பெறுகின்றார் என்பதை யாரும் மறப்பதற்கில்லை. அவரது மூளை முதல்தரமானது என்று ஆங்கிலேய மதவாதிகள் இவரைப் பாராட்டியமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

மனித வாழ்க்கையின் அபிலாசைகளை, மனித சமுதாயத்தின் சமூக, சமய, ஆன்மீக ஈடுபாட்டில் கொண்டிருந்த ஆர்வத்தின் விளைவாகத் துறந்தவர் நாவலரவர்கள். தான் வாழ்ந்த காலகட்டத்தில் ஏற்பட்டிருந்த அரசியல், சமூக, சமய தாக்கங்களுக்கேற்ப, தனது சமுதாயத்தின் சமய, ஆன்மீக வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து அவற்றின் போக்குக்கேற்ப உயர்ந்த சிந்தனைகளைக் கருத்திற் கொண்டார். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார். அவரின் சிந்தனைகள் ஒரு தனிப்பட்ட சமுதாயத்துக்கு மாத்திரம் சொந்தமல்ல. உலகில் வாழ்கின்ற, வாழப்போகின்ற மனித வர்க்கம் எல்லோருக்கும் பொருத்தமுடையன.

நாவலரவர்களின் சிந்தனைகளை மூன்று வகையாக அடக்கி நோக்கலாம்.

(அ) சமூகம் சார்ந்தன
(ஆ) சமயம் சார்ந்தன
(இ) ஆன்மீக நாட்டம் கொண்டன

நாவலரவர்கள் அழுக்காறு, கல்வி, களவு, கற்பு, கள்ளுண்ணல், காமம், கோபம், கொலை, சூது, செல்வம், மொழி, தர்மம், தானம், நல்லொழுக்கம், பசுக்காத்தல், புலாலுண்ணல், பெரியோரைப் பேணல்,

பொய், வியபிசாரம், வீட்டுவேலை, வருணம் போன்ற பல்வேறு விடயங்களில் சமுதாயத்தின் முதன்மை கருதி, தமது சிந்தனைகளைச் செலுத்தித் தமது அருமையுடைய கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

மனித அறவியல் பண்புகளில் தலையாயது கொலை செய்யாமையாகும். கொலை செய்யாமை என்பது கொல்லாமை ஆகும். கொலையாவது உயிர்களை அவைகளுக்கு இடமாகிய உடம்பினின்றும் பிரியச் செய்தலாகும். உயிருக்கு இதஞ்செய்தல் புண்ணியமும், தீமை செய்தல் பாவமுமாம். கொலையைப் பார்க்கிலும் தீமை வேறு இல்லாமையால் கொலையே பாவங்களெல்லாவற்றுக்கும் தலையாயுள்ளது. கொல்லாமையைப் பார்க்கிலும் இதம் வேறில்லாமையால் கொல்லாமையே புண்ணியங்கள் எல்லாவற்றிலும் தலையாயது என்பார். இக்கருத்து மரபுவழிப் பட்டதாயினும் விரித்துச் சொல்லி வலியுறுத்தும் பான்மை மனித சமுதாயத்தைப் பெரிதும் சிந்திக்கத் தூண்டுவனவாக அமைந்துவிடுகின்றது எனலாம்.

கள்ளுண்ணுதல் என்ற பண்பினைப் பற்றி நாவலரவர்கள் பேசும் பொழுது அறிவை மயக்கும் வஸ்த்துக்கள் அனைத்தையும் இதனுள் அடக்கிப் பேசுவார். கள்ளுண்பவர்களுக்குக் களிப்பும் மயக்கமும் இயற்கையாதலால் அவரிடத்துச் சண்டை, கொலை, களவு, பொய், வியபிசாரம் போன்ற பாவச்செயல்கள் இயல்பாகவே அமைய வாய்ப்பேற்படும் எனக் குறிப்பிடுவார்.

வியபிசாரம் என்பது காம மயக்கத்தினாலே தன் மனையாளல்லாத மற்றப் பெண்களை விரும்புதல் ஆகும். ஏனைய பாவங்கள் அனைத்திலும் முதன்மையான பாவம் வியபிசாரமேயாகும் என்பார் நாவலரவர்கள்.

'இளமையிற் கல்' என்பார் ஔவைப்பிராட்டி. நாவலரவர்கள் சற்றே விரித்து, எந்த நாட்டையும் எந்த ஊரையும், உன் நாடும் ஊரும் ஆக்குவது கல்வி; ஆதலால், அதனை இளமை தொடுத்து மரண பரியந்தம் விடாமற் கல். அதற்குச் சிறந்த கருவி ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே ஆகும் என்பார்.

''மைவிழியார் மனையகல்''

''பிறன்மனை புகாமை யறமெனத் தகும்''; என்பன ஔவையார் வாக்கு. நாவலரவர்களும் முன்னோர் வழிநின்று தண்மையுள்ள ஆண்மகன் ஒருவனின் சிறப்பை ''பிறன்மனை விரும்பாத பேராண்மையே பேராண்மை'' எனச் சிறப்பித்துக் குறிப்பிடுவார்.

'கோதாட்டொழி'

"சூதும் வாதும் வேதனை செய்யும்", "சூது விரும்பேல்" ஆகிய வாக்கியங்களால் ஒளவையார் சூதின் கேட்டினை விளக்குவார். நாவல ரவர்களும் சற்றே விரித்து, "சூதாடலானது ஒன்றினை முன் பெற்று, இன்னும் பெறுவேன் என்னும் கருத்தால், நூற்றினை இழந்து வறியன் ஆதற்கு ஏதுவாம்; ஆதலால், அதனை ஒருபொழுதும் நினைத்தலும் செய் யாது ஒழி. சூதாடலை விரும்புவாயாயின் காலமும் கருத்தும் உன்னை வுந்தடையா" என வலியுறுத்துவார்.

"சோம்பித் திரியேல்" என்று ஒளவையார் முயற்சியை வற்புறுத் துவது போன்று, வழிவழி வந்த சிந்தனையாளர்களும் வலியுறுத்தி வந் துள்ளனர். நாவலரவர்களும், "செல்வம் எல்லார்க்கும் எந்நாளும் அவ சியம் வேண்டுவதாய் இருக்கையால், அதனை விரைந்து சம்பாதிக்க வேண் டும். அதற்கு முயற்சியே சிறந்த கருவி" என்பார். இச்செல்வத்தை பொய் முதலான பாவம் கலவாமையால் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் ஆங்காங்கே வற்புறுத்திச் செல்வார்.

அம்மையே அப்பா! எனஇறைவனை நோக்கிப் பாடினர் மாணிக்கவாசக சுவாமிகள். அதன்மூலம் பெற்றோரின் முதன்மையை உலகிற்கு வெளிப் படுத்தினர். ஒளவையார், "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என அவர்களை இறைவனாகவே காட்டினர். இவற்றின் வழிவந்த நாவல ரவர்கள், சமுதாயப் போக்கினை அறிந்து, 'அதிக வருத்தத்தோடு உன் னைப் பெற்று வளர்த்த பிதா மாதாக்களை, நீ என்ன வருத்தப்படினும், மறந்தும், கைவிடாமல் அன்போடு காப்பாற்று. இவற்றின் பயனே உன் பிள்ளைகளால் உனக்கும் கிடைக்கும்" என்று அழுத்தமாகக் குறிப்பிட்டு, "தந்தைதாய் பேண்" அமுதவாக்கின் அவசியத்தினை வற்புறுத்துவார்.

கடன்படுதல் பற்றி உலகில் சிந்தித்த முதல் மனிதர்களில் நாவல ரவர்கள் முதன்மை பெறுவர் எனலாம். கடன் பெறாத மனிதர் உலகில் யாருமில்லை என்றே கூறிவிடலாம். நாவலரவர்கள் "எல்லாப் பாவங் களையும் வலிந்து கைப்பிடித் தழைக்குந் தூது" என இதனைக் குறிப் பிடுவார். மனிதன் கடன்படுதலால் ஏற்படும் விளைவுகள் அனைத்தைச் இச்சிறு வாக்கியத்தால் விளக்கி அடக்கிவிடுகின்றார். அது ஒரு தொடர் நோய், பல வழிகளிலும் மனிதனைத் துன்புறுத்தக் கூடியதாகும்.

தர்மம் பற்றி பல அறிஞர்கள் பேசியுள்ளனர். நாவலரவர்கள், "நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் செய்யா தொழிவையாகில் பின் ஒரு காலத்திலும் சமயம் வாய்ப்பது அரிது. தர்மத்தைச் செய்யுமிடத்து சற்பாத்திரமாயுள்ளவர்களுக்கு அன்போடு கொடுத்துவிடு" என்பார்.

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின் பாவம் செய்பவர்களும் இலர் ஆதலால், பாவம் செய்பவர்களிலும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும்பாவிகள் எனக் கூறி, அத்தனை சிந்தனைக்கும் மகுடமாக, இமயம்போல் இச்சிந்தனையை வெளிப்படுத்தினுர். ஏனைய சிந்தனைகள் எல்லாம் இதனுள் அடக்கம். இது ஏனையவற்றுள் அடங்கா.

நாவலரவர்கள் வருணம் பற்றிப் பேசியுள்ளார். ஆச்சிரமம் பற்றிச் சிந்தித்துள்ளார். ஆனுல் வர்ணம் பற்றியோ, அன்றி சாதி பற்றியோ இன்று இவ்விடயத்தினுள் அடக்கி, கங்கணம் கட்டி, கண்டிக்குமளவிற்கு நாவலரவர்கள் சாதிபற்றி சிந்திக்கவில்லை. நாவலரவர்கள் சமூகவியல் அடிப்படையினின்று சாதிபற்றிச் சிந்திக்கவும் இல்லை. சமூகவியலில் சாதி ஒரு பகுப்பு, ஆங்கே இது பற்றிய ஆய்வு அவர்களுக்குத் தேவைப் படுகின்றது. எனவே தமது சிந்தனைக்கு வலிந்து வலுவூட்ட நாவலரவர்களின் வருணம் பற்றிய சிந்தனை தேவையற்ற முறையில் பயன்படுத் தப்பட்டுவருவது வருத்தத்திற்குரியது.

நாவலரவர்கள் சமயநெறி நின்று, சமுதாயத்தை நோக்கினுர். சமூகவியல் பற்றி அவர் சிந்தித்ததே இல்லை. அது அவருக்கு அனுவசியம். சமய ஒழுகலாற்றில் நின்று சிந்தித்தமையால், ''சாதியினுஞ் சமயமே அதிகம் சமயத்தினும் சாதி மேலானதெனக் கொள்வது சுருதி, யுத்தி, அநுபவம் என்ற மூன்றினுக்கும் விரோதம்'' என்றுர். இங்கு நாவலரவர்கள் சாதி என்ற சொல்லை சமூக ஏற்றத்தாழ்வு என்ற அடிப் படையில் கருதவில்லை என்பதை யாவரும் மனங்கொள்ளுதல் வேண்டும் சமயம் சாதிபற்றிப் பேசுவது இந்த அடிப்படையில் அல்ல. பிறிதோர் இடத்தில் மேன்மக்கள் யாவர் என்பதை நாவலரவர்கள் மனிதனின் உடம்போடு அழிதலால் பயன் படாது சாதியுயர்ச்சி; உயிரோடு செல்லு தலாற் பயன்படும் கல்வியுயர்ச்சி உடையவரே மேன்மக்கள் என்று அவர் குறிப்பிட்டுச் செல்வதையும் நாம் இங்கு மனங்கொள்ளல் வேண்டும். நாவலரவர்கள் பெரும் சாதிமானுக தம்மைக் கருத்திற் கொண்டால் பரிதாபி வருடத்தில் (1852) பெரியபுராண வசனத்தை எழுதியிருக்க முடியுமா? அதில் வரும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் ஒரேவருணத்தைச் சார்ந்தவர்கள் அல்லாத போதும் அவர்களின் குருபூசையைத் தவறுது அனுட்டிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய அவசியம் வேண்டியதா? கரையூர் சென்று கஞ்சித்தொட்டிச் தருமம் (1877) செய்யவேண்டிய தேவையுண்டா? கத்தோலிக்கரான பெஞ்சமீன் சந்தியாகுப்பிள்ளை அவர்கள் பற்றி 'மகாதயாளு' என்று மிகுதியாகப் பாராட்ட வேண்டிய கடப்பாடு அவருக்கு வேண்டுமா? என்பன போன்ற விஞக்கள் நம் சிந்தனையில் எழுந்து நிற்கும்.

நாவலரவர்கள் கோயில் வழிபாடு, கடவுள் வழிபாடு, சங்கம வழிபாடு, வருணம், ஆச்சிரமம், சிராத்தம், சைவம், வைணவம், தேவாரம், திருவாசகம், திருமுறைகள், அருட்பா, நிலையாமை, புண்ணியம், பாவம், துன்பம் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி மிகவும் ஆழமாகச் சிந்தித்துள்ளார். நாவலரவர்களின் சமய சிந்தனைகள் அனைத்தும், ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.'' என்ற அவர்தம் சிந்தனையின் அடிப்படையில் அமைந்தன எனலாம்.

சிந்தனையில் சைவத்தையும் அதன் கோட்பாடுகள் பற்றியுமே அதிகமாகச் சிந்தித்தார். சைவமே வைதிகம் எனப்படும். வைதிகம் அதனுள் அடங்கும். வைதிகம் சைவத்தினிற் றாழ்ந்தது. சைவமே பரகதியைத் தரவல்லது என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தவர் நாவலரவர்கள்.

ஆன்மீகச் சிந்தனையாளர் எவரும் நிலைமைக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதில் பின்னின்றதில்லை. நாவலரவர்களும், ''நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன் உயிர்க்குப் பயன்படுவனவற்றைச் செய்யாது, வீணுட்கழிப்பது எவ்வளவு அறியாமை.'' என வலியுறுத்துவார்.

உலகில் வாழ்ந்த ஆன்மீக சிந்தனையாளர் யாவரும் பெரிதும் தாம் தழுவிய கோட்பாடுகளை மையமாக வைத்தே தமது ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தினர். அவ்வாறே நாவலரவர்களும் தாம் பூரணமாக நம்பிய சுத்தாத்வைத சித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் நின்று இறை, உலகு, ஆன்மா, கன்மம், மறுபிறப்புப் பற்றிச் சிந்தித்தார். நாவலரவர்களின் தத்துவ சிந்தனைகள் மரபு தழுவியனவாகப் பெரிதும் அமைந்திருந்தன. ஆனுலும், அவை பாமர மக்களுக்கு இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் அக்கோட்பாடுகளை அமைத்து வெளிப்படுத்தினுர். இறையியல் பற்றிச் சொல்லவந்த நாவலரவர்கள்,

> கடவுள் ஒருவர் இருக்கின்றுர்
> அவர் எங்கும் உள்ளவர்
> அவர் எங்கும் நிறைந்தவர்
> அவர் எல்லாம் அறிபவர்
> அவர் இரக்கம் உடையவர்
> அவர் நம்மைக் காப்பாற்றுகின்றுர்
> அவரை ஒருநாளும் மறவாதே
> அவரை எந்நாளும் வணங்கு

என இலகு படுத்திக் குறிப்பிட்டு, இறைவனின் பிரமாணம், இலக்கணம், வியாபகம் அருள்திறன் அனைத்தையும் வெளிப்படுத்துவார். இவ்வாறே ஆன்மா உலகு பற்றியும் குறிப்பிட்டு நிற்பார்.

நாவலரவர்களின் ஆத்மீக உலகியல் சிந்தனைகள் பெரிதும் சித்தாந்தக் கோட்பாடுகளைத் தழுவிய பொழுதும் ஓரளவு வடஇந்திய அனுபூதிமானாகிய இராமகிருஷ்ணபரமகம்சர் சிந்தனைகளை உருவகக் கதைகள் மூலம் வெளிப்படுத்தியது போன்று நாவவரவர்களும் தமது சிந்தனைகளைச் சிறுசிறு உருவகக் கதைகள் மூலம் வெளிப்படுத்தி வந்தார். அத்தகைய உருவகக் கதைகள் அறிவியல், அறவியல், அன்புநாட்டம் கொண்டனவாகவே அமைந்திருந்தன. உதாரணமாக ஒன்றை நோக்கின்;

எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரிக்கரை மேலே போனார். போகும்போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப் பார்த்து, ''ஐயோ! நீ எப்போது கரை ஏறுவாய்!'' என்றார். ''ஐயா! என் பறி நிரம்பினால் கரை ஏறுவேன்.'' என்றான்.

இக்கதையினை நாவலரவர்கள் குறிப்பிடுவதன்மூலம் கொல்லாமை, அன்புடைமை, மறுபிறப்பு, வீடுபெறல் போன்ற பல்வேறு ஆன்மீக விடயங்களை அடக்கிக் குறிப்பிடுவதை அவதானிக் முடிகின்றது.

இராமகிருஷ்ண பரஹம்சர் ஓர் அனுபூதிமான். இறையியல் ஞானி. நாவலரவர்கள் இறையியல் சார்ந்த அனுபூதிமான். பரமஹம்சர் ஆன்மீகப் பயன்பட்டின் முதிர்ச்சியில் நின்றவர். நாவலரவர்கள் சாதனையின் பயனை உலகிற்கு வழங்க முனைந்தார். இதனால் பரமஹம்சர் போன்று இறையியல் ஞானியாக உலகில் துலங்க வழிதேட முற்படவில்லை. இராமகிருஷ்ணபரமஹம்சர் வாழ்ந்த பகைப்புலம் வேறு. நாவலரவர்கள் வாழ்ந்தபகைப்புலம் வேறு. இதனால் நாவலரவர்கள் தன்னை முழுமையாக இறையியல் சார்ந்த பணிக்கு அர்ப்பணிக்க முடியவில்லை ஆனால் நாவலரவர்களின் சிந்தனை வெளிப்பாட்டின் சாதனையின் பயன் அவரை இறையியல் ஞானியாக வெளிப்படுத்தி நிற்கும் எனலாம்.

முடிவாக, நாவலரவர்களின் உயரிய சிந்தனைகள் மனித சமுதாயத்தின் வாழ்வுக்குப்பெரிதும் வழிகாட்டுவன. அவை பெரிதும் ஆன்மீக ஈடுபாட்டை அளிப்பன. அதன் வழி பரமுத்தியைத் தரவல்லன. நாமும் நாவலர்பெருமான் காட்டிய சிந்தனைகளை மனங்கொள்ளுதல் அவசியமானதாகும். அவை மிகுந்த பயன் தரவல்லன.

# கூட்டுறவு இயக்கமும் இலங்கையும்

க. தேவராஜா B. Sc. (B. Ad.) Hons;
உதவி விரிவுரையாளர்,
பொருளியல், வர்த்தகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

பொதுவான பொருளாதார நலன்களை வளர்ப்பதற்காகச் சமத்துவ அடிப்படையில் சுயேச்சையாக மக்கள் ஒன்று சேர்ந்து செயற்படும் ஒருவித நிறுவன அமைப்பே கூட்டுறவாகும். தனியான முயற்சியால் தமது குறிக்கோள்களை அடைய முடியாதவர்கள் ஒன்று சேர்வதன் மூலம் தமது பொருளாதார நலன்களை வென்றெடுப்பதே கூட்டுறவின் முக்கிய நோக்கமாகும். ''தலைக்கு ஒரு வாக்கு'' என்ற ஜனநாயகக் கொள்கையினைக் கடைப்பிடித்து உற்பத்தியிலும், வர்த்தகத்திலும் அவசியமானதும், தேவையற்றதுமான போட்டியை நீக்கி கொள்ளை இலாபம் அடிக்கும் நடுவர்களை இல்லாமல் செய்வதாகும். இதனால் ஏழை மக்களின் முதலாளித்துவ சுரண்டலைப் போக்கி அவர்களிடையே ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் உழைக்கும் மனப்பான்மையை ஏற்படுத்துவதாகும். அதாவது சேவை வேண்டுபவர்கள் சகோதரத்துடனும், சிக்கனத்துடனும் தாங்களே சேவை செய்து கொள்ளும் ஒரு அமைப்பு கூட்டுறவாகும்.

1844ம் ஆண்டில் ரொச்டேல் முன்னோடிகளால் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கமானது படிப்படியாக உலகெங்கணும் பரவத்தொடங்கியது. கூட்டுறவு இயக்கம் உலகின் முதலாளித்துவ நாடுகளிலும் பொதுவுடமை நாடுகளிலும் மிக வேகமாகப் பரவியமைக்குக் காரணம், எந்த ஒரு பொருளாதார அமைப்பையும் அது சாராதிருந்ததுதான் எனலாம். முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் பிளவை உண்டு பண்ணும் வகையில் ஒரு சிலரிடம் மட்டும் பொருள் குவியும் வழி செய்யும் முதலாளித்துவத்திற்கும், தனியார் துறையினை வளரவிடாமல் தடைசெய்யும் வகையில் அமைந்த பொதுவுடமைக்கும் இடையே நிலைபெறுவதுதான் கூட்டுறவு இயக்கமாகும். இதனால் முதலாளித்துவ நாடுகளும், பொதுவுடமை நாடுகளும் கூட்டுறவு இயக்கத்தினை எதிர்க்கவில்லை. பதிலாக கூட்டுறவின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தன. இதனால் எல்லா நாடுகளும் கூட்டுறவினை வளர்த்ததோடு மட்டுமல்லாது ஒன்று சேர்ந்து சர்வதேசக் கூட்டுறவு சம்மேளனம் என்ற ஒன்றையும் உருவாக்கி இருக்கின்றன.

கூட்டுறவு இயக்கமானது 19ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதும் மூன்றாம் உலகநாடுகளில் இது 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அத்துடன் மேலைநாடுகளில் தோன்றியது போல இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மக்கள் தாமாகவே விருப்பப்பட்டு கூட்டுறவினை தன்னிச்சையாக (Voluntary) ஏற்படுத்தியிருக்கவில்லை. இந்நாடுகளில் விவசாய மக்களின் துயர்துடைக்க அரசாங்கத்தினால் கூட்டுறவுச் சட்டத்தின் மூலம் கூட்டுறவு இயக்கம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவேதான் இந்நாடுகளில் கூட்டுறவு இயக்கம் மேலிருந்து வந்ததேயொழிய கீழிருந்து வரவில்லை எனக் கூறப்படுகின்றது. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம்நாட்டு விவசாயிகள் பஞ்சத்தினாலும் கடன் தொல்லையினாலும் அவதியுற்றிருந்தனர். அதிக வட்டிக்கு கடன் பெற்று விவசாயத்தை மேற்

கொண்டமையினல் அக்கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவாறு கடனிலேயே மூழ்கிப்போயிருந்தனர். இந்நிதிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கே கூட்டுறவுச் சட்டத்தின் மூலம் கூட்டுறவு இயக்கம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இக்கூட்டுறவுச் சட்டம் இந்தியாவில் 1904ம் ஆண்டிலும், இலங்கையில் 1911ம் ஆண்டிலும் இயற்றப்பட்டன.

## இலங்கைக் கூட்டுறவின் வளர்ச்சி:

கிராமிய கடன் பிரச்சினையை மையமாகக் கொண்டே இலங்கையில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பமானது. இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு, ஐக்கிய நாணயசங்கங்களேயாகும். இதனல்தான் இலங்கைக் கூட்டுறவின் முதலாவது வளர்ச்சிக்காலகட்டமான 1911 - 1942க்கு இடைப்பட்ட காலப்பகுதி கடன் இயக்க காலம் என அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் கூட்டுறவுப்பதிவாளர் காரியாலயம் என்ற ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு கூட்டுறவு இயக்கத்தின் முழுப்பொறுப்பையும் அரசு பதிவாளரிடம் ஒப்படைத்திருந்தது. இவர் அரசாங்கத்தின் சார்பில் எல்லாவகைப்பட்ட தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் கொண்டவராக மட்டுமன்றி கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவதிலும், கலைப்பதிலும் இறுதித் தீர்மானமெடுக்கும் உரிமையினைக் கொண்டிருந்தார். 1926ல் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டத்தின் மூலம் நுகர்வு விவசாய சந்தைப்படுத்தும் சங்கங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஐக்கிய நாணயசங்கங்களையும், ஐக்கிய பண்டகசாலைகளையும் நிர்வகிக்க கூட்டுறவுத்திணைக்களம் என்ற ஒன்று 1930ல் உருவாக்கப்பட்டது. இதனல் முதல் கட்ட வளர்ச்சியான 1942 வரைப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட 2036 சங்கங்களில் 1622 சங்கங்கள் ஐக்கிய நாணய சங்கங்களாக இருந்தமையினல் இக்காலகட்டம் கடன் சங்கங்களின் மேலேயே கவனம் செலுத்தப்பட்ட தெனக் கூறமுடியும்,

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் இரண்டாவது கால கட்டமான 1942 - 1947க்கு இடைப்பட்டது, இரண்டாவது உலக மகாயுத்தத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்ட காலப்பகுதியாகும். யுத்த நிலைமையினல் நடைமுறையிலிருந்த உணவு வினியோகம் சீர்குலைந்து விட்டபொழுது அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், ஏனைய தட்டுப்பாடான உணவுப் பொருட்களையும் விநியோகம் செய்ய வேண்டி நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இச்சங்கங்களின் எண்ணிக்கை 1942 முதல் 1945 வரைப்பட்ட காலத்தில் 28ல் இருந்து 4004 ஆக அதிகரித்ததுடன் அங்கத்தவர் எண்ணிக்கையும் 17,500ல் இருந்து 101,570 ஆக அதிகரித்தது.

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் மூன்ருவது காலகட்டமென அழைக்கப்படுவது 1947 - 1956க்கு இடைப்பட்ட காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பை மையமாகக் கொண்ட விவசாய உற்பத்தி - விற்பனவுச்சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இது விவசாயிகளை எதிர்நோக்கியிருந்த கடன் பிரச்சனைகளையும், உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்தும் பிரச்சனையையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இக்காலப்பகுதியில் குறிப்பாக மீன்பிடிக்கூட்டுறவுச்சங்கங்கள், கைத்தொழில் கூட்டுறவுச்சங்கள், பாடசாலைக்கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் கூட்டுறவின் அபிவிருத்தி கருதி 1949ல் கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம் என்ற ஒன்று அமைக்கப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கூட்டுறவு சம்பந்தமான முழுப்பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் நான்காவது காலகட்டமாகக் கொள்ளப் படுவது 1956 — 1970க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கிய காலப்பகுதியாகும். இக் காலப்பகுதியில் கூட்டுறவுக்கும் பொறுப்பாக இருந்த அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன தனித்தனி நோக்கங்களைக் கொண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்ட சங்கங்கள் எல்லாம் பல நோக்கங்களைக் கொண்ட ஒரு சங்கமாக இருக்கமுடியும் என்று கருதியமையினாலேயே அவரால் இச்சங்கங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. கடன் கொடுப்பனவு, நுகர் பொருள் விற்பனை, உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல், ஏனைய சேவைகள் அளித்தல் போன்றவற்றினை ஒரே நேரத்தில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் வழங்கக்கூடியதாகவிருந்தது. அத்துடன் சிறிய சங்கங்களை ஒன்றிணைத்தல் என்பது பேரளவு மூலதனத்தினைத்திரட்டி நிர்வாகத்தினைத் திறமையாக்கி, ஆக்கச் சிக்கனங்களைக் கடைப்பிடிக்க உதவுவதாகவும் காணப்பட்டது. இதனால் பல. நோ. கூ. சங்கம் பொதுமக்களுக்கு ஒரு சிறந்த சேவையைச் செய்யமுடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

பல. நோ. கூ. சங்கம் சிறப்பாக தொழிற்படுவதற்கு அக்காலத்தில் பலம் வாய்ந்ததோர் நிதி இயக்கமொன்று அவசியமாக இருந்தது. ஏற்கனவே உருவாக்கப்பட்ட கூட்டுறவு சமஷ்டி வங்கியும், கூட்டுறவு மாகாண, மாவட்ட வங்கியும் எதிர்பார்த்த பலாபலன்களைத் தராதபடியால் 1961ல் மக்கள் வங்கி என்ற நிதிநிறுவனம் அரசினால் உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் மக்கள் வங்கி ஏற்கனவே கூட்டுறவுக்காக உருவாக்கப்பட்ட நிதி அமைப்புக்களை தன்னகத்தே அடக்கி இணைத்துக் கொண்டதுடன் கூட்டுறவுக்கு வேண்டிய நிதிவசதியினை அளிக்கும் ஒரு கூட்டுறவு வங்கியாகத் தொழிற்படவும் தொடங்கியது. இம் மக்கள்வங்கியால் கூட்டுறவுக்கென 1964ல் உருவாக்கப்பட்டதுதான் கிராமிய வங்கியாகும். கிராமியத்துறையினருக்கு பாரிய வங்கிச் சேவையை அளிக்கும் வகையில் கிராமிய வங்கிகள் உருவாக்கப்பட்டன. இவற்றின் நிர்வாகம் கூட்டுறவுச் சங்கங்களினாலும், நிதி மக்கள் வங்கியினாலும் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் அறுபத்துக்களில் தேசிய ரீதியாக இலங்கை விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம், இலங்கை கூட்டுறவு ஜவுளி உற்பத்தியாளர் சங்கம், இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் என்பன உருவாக்கப்பட்டன. இவைகள் அரசினால் உருவாக்கப்படாது மக்களினால் உருவாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பல. நோ. கூ. சங்கமானது அறுபத்துக்களின் பிற்பகுதியில் போதிய நிதிவசதியினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் கஷ்டமடைந்தது மட்டுமன்றி ஊழியர்களுக்கு குறைந்த சம்பளம், குறைந்த ஆளணிப்பயிற்சி, பொருத்தமான கட்டிட மின்மை, பொருத்தமான தலைமை இன்மை போன்ற பல்வேறு குறைபாடுகளைக் கொண்டு இருந்தது. இதனை மேலும் மோசமடையச் செய்தது அரசின் நியமன நிர்வாகசபையாகும். முகாமைச்சபை அரசினால் நியமனம் செய்யப்படும் நிலைமை மக்களின் கூட்டுறவு முன்னேற்றம் எனும் நோக்கை முற்றாக இல்லாமற் செய்து விட்டது. இதனால் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டியிருந்தது. எனவே 1968ல் திரு. வெயிட்லோ என்பவரது தலைமையில் ஒரு ஆணைக்குழு அரசினால் நியமிக்கப்பட்டு கூட்டுறவின் புனரமைப்புப் பற்றி ஆலோசனை கோரப்பட்டது. அக்குழு 1970ல் செய்த சிபார்சின் பேரில் 1971ல் பல. நோ. கூ. சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இலங்கையின் கூட்டுறவு இயக்க வரலாற்றில் ஐந்தாவது காலகட்டமாக கருதப்படுவது 1971ல் ஆரம்பமாகிய புனரமைக்கப்பட்ட பல. நோ. கூ. சங்கங்களைக் கொண்ட காலப்பகுதியாகும். இப்புனரமைப்பானது பின்வரும் மாற்றங்களை பல. நோ. கூ. சங்கங்களில் கொண்டு வந்தது. அவை:

1. சிறிய அளவிலாக இருந்த 5818 சங்கங்களை ஒன்றிணைத்து 372 பெரிய பல நோ. கூ. சங்கங்களாக மாற்றியமைத்தது.

2. உறுப்பினர்களின் அங்கத்துவத்தை அதிகரித்து அதிகமானோர் சங்கத்தில் பங்கு கொள்வதனை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு உறுப்பினர் வாங்கக் கூடிய பங்கொன்றின் பெறுமதியை 50 ரூபாவிலிருந்து 1 ரூபா ஆக குறைந்திருந்துது.

3. ஒரு பல. நோ. கூ. சங்கம் குறைந்தது ஒரு கிராமிய வங்கியையாயினும் கொண்டிருக்க வேண்டுமென்ற நிபந்தனையினால் 1971ல் 11ஆக இருந்த கிராமிய வங்கிகள் 1972ல் 232 ஆக அதிகரித்திருந்தன.

4. ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவதன் மூலமும், இடமாற்றங்களை மேற்கொள்வதன் மூலமும் மோசடிகளை குறைக்கத் தீர்மானித்தது.

இது போன்ற பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துவதாக மறு சீரமைப்பு அமைந்தது. இதன் பிரகாரம் பின்வரும் அனுகூலங்கள் பல. நோ. கூ. சங்கங்களில் ஏற்பட்டன. அவை:

(அ) பெருந்தொகை அங்கத்தினர்களைச் சேர்த்து பேரளவு நிதியினைத் திரட்டிக் கொள்ள முடிந்தது.

(ஆ) பெருந்தொகை அங்கத்தினர்களில் திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து முகாமையைச் சிறப்படையச் செய்ய முடிந்தது.

(இ) வளங்களை ஒன்று திரட்டுவதன் மூலம் சிறந்த கொள்வனவுப் பலத்தைக் கொண்டிருக்க முடிந்தது.

(ஈ) செயற்பாட்டுப் பிரதேசம் பெரிதாகையினால் சிறந்த திட்டமிடற் கூறு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது.

(உ) பெருந்தொகை மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து நாட்டு மக்களின் வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்க்க முடிந்தது.

(ஊ) ஊழியர்களுக்குக் கூடிய சம்பளங்களையும் ஏனைய நல வசதிகளையும் ஏற்படுத்தி ஊழியர்களின் வினைத்திறன் ( Productivity ) அதிகரிக்க வாய்ப்பளித்தது.

(எ) கிராமிய பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் கிராமிய வங்கிகள் கடன்களை வழங்கியதோடுமட்டுமன்றி, மக்களின் சேமிப்புக்களையும் தூண்டி மக்களிடையே வங்கிப் பழக்கத்தை ஏற்படுத்தியது.

(ஏ) பொதுமக்களுக்குப் பல்வேறு துறைகளிலும் பணியாற்றக்கூடியதாகவிருந்தது.

இது போன்ற பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுத்தந்தது ஆனாலும் புனரமைப்பு எதிர் பார்த்ததனைப்போல் கூட்டுறவு இயக்கமானது வளர்ச்சியடைய முடியாமல் இருந்தது. அதற்குரிய முக்கிய காரணம்அதுகொண்டிருந்த நிர்வாக அமைப்பு

முறையே எனச் சொல்லலாம். அரசாங்கம் கூட்டுறவில் தனது ஆதிக்கத்தினைப் பெருமளவில் கொண்டிருக்கவும் நிலை நிறுத்தவும் வேண்டி நிர்வாக சபை உறுப்பினர்களில் 9 பேரை தனது நியமனமாகவும், மக்கள் 5 பேரையும், ஊழியர் ஒருவரையுமாகச் சேர்த்து மொத்தமாக 15 பேர் இயக்குனர்சபை உறுப்பினராக இருப்பதை உறுதி செய்தது. இப் புதிய நிர்வாக அமைப்பு இயக்குனர் சபை உறுப்பினர்களிடையே கருத்து விசுவாச மோதல்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்தியது. அதுமட்டுமன்றி இயக்குனர் சபை உறுப்பினர்களுக்குப் பாரிய வர்த்தக நிறுவனமொன்றினை முகாமைப்படுத்தக்கூடிய நிர்வாக அறிவும், அனுபவமும், ஆர்றலும் இருக்கவில்லை. அத்தகைய திறமையானவர்கள் கூட்டுறவுக்கு வரப் பின்னின்றனர். காரணம் சம்பள மீளாய்வுக்குப் பின்னரும்கூட கூட்டுத்தாபன, தனியார் நிறுவன ஊழியர்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தைப்போற் கூட்டுறவின் ஊழியர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் கூட்டுறவு நிர்வாகத்திற்கும், இயக்கத்திற்கும் வேண்டிய திறமையான ஊழியர்களைப் பெற முடியாதிருந்தது.

இலங்கையின் 1971ம் ஆண்டிற் கூட்டுறவு மறு சீரமைப்பு எதிர்பார்த்த பலாபலனை அளிக்க முடியாமல் போனாலும் கூட்டுறவுத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் கூட்டுறவின் இலாபம் உழைக்கும் ஆற்றல் அதிகரித்து வருவதனை எடுத்துக்காட்டுவதாக விளங்குகின்றன. புனரமைப்பைத் தொடர்ந்து கூட்டுறவு இயக்கத்தின் பணியும் செயற்பாடும் அதிகரித்து வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது. இலாபத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புக்குக் காரணம் கூட்டுறவின் செயற்பாட்டு விஸ்தரிப்பு என்றே கூறமுடியும். சிலசங்கங்கள் நட்டத்தில் இயங்குவதற்குக் காரணம் நுகர்பொருள் பற்றுக்குறை என அச்சங்கங்களின் பொது முகாமையாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்துடன் போக்குவரத்துப்பிரச்சனை, அரசியல் தலையீடுகள் என்பனவும் நட்டத்தில் இயங்குவதற்கான துணைக்காரணங்களாகக் கூறப்படுகின்றன. கணக்காய்வாளர்களின் கருத்துப்படி பொருட்குறைவே (Leakages) ஒரு முக்கிய குறைபாடாக காணப்படுகின்றது. அத்துடன் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்ற கடனை மக்கள் திருப்பிச் செலுத்தாமல்இருந்தமையும் அவற்றின் குறைபாடாகச் சொல்லப்படுகிறது.

## இலங்கைக் கூட்டுறவின் நிறுவன அமைப்பு:

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் நிறுவன அமைப்பு மூன்று மட்டங்களில் பரந்து காணப்படுகின்றது. உள்ளூர்மட்டத்தில் காணப்படும் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள், வழக்கமாக மாவட்டங்களில் காணப்படும் இடைத்தர நிறுவனங்கள், தேசிய மட்டங்களில் காணப்படும் உயர் நிறுவனங்கள் என்பன இவையாகும். ஆரம்ப மட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்இலங்கையில் தற்போது 319ஆக காணப்படுகின்றன. இதில் நுகர் பொருள் விநியோகத்திற்காக 284 சங்கங்களும் மிகுதி மீன்பிடிக்காகவும், கைத்தொழிலுக்காகவும் உருவாக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எனச் சொல்லிவிடலாம். மாவட்ட ரீதியில் கட்டுப்பாட்டினைக் கொண்ட கூட்டுறவு இயக்கத்துக்கு உதாரணமாக 1973ல் உருவாக்கப்பட்ட இலங்கை கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் சம்மேளனம், (MARKFED) வடபகுதி விவசாய கூட்டுறவு யூனியன் ஆகியவற்றைச் சுட்டலாம். தேசியரீதியில் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்கைசார் உயர்நிறுவனமாகக் காணப்படுவது இலங்கைத் தேசிய கூட்டுறவுக் கவுன்சிலாகும். அங்கத்தவர்களுக்கு கூட்டுறவுக் கல்வியை போதித்தல், கூட்டுறவு விவகாரங்கள் தொடர்பான பிரதம ஆலோசகராக விளங்குதல் போன்ற நோக்கத்தைக் கொண்டுள்ள கவுன்சில் மட்டுமல்லாது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், மக்கள்வங்கி, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்றவற்றினையும் தேசிய மட்டத்திலான நிறுவனங்களெனலாம். அத்துடன் 1972ல் உருவாக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, 1973ல் ஆரம்

பிக்கப்பட்ட கூட்டுறவு முகாமைச் சேவைகள், மத்திய நிலையம் போன்றனவும் தேசிய மட்டத்திலான நிறுவனங்களேயாகும். கூட்டுறவுக்கான நவீன தலைமைத்துவம் அதன் திறமையான இயக்கம் என்பவற்றுக்கு இன்னமும் எமது தேசிய நிறுவனங்கள் வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலிருக்கின்றன எனக் கருதிய போதும் நிறுவன அமைப்பில் ஒரு கட்டுக்கோப்பை ஏற்படுத்தி இருக்கின்றதெனச் சொல்லலாம். கூட்டுறவு பயிற்சி நிறுவனம், கூட்டுறவுக் கல்லூரி என்பன தேசியமட்ட நிர்வாகத்தில் மேற்கொள்ளப்படும் கூட்டுறவு பற்றிய கல்வியினைப்பரப்பும்!நடவடிக்கைகள் எனக் கூறிக்கொள்ளலாம். இவற்றின் மூலம் மக்களிடம் கூட்டுறவுக்கல்வியை புகுத்தி கூட்டுறவுபற்றிய அறிவை மக்களிடம் உயர்த்த முடியுமென அரசு கருதுகின்றது.

## இலங்கைக் கூட்டுறவின் எதிர்காலம்:

இலங்கையில் கூட்டுறவானது எதிர்பார்த்த பலாபலனை அளிக்கமுடியாமல் போனமைக்கான காரணங்களில் பிரதானமானது அரசின் தலையீடு என்று சொல்லிக் கொள்ளலாம். எழுபதுகளின் நடுப்பகுதியில் கூட்டுறவு அரசின் கைப்பொம்மையாக மாறிவிட்டமையினுல் அரசாங்கக் கொள்கைகளை செயற்படுத்தும் முகவர் நிலையங்களாக விளங்கத் தொடங்கின. இதனுல் மக்கள் கூட்டுறவுடன் பெருமளவு தொடர்புகளைக் கொண்டிருக்க விரும்பாதிருந்தனர். எனவே இந்நிலைமையை மாற்றியமைப்பதன் மூலமே கூட்டுறவின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம் என்பதனை 1977ல் பதவிக்கு வந்த புதிய அரசு ஊகித்தது. கூட்டுறவு என்பது மக்களது அதாவது அங்கத்தவர்களது கூட்டுறவைப் பொற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிறுவனமாகும், இக்கருத்தில் மக்கள், சங்க பொதுக்கூட்டங்கள், குழுக்கூட்டங்கள் என்பவற்றில் கலந்து கொள்வது அவசியமாகும். அத்துடன் சங்க நிர்வாகிகளாக அல்லது ஊழியர்களாக இருத்தல் போன்றவற்றிற்கு மக்களைத் தூண்டுதல் வேண்டுமென்ற கருத்தை அரசு வலியுறுத்தியது. இதனுல் அரசின் நியமன உறுப்பினர் கூட்டுறவின் நிர்வாகசபையில் அங்கம் வகிக்கக் கூடாது என்பதனை மையமாகக்கொண்டு தற்போது பதவியிலிருக்கும் அரசாங்கத்தால் கூட்டுறவுச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி இயக்குனர் சபையில் 6 உறுப்பினர்களே அங்கம் வகிப்பர். இதில் 5 பேர் உறுப்பினர்களாலும் ஒருவர் ஊழியர்களினுலும் தெர்ந்தெடுக்கப்படுவர். இவர்களை கிளைச்சங்கத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் தேர்ந்தெடுப்பர். இந்நிலைமை அரசியல் வாதிகளுக்கு கூட்டுறவின் நிர்வாகிகள் பயந்து, கட்டுப்பட்டு நடக்கும் நிலைமையினைப் போக்கி சுதந்திரமாக கூட்டுறவு ஊழியர்கள் இயங்க வழி வகுக்கின்றது. இதன் பிரகாரம் கூட்டுறவு சிறப்பாக வளர்ச்சியடைந்து தனது அபிவிருத்திக்கு உதவும் வகையில்இலாபத்தினையும் உழைத்துக் கொள்ள முடியும். இதன் முதற்கட்ட வேலையாக கூட்டுறவு சங்கங்களின் தேர்தல்கள் எல்லாம் நடைபெற்று இப்பொழுது முடிவுறும் தருணத்திலிருக்கின்றன. இப்புதிய கூட்டுறவுப் புனரமைப்பானது கிராமியப் பொருளாதாரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக அமைக்கப்பட இருக்கின்றது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கிராமியப் பொருளாதாரம் ஒரு முக்கிய இடத்தை வகிப்பதனுல் அதன் வளர்ச்சியில் கூட்டுறவு முக்கிய கவனத்தைச் செலுத்த வேண்டுமென அரசு விரும்புகிறது. இதனுல் 1980 ம் ஆண்டு தொடக்கம் மக்களால், மக்களுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் நடைமுறைக்கு வரும் அதே வேளையில் அதன் வளர்ச்சிக்கு உதவி செய்யும் வகையில் தனது கட்டுப்பாட்டினை மட்டும் அரசு பிரயோகிக்கத்திட்டமிட்டு இருக்கிறது. இதனுல் எதிர்காலத்தில் இலங்கையில் கூட்டுறவு இயக்கம் மக்களின் ஒத்துழைப்புடன் ஒரு துரிதமான வளர்ச்சியை அடைந்துவிடும் எனக் கூறலாம்.

# இணுவில் சைவ மகாஜன விதாலய வாழ்த்து விருத்தங்கள்

அமரர், சி. ஆறுமுகதாசன்,
இளைப்பாறிய ஆசிரியர்,
இணுவில்.

மகாஜன விதாலயம் இணுவைக்கோர் மணிமகுடம்
மகாஜன விதாலயம் சைவமாணவர்க்கோர் வரப்பிரசாதம்
மகாஜன விதாலயம் திரு அப்பாக்குட்டியார் விதாலயமே
மகாஜன விதாலயம் வாழ்க என்றும் மிக வாழியவே (1)

விண் மேலுயர் விஞ்ஞான கூடம்; அவ்விண் ஒளிரும்
தண்ணர் மதிபோலும் தலைமை அதிபர்; அம் மதியைச் சூழ்ந்த
கண்ணியமார் ஆசிரிய உடுக்கள் கவினிணுவை
பண்ணிய புண்ணியம் மகாஜன வித்தியாலய மானதுவே (2)

உத்தமதான உயர் கல்வி போதிக்கும் வித்தகரே!
முத்தமிழின் சுவை முக்கனி ஊட்ட மாணவர்கள் முன்னும்
எத்தகைய மா பரீட்சைகளிற் சித்திகாண் மகாஜன
வித்தியாலயம் சிறந்தது என்று விளம்புவரே (3)

செகராச சேகரப்பிள்ளை ஞானப்பால் தித்திக்க ஊட்ட,
திகழ் ஞான வேற்பிள்ளை செந்தமிழ் தெளிவு காட்ட,
சொகு சாம் மகாஜன விதாலயப் பிள்ளை துள்ளிஆட,
புகு மாசைவப் பெற்றோர் நல் இன்முகம் காட்டிப் புகழுவரே. (4)

# கணிதம் – கற்றல், கற்பித்தல்

வே. நடேசபிள்ளை
கணிதக்கல்வி ஆலோசகர்

"எண்ணும் எழுத்தும்கண்ணெனத் தகும்'' என்ற வாக்கு பண்டைக் காலந்தொட்டு கணிதத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முதன்மையையும், முக்கியத்துவத்தையும் காட்டுகின்றது. இதையே வள்ளுவரும்,

> ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

எனக் கூறிப்போந்தார்.

கீழைத் தேசங்களில் மாத்திரமன்றி, மேலைத் தேசங்களிலும் கணிதம் முக்கிய இடம் பெற்றிருக்கின்றது. மேலைத்தேச நாகரிகத்தினதும், அறிவினதும் தொட்டில் எனக் கருதப்படும் கிரேக்க சமுதாயத்தின் தலை சிறந்த சிந்தனையாளர் பிளேட்டோ (Plato), அவர் தனது அக்கடமியின் நுழைவாயிலில் ''கேத்திரகணிதம் அறியாதான் நுழையாதிருப்பானாக' எனப் பொறித்துக் கணிதத்தின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தினர். பேகன் (Bacan) ''கணிதம் அறியாதான் ஒன்றும் அறியான்'' என்று கூறியதை இங்கு நினைவுகூர்தல் பொருத்தமானதாகும்.

சமுதாயம் மிகவும் எளிமையாக இருந்தபோது அனுபவ ரீதியாக எழுந்த கூற்றுக்களே மேலே காணப்படுபவை. ஆனால், இன்றோ சமுதாயம் பல்கிப் பெருகி வளர்ந்து சிக்கலான அமைப்பாகவுள்ளது. அதன் தேவைகளும் அனந்தம், மாற்றங்களுக்கும், தேவைகளுக்கும் ஈடுகொடுத்துக் கணிதம் கிளைவிட்டு வளர்ந்துள்ளது. பல துறைகள் உருவாகியுள்ளன. இதன் காரணமாகக் 'கணிதம்' எனக் கூறுது 'கணிதங்கள்' எனக் கூறுவது பொருத்தமானது. ஆரம்ப காலத்தில் கணிதம் என்பது 'எண், வெளி ஆசியவற்றின் விஞ்ஞானம்' எனக் கருதப்பட்டது. எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திரகணிதம், திரிகோணகணிதம் ஆகியவற்றில் மட்டும் பயிற்சி இருந்தால் போதுமானதாக இருந்தது. அத்துடன் கணிதத்தின் முக்கிய பிரயோகம் விஞ்ஞானத்துறையாக இருந்தது. கணிதத்தின் துணைகொண்டு விஞ்ஞானம் துரித வளர்ச்சியடைந்தது. இன்று ஒரு குக்கிராமத்தில் வசிக்கும் ஒருவனும் விஞ்ஞானத்தின் தாக்கத்தை உணருகின்றான். கணிதம் 'விஞ்ஞானத்தின் சேவகி' ஆகவிருந்து 'விஞ்ஞானத்தின் அரசி' என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் கணிதத்தை உபயோகிப்போரின் தொகையையும் வகையையும் அதிகரிக்கச் செய்துள்ளன. அரசியல், சமூகவியல், வணிகம் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றிற்கும் கணிதம் இன்றியமையாததாகவுள்ளது.

சமுதாயம் எளிமையாக இருந்தபோது ஒருசிலர் கணித அறிவைப் பெற்றிருந்தாலே சமுதாயத்தின் தேவைகள் யாவையும் பூர்த்தி செய்யக் கூடியதாக விருந்தது. ஆனல் இன்று அப்படியல்ல. கணிதத்தின் வெவ்வேறு துறைகளிலும் அறிவு தேவைப்படுகின்றது. அத்துடன் சமுதாய அங்கத்தவர் யாவர்க்கும் அந்த அறிவு அவசியமாகின்றது. எதிர்காலத்தில் எப்படியான கணிதஅறிவு தேவை என்பதைப் பற்றி யாரும் எதுவும்கூறமுடியாத நிலையிலுள்ளது. படசாலைக் கணிதம் பற்றி கேம்பிறிட்சில் (Cambridge) நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பிரான்செஸ் கெப்பல் (Frances Keppel) என்பவர் ''முப்பது வருடங்களின் பின் என்ன விதமாகச் சமூகம் இருக்குமென்பதும் அதில் கணிதத்தின் பங்கு என்னவாக இருக்குமென்பதும் நம்மில் எவருக்கும் தெரியாது.'' எனக் கூறியுள்ளார். ஆனல் வள்ளுவர் கூறியது போன்று, ''கணித அறிவற்றவன் கண்ணில்லாதவன் போலாவான்'' என்பது திண்ணம்.

கணிதத்தின் வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாகப் பாடசாலையில் கணிதம் கற்பிப்பதில் பல மாற்றங்கள் அவசியமாகின. பாடசாலைக் கணிதத்தில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொணரும்முகமாக இந்நூற்ருண்டின் நடுப்பகுதியில் மாபெரும் சர்வதேச இயக்கம் பிறந்தது. கணித பாடத்திட்டத்தை மாற்றியமைப்பது தொடர்பாகக் குழுக்கள், மத்தியஸ்தானங்கள், சங்கங்கள் முதலியன உலகின் பல பாகங்களிலும் தோன்றின. கணித ஆராய்ச்சியாளர்கள், உளநூலறிஞர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள் எல்லோரும் ஓர் அணியில் சேர்ந்து கணிதபாடத்திட்டம் கற்பித்தல் முறைகள் பற்றி ஆராய்ந்தனர். கணித வளர்ச்சி, சமுதாயத்தின் கேள்வி (Demand) சிறுர்களின் அறிவு வளர்ச்சி, கணிதம் கற்றல் பற்றிய உளநூலாராய்ச்சி முடிபுகள் முதலிய காரணிகள் கணித பாடத்திட்டத்தைத் தீர்மானித்தன. இலங்கையில் இம் மாற்றம் 1960-ம் ஆண்டளவில் ஏற்பட்டது. அறுபதுகளில் கணிதபாடத்திட்டத்தில் பரீட்சார்த்தமாக சில புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டன. அந்த அனுபவத்தைக் கொண்டு எழுபதுகளில் மேலும் பல மாற்றங்கள் கணித பாடத்திட்டத்தில் கொண்டு வரப்பட்டன.

## கணிதம் கற்பிப்பதன் நோக்கங்கள்

கணிதம் கற்பதன் நோக்கங்களை கணிதபாடத்தில் அறிதற்குரிய (Cognitive) நோக்கங்கள், பொதுவான நோக்கங்கள் என வகைப்படுத்தலாம்.

**அறிதற்குரிய நோக்கங்கள் :**

- ஸ்தூல நிலையில் (Abstract) கோலங்களைக்காணல்
- சுயேச்சையாகக் கணிதத்தை உண்டாக்குவதில் திறமை

- கணித அறிவை விருத்தி செய்வதற்கான அடிப்படைக் கருத்துக்களையும், குறியீடுகளையும் அறிதல்.
- மிகவும் முக்கியமான திறமைகளை வளர்த்தல்
- கணித உண்மைகளை அறிதல்

**பொது நோக்கங்கள் :**

- கணிதத்தை ஒவ்வொருத்தராலும் கண்டுபிடிக்க முடியும்.
- கணிதத்தைக் கண்டுபிடிக்கும் திறமையையும், அதன் எல்லையையும் ஒவ்வொருவரும் அறிதல்.
- கணிதத்தின் திறந்த முடிவை (இறுதி முடிவல்லாதது) உணர்ந்து கொள்ளல்.
- தனது கணித அறிவின் உண்மை நிலையை விமர்சிக்கும் மனப்பாங்கு.
- கணிதத்தில் 'படித்த உள்ளுணர்வின்' நிலையை ஏற்றுக் கொள்ளல்.
- கணிதம் விந்தையானது, உபயோகமானது, பொழுதுபோக்கானது என்பதை உணர்தல்

**புதியதும், பழையதும் :**

கணித பாடத்திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பதற்கு 'புதியது' அல்லது 'தற்கால' என்ற சொற்கள் புகழ்ச்சியைக் குறிக்குமாப்போல் உபயோகப்படுகின்றது. இம்மாற்றங்களுக்கு முன்பிருந்தவற்றைப் 'பழையது' அல்லது 'பாரம்பரிய' என்ற சொற்களால் குறிப்பிடும் போது ஏளனக் கருத்தில் கையாள்வதை நாம் காண்கின்றோம். ஆனல் உண்மை அப்படியல்ல. புதியனவற்றில் எப்படித் தேவையான, உபயோகமான பகுதிகளுள்ளனவோ, அப்படிப் பழையதிலும் விரும்பத்தக்க அம்சங்களுள. 'புதியது' என்று கூறும்போது, பெரும்பாலும் தற்காலக் கற்பிக்குழ் முறையே குறிக்கப்படுகின்றது. குருட்டாம்போக்கில் மனனஞ் செய்து, சொல்லிக் கற்கும் முறையை சில நூற்றுண்டுகளுக்கு முன்னரே கொமேனியஸ் (Comenius) எதிர்த்ததை நாமறிவோம். எமது கற்பித்தல் முறைகளை அவதானிக்கும்போது கொமேனியஸின் கருத்துகள் புதியனவே.

**கணித பாடத்திட்டம் :**

தற்கால சேவைக்கேற்ப பல பகுதிகள் கணித பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள் தொடை, தொடர்புகள், தாயங்கள், புள்ளிவிபரவியல், நிகழ்தகவு, ஏகபரிமாண திட்டப்படுத்தல் போன்றவை

குறிப்பிடத்தக்கன. இவை கணிதத்திற்குப் புதியனவல்ல. பல்கலைக்கழக நிலையில் சில பகுதிகள் நீண்ட காலமாகக் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் பாடசாலைக் கணிதத்தைப் பொறுத்த வகையில் இவை புதியவையே. பாடத்திட்டம் மாறும்போது கற்பித்தல் நோக்கங்கள், இலக்குகள், முறைகள் மாறுவது தவிர்க்க முடியாததாகும்.

**சகலருக்கும் கணிதம்:**

சமுதாயக் கேள்விக்கிணங்க சகல பாடசாலை மாணவருக்கும் கணிதம் கற்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. 'சகலருக்கும் கணிதம்' என்ற தத்துவம் நடைமுறைக்கு வருவதற்குமுன் ஒருசிலருக்கே - திறமை கூடிய மாணவருக்கே - கணிதம் கற்பிக்கப்பட்டது. எமது நாட்டில் இது பாடசாலை சென்ற மாணவர்களில் 30 சதவீதமாக இருந்தது. எஞ்சியோர் எண்கணிதத்தை அல்லது வர்த்தக கணிதத்தைக் கற்றனர்.

சகலருக்கும் கணிதம் கற்பிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டபோது பல பிரச்சனைகள் தோன்றின. இதிலொன்று சகலருக்கும் தேவையான ஒரு அடிப்படை அறிவு கொடுக்கப்பட வேண்டும். இதுவும் பாடத்திட்டத்தைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக விளங்குகின்றது. இதை நோக்காக வைத்துத் தீர்மானிக்கப்படும் ஒரு பாடத்திட்டத்தை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, 'கணித அறிவு குறைந்துவிட்டது' — குறிப்பாக முன்பிருந்த பாடத்திட்டங்களுடன் ஒப்பிடும்போது — என்ற அபிப்பிராயம் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனால் கற்பித்தல் முறைகளை மாணவர் நுண்ணறிவு, இயல்பூக்கம் ஆகியவற்கு ஏற்றவகையில் மாற்றியமைத்தால் பெரும்பாலான மாணவர்கள் கணிதத்தில் பரந்த அறிவைப் பெறுவார்கள் என்பது அநுபவ உண்மையாகும்.

**கணிதம் ஒருமையானது:**

பழைய பாடத்திட்டங்களிலே கணிதத்தின் வெவ்வேறு பகுதிகள் தனித்தனிப் பகுதிகளாக, ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாகக் கற்பிக்கப்பட்டன. இதனால் மாணவர் ஒரே விடயத்தை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்தும் அதிலுள்ள பொதுக்கருத்தை விளங்கிக்கொள்வதில்லை. அத்துடன் காலமும் விரயமாகின்றது. மாணவர் விளங்கிக் கொள்ளாமலே பல விடயங்களை மனனஞ்செய்து பரீட்சை முடிந்தவுடன் மறந்துவிடும் நிலை இருந்தது. ஏனெனில் தொடர்பில்லாத தனித்தனி விடயங்களை - குறிப்பாக விளங்காத விடயங்களை நீண்டகாலம் ஞாபகத்தில் வைத்திருப்பதோ, புதியதொரு நிலையில் பிரயோகிப்பதோ முடியாதது. ஆனால் கணிதத்தை ஒருமையாகப் பல்வேறு பகுதிகளுக்குமிடையேயுள்ள பொதுக் கருத்துக்களைத் தொடர்புபடுத்திக் கற்றல், மேற்கூறிய குறைபாடுகளை நீக்கிவிடும். அத்துடன் ஒவ்வொரு மாணவனும் தன்தன் திறமைக்கேற்ப, தேவைக்கேற்ப, முயற்சிக்கேற்ப கணிதஅறிவை விளங்கி

அறிந்துகொள்ளும் வாய்ப்பேற்படுகின்றது. தற்காலக் கற்பித்தல் முறைகள் மாணவர் விளங்கிக் கொள்வதைச் செய்வதற்கும், செய்வதை விளங்கிக் கொள்வதற்கும் சந்தர்ப்பமளிக்கின்றன.

**ஸ்தூல நிலைக் கருத்துக்கள் :**

கணிதக் கருத்துக்கள் ஸ்தூல நிலையிலுள்ளவை. ஸ்தூல நிலையிலுள்ள கருத்துக்களை ஒருவர் எடுத்துக் கூறி இன்னொருவர் அறிந்துகொள்ள முடியாது. ஒரு சிலர் அறிந்து கொள்ளலாம். வரைவிலக்கணங்களிலிருந்து அறிந்து கொள்பவர் மிகவும் சிலரே. எண்ணக் கருவை வேறு முறையில் விளங்கிக் கொண்டவர்கள் அக்கருத்தைச் சொற்சிக்கனமாக, அழகாக, வரைவிலக்கணமாகக் கூறலாம். ஆனால் அத்துறையில் அநுபவரீதியான அறிவில்லாதவர் அதனை விளங்கிக் கொள்ளமுடியாது. இதை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம்.

பிறவியிலே கண்பார்வையற்றிருந்த ஒருவர் நவீன மருத்துவ உதவியுடன் பார்வை பெறுகின்றார் எனக் கொள்வோம். அவருக்கு 'சிவப்பு', என்ற 'நிறத்தை' எவ்வாறு உணர்ந்து கொள்ளச் செய்யலாம் எனச் சிந்திப்போம். சிவப்பு நிறத்துக்குரிய வரைவிலக்கணத்தைக் கூறினால் உதவியாக இருக்குமா? வரைவிலக்கணத்தை மனனஞ் செய்தாலும் அவரால் சிவப்பு நிறத்தை அடையாளங் காணமுடியுமா? அல்லது சிவப்பு நிறத்தை அனுபவரீதியாக உணர்ந்து அறிந்து கொள்ளவேண்டும். ஒரு சிவப்பு நிறப்பந்தை அவருக்குக்காட்டி 'இது சிவப்புப்பந்து' என்று கூறினால் அவர் சிவப்பு நிறத்தை அறிந்து கொள்வரா? சந்தேகமே. சில வேளைகளில் பந்தின் வடிவத்தையோ அல்லது அது செய்யப்பப்பட்ட ரப்பரையோ அல்லது பந்தைத் தொடும்போது ஏற்படும் உணர்வையோ 'சிவப்பு' என்ற சொல் குறிப்பதாகப் புரிந்து கொள்ளலாமல்லவா? பால் விக்கிக் குழந்தை இறந்த நிகழ்ச்சியைப் பார்வை அற்ற ஒருவர் கேள்விப்பட்டுக் குழந்தையின் தாயை நொந்து கொண்ட கதை நாம் அறிந்ததே. இதிலிருந்து ஒரு உதாரணத்தின் மூலம் ஒரு எண்ணக் கருத்தை அறிந்து கொள்ள முடியாது என்பது தெளிவாகின்றது. பல உதாரணங்கள் தேவை அவ்வுதாரணங்களில் நாம் பிரித்தறிய வேண்டிய எண்ணக்கரு பொதுவாக இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| இந்தப் பந்தின் நிறம்<br>அந்தப் பையனின் நிறம்<br>இந்தப் பேனையின் நிறம்<br>அந்தக் கூரையின் நிறம் | } சிவப்பு |

இப்படிப் பல உதாரணங்களிலிருந்து 'சிவப்பு' என்ற எண்ணக் கருவை அறிந்து கொள்ளலாம்.

அடுத்த நிலையில் வேறொரு நிறப் பொருளைக் காட்டி இது சிவப்பு 'நிறம் அல்ல' என்ற ஒப்பிட்டறியும் முறை உபயோகிக்கப்படவேண்டும். அதாவது ஒரு தொகுதிப் பொருட்களில் இருந்து சிவப்பு நிறப் பொருட்களை ஒரு கூட்டமாகவும், சிவப்பு நிறமற்றவையை வேறொரு கூட்டமாகவும் பிரித்தறிதல் அடுத்த நிலையாகும்.

சிவப்பு, பச்சை, நீலம் போன்ற கருத்துக்களை அறிந்து கொண்ட ஒருவரால் தான் நிறம் என்ற கருத்தை அறிந்து கொள்ள முடியும். ஏனெனில் நிறம் என்ற கருத்து 'சிவப்பு' 'நீலம்' போன்ற கருத்துக்களிலும் உயர் நிலையிலுள்ளது. இதை நாம் பின்வருமாறு வரைபாகக் காட்டலாம். (கீழிருந்து மேல் நோக்கி வாசிக்கவும்)

இரண்டாம் நிலைக்கரு
(உயர்) ↑

முதல் நிலைக்கரு ↑ ↑ ↑

பண்பிற்குரிய உதாரணங்கள் 1,2,3.4,5 1,2,3,4,5 1,2,3,4,5

## உளநூல் முடிபுகள்

மேலே கூறப்பட்ட உதாரணம் போன்றதே கணிதக் கருத்துகளாகும். ஆகவே மாணவர் கணிதத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் செயல்கள் அவசியம். செயல்கள் மூலமே மாணவர் கணிதக் கருத்துக்களைப் பிரித்தறிந்து புரிந்து கொள்ள முடியும். சொல்லிக் கற்றலிலும் பார்க்க அனுபவரீதியாகக் கற்பதே சிறந்தது. கணிதம் கற்பிப்பது தொடர்பான பல புதிய கருத்துக்களை அண்மைக்காலங்களில் பியாசே **(JEAN PIAGET)** புருணர் **(JAMES S.BRUNER)**, கக்னே **(ROBERT M. GAGNE)**, டீன்ஸ் **(Z.P.DIENES)**, ஸ்கெம் **(RICHARD R SKEMP)** போன்றவர்களின் உளநூல் ஆராய்ச்சிகள் உலகுக்களித்துள்ளன. பியாசே குழந்தைகளின் தர்க்க அறிவு எண் பற்றிய அறிவு முதலியன எப்படி வளர்ச்சி யடைகின்றது. மாறிலிப் பண்புகளை எப்படி எந்தெந்த வயதில் அறிந்து கொள்கின்றனர் என்பதையும்; புருணர் தனது ஆராய்ச்சி மூலம் எந்தக் கடினமான விஷயத்தையும் எந்த வயதுள்ள மாணவருக்கும் அவர்களின் நிலைக்கேற்ற விதமாகக் கற்பிக்கலாம் எனவும்; கணிதக் கருத்துகள் எப்படித் தோன்றுகின்றன; அவற்றை எப்படி வளர்க்கலாம், என்பதை ஸ்கெம்மும், கற்பித்தல் முறைகள், கற்பிக்கும் நிபந்தனைகள் போன்றவற்றை கக்னே, டீன்ஸ் முதலியோரும் ஆராய்ந்துள்ளனர். இவர்களின் ஆய்வுகளின் பலனாகப் பல புதிய கற்பித்தல் முறைகள், உத்திகள், கட்புல, செவிப்புலச் சாதனங்கள் விருத்தியாக்கப்பட்டுள்ளன. கற்பித்தல் முறையில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக நிலை வரை ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

**சேவைக்காலப் பயிற்சி :**

பாடத்திட்ட மாற்றங்களால் கூடுதலாகப் பாதிக்கப்படுபவர்கள் ஆசிரியர்களே. பாடத்திட்ட மாற்றங்கள் வரும்போது அவற்றை ஏற்றுச் ஏற்றுச் செயல் படுத்த ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம்.

சகலருக்கும் கணிதம் கற்பிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டபோது கணித ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றுக்குறை ஏற்பட்டது. அதனல் பெருப்தொகையான இளைஞர்களும், யுவதிகளும் க. பொ. த உயர்தர, சாதரணதர கல்வித் தராதரங்களுடன் ஆசிரிய சேவையில் சேர்ந்தனர். அவர்களிற் பலர் முதல் நாள் மாணவராகவும் அடுத்தநாள் ஆசிரியர். களாகவும் மாறிய இரச வாதத்தை நாம் கண்டோம்.

இந்த ஆசிரியர்கள் எல்லோருக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று. இதன் காரணமாக, சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் ஆசிரிய பயிற்சியின் ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒரு நாள், இருநாள் பயிற்சி வகுப்புக்களில் புதிய கணிதப் பகுதிகளில் அறிவு, உளநூலறிவு, கற்பிக்கும் முறைகள் கற்பித்தலை ஒழுங்கு செய்தல், கற்பித்தல் சாதனங்கள், மதிப்பீடு செய்தல் ஆகிய விடயங்கள் இடம் பெற்றன.

**பெற்ருேர் :**

பெற்ருேர் தாங்கள் பாடசாலையில் கற்றகணிதத்திற்கும், இப்பொழுது தங்கள் பிள்ளைகள் கற்கும் கணிதத்திற்கும் இடையில் பாரிய வித்தியாசங்களை அவதானிக்கின்றனர். பெற்ருேரின் ஒத்துழைப்பின்றி எந்தவொரு கல்வித்திட்டமும் வெற்றி பெற முடியாது. ஆகவே மாற்றங்கள் பற்றிப் பெற்ருேரும் அறிந்து கொள்ள வழி செய்தலவசியம். பொது சனத்தொடர்பு சாதனங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் முதலியன இத்துறையில் ஒத்துழைப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

**முடிவுரை :**

ஆசிரியர்களின் பணி, கணிதம் கற்பிப்பதல்ல. கணிதஅறிவை மாணவனே பெறக்கூடிய சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதே ஆசிரியர்களின் தலையாய பணியாகும். அத்துடன் துரிதமாக மாறிவரும் விஞ்ஞான, சமுதாய மாற்றங்களின் தேவைகளுக்கேற்ற முறையில் கணித அறிவை பாடசாலைக்கு வெளியிலும் அறிந்து கொள்ளும் – வாழக்கற்றல்- முறையை மாணவர், அறியச் செய்தல் வேண்டும். செயல் மூலம் கற்கும் போது மாணவனே செயல்களில் ஈடுபட்டுக் கணிதக்கருத்துக்களை அறியும் போது ஒவ்வொருவரும் தன் தன் திறமைக் கேற்ப கணிதத்தை அறிந்து கொள்ளமுடியும். அந்நிலையில் கணிதம் மாணவரை இரண்டு பிரிவினராக- கணிதம் கற்கக் கூடியவர், கற்கமுடியாதவர் – எனப் பிரிக்காது சகலரும் கணிதத்தைக் கற்று இன்புற முடியும்.

# விஞ்ஞானத்தைக் கற்பிப்பதில் உள்ள சில பிரச்சினைகளும், அவற்றைத் தீர்ப்பதற்காய வழிகளும்

ஐ. ஜெகநாதன்,
விஞ்ஞானக் கல்வி ஆலோசகர்.

பொதுவாக ஆராயுமிடத்து கல்வியியலாளர்களாகிய நாம் எமது கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய பிரச்சினைகளுட் சில பின்வருவன ஆகும். அவையாவன :

அ) செயல்மூலம் விஞ்ஞானம் கற்பிப்பதற்கு அனேக கிராமப்புற பாடசாலைகளில் ''விஞ்ஞான அறை'' வசதியின்மை, உபகரண வசதியின்மை, ஆசிரியர் பற்றுக்குறை ஆகிய மூன்றும் மிகவும் முக்கிய பிரச்சினைகளாக இருந்துவருகின்றன.

ஆ) மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளுக்குச் சமுகமளிப்பதால்(Private Tutions) ஆசிரியர்கள் வகுப்பறைகளில் சிறப்பானமுறையில் கல்வி போதிக்க முடியாத நிலைமை.

(இ) விஞ்ஞான பாடத்திலுள்ள இரசாயன, பௌதீக, உயிரியல் பகுதிகளைச் சிறப்பாகக் கற்பிக்கும் ஆற்றல் அற்றநிலை.

அனேக கிராமப் புறப்பாடசாலைகளில் விஞ்ஞானம் கேட்டுப்படித்தல் மூலமாகவே நடைபெறுகின்றது. இங்கே செய்முறைகள், பரிசோதனைகள் எதுவும் செய்யமுடியாத நிலையில் உள்ளனர். காரணம் என்னவெனில் இப்பாடசாலைகளில் ஆய்வுகூட வசதி இல்லாவிடினும் ஒரு விஞ்ஞான அறைகூட இல்லாமையே ஆகும். சகல வகுப்புகளும் ஒரே மண்டபத்தினுள் வெவ்வேறுக வைக்கப்பட்டபோதிலும் இவ்வகுப்புக்கள் யாவும் ஒரே மண்டபத்தினுள் இருப்பதனுல் விஞ்ஞானபாடத்தின் போது ஆசிரியர் ஒரு பரிசோதனையைச் செய்து காட்ட அப்பாடசாலை மண்டபத்தினுள் உள்ள சிறியபிள்ளைகள் அனைத்தும் கூடி வேடிக்கை பார்த்து பாடத்தையே ஒரு குழப்பநிலைக்குக் கொண்டு வந்து விடுவார்கள். எனவே விஞ்ஞான ஆசிரியர் இந்நிலையில் பதட்டநிலையை அடைய வேண்டி இருக்கிறது. எனவே எவ்வாருயினும் பிரத்தியேகமான ஒரு தனி அறையையாவது ஒதுக்கி விஞ்ஞான கூடமாகப் பாவிக்கக் கூடிய ஒழுங்கு செய்யின் இக் குறைபாடு ஓரளவு நீக்கப்படும். இதே வேளையில் நகர்ப்புறப் பாடசாலைகளிற் போதியளவு இடவசதி, ஆய்வுகூட வசதி, உபகரண வசதி இருந்தபோதிலும் அங்கே ( உயர்தர வகுப்

புப் பிள்ளைகள் ) பரிசோதனைகளைச் செய்ய ஆய்வுகூடங்களை உபயோகிப்பதனால் 6 ம் வகுப்புத் தொடக்கம் 10 ம் வகுப்புகள் வரை விஞ்ஞான பாடப் பரிசோதனைகள் செய்ய முடியாமல் இருக்கின்றனர். இதே வேளையில் அங்கு நிலவும் இட நெருக்கடியும் ஒரு காரணமாகும். எனவே இதுவும் நகர்ப்புறப் பாடசாலைகளில் ஒரு பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது. எனவே இப்படிப்பட்ட நிலையிலும் ஒரு விஞ்ஞான அறையை 6 — 8 ம் வகுப்புகளுக்கும், இன்னொரு விஞ்ஞான அறையை 9 — 10 ம் வகுப்புகளுக்குமாக ஒதுக்கினால் செய்முறை மூலம் விஞ்ஞானம் கற்பித்தல் திருப்திகரமாக இவ்வகுப்புகளில் நடைபெறும் என்பதற்கு ஐயமில்லை.

இரண்டாவதாக மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளுக்கு ( Private Tution Classes ) ச் சமுகமளிப்பதால் ஆசிரியர்கள் சிறப்பான முறையில் கல்வி போதிக்க முடியாத நிலைமை. காரணம் ஆசிரியர் நல்ல திட்டமிட்டுப் பாட ஆயத்தம் செய்து வகுப்பில் போய்ப் பாடத்தை ஆரம்பித்து — வினாக் கேட்க உடனடியாகவே திடீர் திடீர் எனப் பிள்ளைகள் விடைகள் சொல்லுவார்கள். காரணம் என்னவெனில் பிரத்தியேக வகுப்புகளில் முன்னேற்பாடாகவே இப் பாடங்கள் கற்பிக்கப்பட்டபடியால், எனவே இந் நிலையில் ஆசிரியர் திண்டாட வேண்டி இருக்கிறது. எனவே இதுவும் எம் மாநிலத்தில் ஒரு பெரும் பிரச்சினையாகவே இருக்கிறது. எனவே இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளில் முன்னேற்பாடாகப் பாடங்களைப் படியாது — பாடசாலைகளில் ஆசிரியர் கற்றுக்கொடுத்த பின்னர் தாமாகவே தமது வீடுகளில் இருந்து தற்போது அரசினர் மனமுவந்து அளிக்கும் இலவச புத்தகங்களின் உதவியுடன் மீட்டலைச் செய்து தாம் வகுப்பில் கற்றவற்றை நன்கு பதிக்கலாம். விளங்காதவிடங்களில் மறு நாள் தமது பாட ஆசிரியர்களையே கேட்டுக் கற்கலாம். இதனால் கற்பிக்கும் ஆசிரியருக்கும் மேலும் மாணவர் மீது நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்பட்டு பாடம் இன்னும் நல்ல முறையில் மறுமுறை அமையும். இதே வேளையில் பெற்றோருக்கும் பணத்தை மிச்சம் பிடித்துக் கொடுக்கலாம். எனவே இப் பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவர் செல்லுதல் ஒரு வீணானதும் பண நஷ்டத்தையும் ஏற்படுத்து மொன்றுமாகும்.

மூன்றாவதாக விஞ்ஞான பாடத்திலுள்ள உயிரியல், இரசாயன, பௌதீக பாடப் பகுதிகளைச் சிறப்பாகக் கற்பிக்கும் ஆற்றல் அற்ற நிலை. இது அனேக ஆசிரியர்களுக்கிடையே உண்டு. அதாவது உயிரியல் பட்டதாரிக்குப் பௌதீகபாடப் பகுதியைக் கற்பிக்கும் ஆற்றல் குறைவு. பௌதீக பட்டதாரிக்கு உயிரியல் பாடப் பகுதியைக் கற்பிக்கும் ஆற்றல் குறைவு. இதனால் தாம் எப்பாடத்தில் பட்டம் பெற்றனரோ அப் பகுதியைப் பிள்ளைகளின் தரத்தை உணராது தங்கள் தரம்வரையிலோ

அல்லது இன்னும் மேலுமோ உயர்த்திக் கற்பிக்கிறார்கள். இப்படியா னால் தான் பாட நேரத்தை ஒருவாறு முடிக்கலாம். ஆனால் பாடத் திட்டத்தை முழுமையாகக் கற்பித்து முடிக்க முடியாது பிரச்சனைப்படு கின்றார்கள். இதுவும் ஒரு பெரும் பிரச்சனையாகும்,

விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களை நாம் கீழ் வருமாறு வகைப் படுத்தலாம்.

(அ) தராதரப் பத்திர மற்ற ஆசிரியர்கள்

(ஆ) விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள்

(இ) விஞ்ஞானம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

மேற் கூறிய வகைகளினுள்ளும் (அ) வில் குறிப்பிட்ட ஆசிரி யர்களை மேலும் கீழ் வருமாறு வகைப்படுத்தலாம்.

## தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள்

I க. பொ. த. (சாதாரண) தரத்தில் இரசாயனம், பௌதீகம், உயிரியல் பாடங்களை எடுத்துச் சித்தியடைந்தோரும், இரசாயனம், பௌதீகம், கணிதம் ஆகிய பாடங்களை எடுத்துச் சித்தியடைந் தோரும், என இரு வகையினர் உளர்.

II க. பொ. த. (உயர்தரம்) தரத்தில் இரசாயனம், பௌதீகம், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றோரும், இரசாயனம், பௌதீகம், தூயகணிதம், பிரயோககணிதம் ஆகிய பாடங்களிற் சித்தி யடைந்தோரும் என இரு வகையினர் உளர்.

இந் நாலு உப வகையினருள்ளும் இரு பகுதியினர் விஞ்ஞானத் தின் உயிரியல் பகுதியை முற்றாகவே கற்பிக்கும் ஆற்றல் அற்ற நிலையி லுள்ளனர். ஏனெனில் இவர்கள் இப் பாடத்தை முற்றாகவே கற்க வில்லை

இதே போன்று உயிரியல் பட்டதாரிகள் பௌதீக பாடத்தைக் கற்பிக்கும் ஆற்றல் அற்ற நிலை. பௌதீக பட்டதாரிகள் உயிரியல் பகு திகளைக் கற்பிக்கும் ஆற்றல் அற்ற நிலை.

அடுத்து மூன்றும் வகையினராகிய விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் விஞ்ஞான பாடத்திலுள்ள இரசாயன, பௌதீக, உயிரியல் ஆகிய மூன்று பகுதிகளையும் திருப்திகரமாகக் கற்பிக்கும் ஆற்றல் பெற்று உள்ளனர். எனவே மேற் கூறிய மூன்று வகை ஆசிரியர்களுள்ளும் 1 ம் வகையிலுள்ள இரு உப வகையினரும், 3 ம் வகையினரான விஞ் ஞானப் பயிற்சி பெற்றோருமே விஞ்ஞான பாடத்தை 6 ம் வகுப்புத் தொடக்கம் 10 ம் வகுப்பு வரை திருப்திகரமாகக் கற்பிக்கிறார்கள்.

எமது வட பிராந்தியத்திலுள்ள விஞ்ஞானப் பட்டதாரிகளில் 41 உயிரியல் பட்டதாரிகள் இரசாயனம், பௌதீகம், கற்பிக்கும் ஆற்றல் அற்றவர்கள். இவர்கள் அனைவரும் 6 — 10 ம் வகுப்புவரை விஞ்ஞானம் கற்பிக்கிறார்கள். அத்துடன் இவ்வாசிரியர்கள் அனைவரும் 45 வயதைத் தாண்டியவர்களுமாவர்.

எனவே மேற்கூறியவர்களுக்குக் கூடியளவு சேவைக்காலப் பயிற்சி கொடுக்க வேண்டும். இவ் வகுப்பில் உயிரியல் கற்பிக்கும் ஆற்றல் அற்றோரை ஒரு குழுவாகவும், பௌதீகப் பாடம் கற்பிக்கும் ஆற்றல் அற்றோரை வேறு ஒரு குழுவாகவும் பிரித்துத் தனித் தனியே பயிற்சி வகுப்புகள் நடாத்தி இவர்களுக்குப் போதியளவு அடிப்படை அறிவை ( இப் பாடப் பகுதிகளுக்கு ) ஊட்டலாம். எனவே எமது விஞ்ஞான கருத்தரங்குகளில் இவர்களது பாடப் பரப்பை மிக எளிதாக்கி மிகவும் கவனமான முறையிற் கையாளப்படல் வேண்டும்.

மேலும் இவ் வாசிரியர்களுக்குக் கருத்தரங்குகளில் இப் பாடப் பகுதியிலுள்ள பரிசோதனைகளையும், செய் முறைகளையும் தாமாகவே செய்து கொள்வதற்குரிய வசதி அளிக்க வேண்டும். இவர்கள் இவ் ஆய் கருவிகளையும் உபகரணங்களையும் கையாண்டு, தம்மில் போதியளவு தன்னம்பிக்கை கொள்ளக்கூடியளவுக்கு இவர்களைக் கொண்டு வரவேண்டும். மேலும் உட் சேவைக் காலப் பயிற்சி வகுப்பில் இவர்கள் எம்முடன் இயன்றளவு அன்னியோன்யமாகக் கதைத்துத் தமது கஷ்டங்களைக் கூறித் தீர்வு கண்டு தம்மைத் தாமே திடகாத்திரமுள்ள நல்ல விஞ்ஞான ஆசிரியர் என்ற தரத்திற்கு வந்து மாணவச் செல்வங்களுக்கு நற் போதனை அளித்து அவர்களையும் ஒரு நற் பிரசையாக்க நாம் அனைவரும் அயராது உழைப்போமாக.

•••

---

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் நன்றியுணர்ச்சி உடையவர்களாக இருந்தால் போதும். அந்த நன்றியுணர்ச்சியால் சமுதாயம் தமக்குச் செய்யும் உதவிகளை நினைந்து, பிறருக்குத் தொண்டு செய்ய ண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்களாய் விளங்குவார்கள். அப்படிப்பட்டவர்கள் சமுதாயத்திற்கு அஞ்சி நடக்காவிட்டாலும் கட்டுப்பட்டு நடப்பார்கள்.

— டாக்டர் மு. வரதராசன்

# TEACHING OF ENGLISH IN OUR SCHOOLS

S. THEIVATHAVAPALAN,
Inservice Adviser (English)

Before trying to get somewhere it is necessary first to find-out exactly where one wishes to go and then the best way to get there. Therefore before going into an analysis of the teaching of English in our country it is very essential for us to know the objectives of teaching English. What are our objectives? It may be said that our objectives are plain enough, children are to be taught to read, write, understand and speak English. What! Perfect English! Spoken with an English accent! Today this objective is too remote to achieve. One would say in a large majority of cases it is impossible to achieve. Our children learn the language for its special benefits, is, to keep pace with the advancement in science and technology They do not learn it for communication or to use it for corroespondence with the private and public sectors. For this purpose they have their mother tongue and the official language. Therefore the aim of teaching English in our country is reading. Although reading comprehension is our aim there has been slight fluctuations from time to time. During the 1975 - 1977 era reading comprehension was the main aim and as a result most text books left out, language items connected with speech Today, with more and more youth seeking employment abroad, there is a swing back to include speech along with reading comprehension and the objective of teaching English is to use it as a Library language - ie to read, to understand, and to convey to others what one has read. Whatever our objectives are, one would agree that the development of one of the four skills helps in thedevolopment of others.

The teacher of English must start with a clear understanding of his task, which is to train the pupils in the development of the four skills. This leads us to the method to be employed. There is not one single method with a capital 'M' which excels all the others. Any method by which one could achieve our objectives wihout thwarting the learner is adequate. Indeed, a rigid adherence to any particular method does not seem the most sensible way of teaching a language. The text books supplied free by our government, provides much material and guidence, but this material is in print and therefore is recorded language, not the language that is the purposeful expression of a living mind. The teacher therefore, has to transform that silent inactive array of printed symbols into living. speech, He has to make all those words, phrases and sentences in the book, play a useful part in

in real situation, or a situation created by him for the purpose. To achieve this he has to use all the skills he has, all his energies, and all his ablities of voice, mind, action and will to create situations, games etc which will motivate the learner. How many of us do this in our classroom? It requires an intimate probe into our conscience.

The use of mother tongue is a suitable subject for us to consider at this stage. Beginners cannot be taught without some use of their own language. This does not mean that translation method is advocated. The use of mother tongue must be the right use and it must be used with care and discretion. Mother tongue could be used to explain grammatical concepts or to explain lexicalitems. It could also be used to check whether the learner has understood a particular concept. To translate whole paragraphs into the mother tongue is generally recognised as unsatisfactory. But very often this is done by most of us and an English lesson actually becomes a lesson in the mother tongue.

Having dealt with the various aspects of teaching English let us now examine what is happening in our schools. Pupils who show sufficient interest in learning English in the lower grades begin to lose it gradually when they come to grades nine or ten. Why is this decline taking place? What are the factors that contribute to this decline? The various factors that have contributed to this downward trend are (a) The difficulties peculiar to the English language Eg: Its sounds, its symbols its grammatical structures and word order which are different from the mother tongue. (b) Want of sufficient motivation both at the primary and secondary levels due to lack of any practical need. English is not learnt for communication or as an official language. Even from the point of view of examination, English is not a compulsory subject. (c) Absence of any suitable reading materials to stimulate interest. (d) Incompetent or untrained persons handling the subject. (e) Lack of an English environment for students particularly in rural areas, either at school or at home.

Sufficient motivation could be brought about if English be made a compulsary sujbect at the G. C. E. O/L and a pass in English to be stipulated as a desirable condition for admission to the Universities and for employment in the public and private sectors. The text books too should be revised to make the reading materials there in interesting and appealing to the particuler age group. One other subject, like science, Mathematics or Social studies should be taught in English medium. Finally Radio & Television programme should include active class room lessons and printed material connected with these should be made available to all schools. Unless these urgent remedial measures are taken the standard will deteriorate further.

# பொதுக் கல்வித் திட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரியின் பங்கு

ச. சுப்பிரமணியம்,
ஆசிரிய சேவைக்கால கல்வி ஆலோசகர்,
தொழில் நுட்பம்.

ஒரு நாட்டின் வளர்ச்சியானது அந்நாட்டு மக்களின் கல்விஅறிவு, முயற்சிகளிலேயே தங்கியுள்ளது. எனவே காலத்துக்குக் காலம் அந்நாட்டின் கல்வித்திட்டங்களும் சீரமைக்கப்படுவது வழக்கமாகும். இச்சீரமைப்புக்கள் யாவும் சமூகத்தின் அடிப்படையான வாழ்வுமுறையை மாற்றி அமைக்காததாக அமைவது கண்கூடு. கல்வியின் பிரதான அடிப்படை இலட்சியம்: ஒவ்வொருவரினதும் தனி ஆற்றல்களை வளர்த்து தனக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள பூரண மனிதனாக வழிப்படுத்தலேயாகும். இதில் கூறப்பட்டுள்ள பூரணமனிதனின் பிரதான குணாதிசயங்களையும் கவனத்துக்குக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அவையாவன.

1. அடிப்படை அறிவுடையவனாக இருத்தல்.
2. ஒரு நாட்டின் நல்ல பிரஜையாக இருத்தல்.
3. பொருளாதார வளமுடையவனாக இருத்தல்.
4. சமூகத்தோடு தொடர்பு கொள்ளக் கூடியவனாக இருத்தல்
5. சமூக நீதியுணர்வுடையவனாக இருத்தல்.

## 1. அடிப்படை அறிவுடையவனாக இருத்தல்:

மனிதர் ஒவ்வொருவரும் தமது எண்ணங்களையும், தேவைகளையும் வெளிப்படுத்தக் கூடியதாக இருத்தல். அதாவது பேச, எழுத, வாசிக்கவும், அடிப்படையான கணக்குகளைச் செய்யவும் தெரிந்திருத்தல். இவற்றுக்குப் பயன்படக் கூடிய புல உறுப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தவும், தன்னுடலையும் பொதுச்சுத்தத்தையும் பேணக் கூடியதாகவும் இருத்தல். வேலைமாற்றம் செய்து ஓய்வு எடுக்கவும், அழகுக்கலைகளை இரசிக்கக் கூடியவனாகவும் இருத்தல். ஒழுக்கமுடையவனாகவும், புத்திசம்பந்தமான நாட்டங்களையுடையவனாகவும் இருத்தல் பிரதானமாகும்.

## 2. நாட்டின் நல்ல பிரஜையாக இருத்தல்:

ஒவ்வொருவருக்கும் தமது வாக்குரிமையைச் சரியான முறையில் பயன் படுத்தத் தெரிந்திருத்தல். ஜனநாயகசமதர்மக் கொள்கைகளையும், எண்ணக்கருத்துக்களையும் வெளியிடக் கூடியவராகவும் இருத்தல். மாற்றுக் கொள்கையைக் கேட்பதிலும், புரிந்து கொள்வதிலும், பொறுமையைக் கடைப்பிடித்தல். முடிவை எடுத்தலும், விவாதித்தலும், முடிவு எடுத்தபின் முடிவை நிறைவேற்றும் பொறுப்பை யாவரும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு பெறுதல். மனிதன் ஒவ்வொருவனையும் தன்னைப் போல் மதிக்காது, பிரசாரங்களில் இருந்து ஏமாறாது உண்மையைக் காணும் பகுத்தறிவைப் பெறுதல்.

3. பொருளாதார வளமுடையவனாக இருத்தல்:

I) ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை நடாத்துவதற்குத் தேவையான பொருளாதார வளத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தொழிலைத் தெரிந்து அதைத் திறமையாகச் செய்யத் திட்டமிட்டு முயற்சிக்கக் கூடியவனாக இருத்தல்.

II) சமூகத்தில் ஆற்றப்படும் தொழிலின் மதிப்பை இரசித்தல்.

III) பொருள்களை வாங்குவதிலும், விற்பதிலும் ஏற்ற அறிவுடையவனாக இருத்தல்.

4. சமூகத்தோடு தொடர்பு கொள்ளக் கூடியவனாக இருத்தல்:

I) தாய், தந்தை, சகோதரர், சுற்றத்தார், ஆசிரியர், பெரியோர் போன்று மற்றவர்களையும் மரியாதை செய்யும் பழக்கங்களை உடையவனாக இருத்தல்.

II) வீட்டில் வாழ்வோருடன் சந்தோஷமாக வாழக் கூடியவனாக இருத்தல்.

III) பாடசாலை, சனசமூகநிலையங்கள் போன்ற பொதுத்தாபனங்களில் ஒத்துழைக்கக் கூடியவனாக இருத்தல்.

IV) கூட்டுத்தாபனங்கள், கிராமச்சங்கங்கள் போன்ற குழுக்களில் ஒத்துழைத்துத், தனது சேவையைக் கொடுக்கக் கூடியவனாக இருத்தல்.

V) சர்வதேசரீதியில் பலதரப்பட்ட சாதியாரோடும் தொடர்பு கொள்ளக் கூடியவனாக இருத்தல்.

மேற்கூறப்பட்ட குணாதிசயங்களையுடைய ஒரு மனிதன் சாதாரணமாக எந்த நாட்டிலும் சமூகத்தோடு சேர்ந்து வாழக் கூடியவனாகின்றான். இந்நோக்கங்களை அடைவதற்காகவே பாடசாலைகள், மதஸ்தாபனங்கள், வானொலி, நூல்நிலையம், பெற்றோர், சூழல் போன்ற பல்வேறு தனியார் ஸ்தாபனங்கள், மூலமாகக் கல்வியைப் பெற முயற்சிக்கின்றோம். இது எந்த அளவுக்கு வெற்றியளிக்கின்றது. என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாடும் தமது பிரசைகள் யாவரும் பூரண மனிதர்கள் ஆகவேண்டும் என்றே விரும்புகின்றன. ஆனால் அது சாத்தியமற்றதாகவே இருக்கின்றது.

மேலே கூறப்பட்ட குணாதிசயங்களில் பிரதானமான ''பொருளாதாரவளமுடையவனாக இருத்தல்'' மிக முக்கியமானதொன்றாகும். ஒருவன் பொருளாதாரவளமுடையவனாக இருக்க வேண்டுமாயின் ஏதாவதொரு தொழிலைத் தெரிந்து செய்யக்கூடியவனாக இருத்தல் அவசியமாகும். ஒரு தொழிலைச் செய்வதற்குக் கட்டாயமாகக் கைகளைப் பயன்படுத்தி வேலைகள் செய்யும் கைத்திறனும், தொழிலொன்றைத் தெரிவு செய்து உற்பத்தியிலீடுபட்டு அதை விற்பனை செய்து இலாபம் பெறுவது பற்றிய அறிவு, எத்தொழிலிலும் பேதம் பாராட்டாது ''உழைப்புகள் யாவும் பொருளாதாரத்தைப் பெருக்கவே'' என்ற நன்மனப்பாங்கும் அவசியமாகும்.

இன்று பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களும், பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பலரும் வேலையேதும் இல்லை என்று வீட்டில் இருந்து பிறரின் உழைப்பில் உண்டு வாழ்வது கண் கூடாகும். இந்தநிலைக்குக் காரணம் என்ன? கல்வியைப் பெற்றிருந்தும், பட்டங்களைப் பெற்றிருந்தும் ஒரு தொழிலைத் தெரிந்து கொள்ளாமைக்குரிய காரணம் — நாம் மேலே கூறிய கைத்திறன், தொழில் பற்றிய அறிவு, நல்மனப்பாங்கு ஆகிய மூன்றும் ஒருங்கே பெற்றுக் கொள்ளாமையேயாகும். வெறும் அறிமுறையாக ஏட்டுக் கல்வியைக் கற்றுப் பரீட்சையில் சித்தியெய்தியிருந்தும் கைத்திறன், நல்மனப்பாங்கு இன்மையால் கைத்தொழில்களில் ஈடுபடமுடியவில்லை. சிலர் தனியே கைத்திறனைமட்டும் பெற்றிருந்தும் தொழில் பற்றிய அறிவு நல்மனப்பாங்கு இன்மையால் தொழில்களைப் புரிய முடியவில்லை. முதலாவது கூறியதற்கு தொழிற்கல்வி ஏதும் கற்காது தகுதிப்பத்திரம் பெற்றவர்களையும் மற்றதற்கு பாடசாலைகளில் தொழிற்பாடமாக வெறும் செயல்முறை அநுபவத்தை (கைத்திறன்) மட்டும்

பெற்றுக்கொண்ட மாணவர்களையும் கூறலாம். எனவே மாணவர்கள் ''பாடசாலையை ஏதோ ஒரு மண்டபத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு நடைபாதையாகக் கொள்ளாது வாழ்ந்து கொண்டிருக்கும் அறை'' யாகக்கொள்ளுதல் அவசியமாகும்.இப்போதே வாழக் கற்றுக்கொண்டால்தான் பிற்கால வாழ்விலும் சரியாக வாழலாம்.

எனவெ பூரண மனிதனின் குணதிசயங்களுள் ஒன்றான பொருளாதாரவளத்தைப் பெருக்குவதில் பாடசாலைக் கல்வி மிக முக்கிய இடத்தைவகிக்கின்றது என்பது தெளிவாகும்; அப்படியாயின் பாடசாலையை விட்டு வெளியேறும், வெளியேறிய பல இலட்சக் கணக்கானோர் தமது பொருளாதாரத்தைத் தாமே பெருக்க முடியாமைக்குக் காரணத்தையும் ஆராய வேண்டியது அவசியமாகின்றது. கைக்குரிய திறன், அறிவு, நல்மனப் பாங்கு ஆகியவற்றை மாணவர்கள் பெறுவதற்கு வழிசமைப்பது பாடசாலைத் தொழிற் கல்வியாகும். தொழிற்கல்வியாக நெசவு, மரவேலை, உலோகவேலை, மனையியல், விவசாயம், மோட்டார்பொறித்தொழில், வானொலி பேணல், வனைதல், தையல் ஆகிய பாடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன. இடைநிலைப் பாடத்திட்டத்தில் கற்கும் ஒவ்வொருவரும் ஏதோவொரு தொழிற்பாடத்தைக் கற்க வசதி செய்யப்பட்டுளளது. ஏதாவது ஒரு தொழிற்பாடத்தைக் கற்கும் மாணவர்கள் அத்தொழிலுக்குரிய செயல் திட்டங்களைப் பின்பற்றி உற்பத்தியிலீடுபடும் போது கைக்குரிய திறன்களைப் பெறுவதோடு; அத்தொழிலானது எவ்வாறானது? அதற்கான மூலப் பொருட்கள் எவை? உபபொருட்கள் எவை? அவற்றை எங்கே பெறலாம்? மூலப் பொருட்களைக் கொண்டு எவ்வாறு உற்பத்தியை மேற் கொள்ளலாம்? செய்யப்பட்ட உற்பத்தியை (சேவை, பொருள்) எவ்வாறு சந்தைப்படுத்துவது? விற்பனைப்படுத்தும் முறைகள், தொழிலுக்கான பதிவுகள் எவை? எவ்வாறு செய்யப்பட வேண்டும்? இத் தொழிலோடு தொடர்புடைய ஸ்தாபனங்கள் எவை? அவற்றின் சேவைகள் கடமைகள் எவை? ஈடுபட்டுள்ளவர்கள் யார்? அவர்களின் சேவையின் தன்மை என்ன? இதுபோன்ற பல்வேறு பரந்த அறிவுகளையும், சந்தைப்படுத்தக்கூடிய பொருள் உற்பத்தி சேவையை உற்பத்தி செய்வதில் நம்பிக்கையும் பெருமை கொள்ளலும், உடலால் ஈடுபடும் தொழில்கள் குறைவற்றவை என்ற நன்மனப்பாங்கு பெறுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஒரு தொழிற்பாடத்தில் பெற்ற அறிவு கைத்திறனானது தான்கற்ற தொழிலுக்கு உதவுவது மட்டுமன்றி வேறொரு தொழிலைச் செய்வதற்கும் உதவுகின்றது. ''கைத்திறன்கள் மாற்றப்படக் கூடியன'' என்பது யாவரும் அறிந்ததே.

பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்குத் தொழிற்பாடம் அவசியமில்லை என்று கருதுவோரும் இன்று அனேகர் உளர். இக்கூற்று கல்வியின் உண்மையான நோக்கங்களை அறியாமையால் எழுவதே. பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகளும், எந்திரிகளும் செயல் முறைக் கைத்திறன் அறிவு இன்மையால் தமது கல்வியைச் சரிவரப் பயன்படுத்த முடியாமல் இருப்பது உண்மையாகும். உதாரணமாக எந்திரி ஒருவர் தன் நிர்வாகத்துக்குக்கீழ் வேலை செய்யும் (கைவினைஞர்) தொழிலாளர்களைக் கொண்டு திறமையான வேலைகளைச் செய்விக்கமுடியாமல் இருப்பது கண்கூடு. குறிப்பிட்ட வேலையைத் திருத்தவோ, காட்டிக் கொடுக்கவோ முடியாத நிலையில் அவர்கள் செய்யும் வேலைத்தரத்தையும், நேரத்தையுமே ஏற்கவேண்டிய நிலையில் உள்ளதையும் அவதானிக்கலாம். கைத்திறன்களையும், அறிவையும் பெற்றிருக்கும் ஒருவரே இலகுவில் நிர்வாகம் செய்ய முடியும். இது போலவே ஆசிரியத் தொழிலுமாகும். கைத்திறன் அற்ற ஆசிரியர் செயல்முறை உபகரணங்களை ஆக்கவோ, அல்லது பயன்படுத்தவோ, உற்பத்தி, பரிசோதனைகளைச் செய்து காட்டவோ முடியாத நிலையில் கரும்பலகையையும், வெண்கட்டியையுமே நம்பி இருக்கவேண்டியநிலையில் உள்ளதும்,

வெறும் அறிமுறை அறிவை மாத்திரம் மாணவர்க்குப் புகட்டுவதால் அது ஏட்டுச்சுரைக்காய் ஆவதும் கண்கூடு. இதற்குக் காரணம் அவ்வாசிரியர்களும் தாம் கற்கும் போதே கைத்திறன் பெற்றிராமையே. இக் கைத்திறன் அற்ற ஆசிரியர்குழு தம் போலவே கைத்திறன் அற்ற மாணவர்களை உற்பத்தி செய்ய முயற்சிப்பதும் வருந்தத் தக்கதே. வெறும் அறிமுறை மூலம் நீந்தக் கற்ற மாணவன் ஆழ்கடலில் குதித்து நீந்த முயற்சிப்பது புத்திசாலித்தனமன்று. செயல் முறை மூலம் நீந்தக் கற்றவனே பயன் பெறுவான்.

இது வரையில் ஒவ்வொருவரும் கைத்திறன் பெற்றிருக்க வேண்டிய அவசியத்தை அவதானித்தோம். அது மாத்திரமன்றி பாடசாலையில் தொழிற்கல்வி கற்கும் மாணவன் பெறும் பயன்கள் அளப்பரியன. அவையாவன :

1. குறிப்பிட்ட தொழில்நுட்பப்பாடத்திற்கு அமைவான உற்பத்திகளில் ஈடுபடும் போது பெறுமதியான சேவை அல்லது பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றது. (உதாரணம்: நெசவு பாடம் — துவாய் அதை விற்பனை செய்வதன் மூலம் பணப் பெறுமதியையோ அல்லது திருப்தியையோ பெறக்கூடியதாக இருக்கின்றது.

2. பல்வேறு பாடங்களிலும் (உ+ம் விஞ்ஞானம், கணிதம், தொழில் நுட்ப வரைதல், சமூகவியல்......) பெறும் அறிவுகளைத் தொடர்புபடுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கின்றது

3. குழுவாகச் சேர்ந்து ஒரு உற்பத்தியிலீடுபடும் போது சமூக ஒற்றுமையும், பரஸ்பரம் ஒருவர்க்கொருவர் உதவி செய்யும் மனப்பாங்கும் கிடைக்கின்றன.

4. நாட்டில் புரியப்படும் பல்வேறு தொழில்களையும், தொழிற் பிரிவுகளையும் அறிவதோடு அவை இயங்கும் அடிப்படை முறைகளையும் அறிவதால் பொருத்தமான தொழிலைத் தெரிவு செய்வது இலகுவாகின்றது.

5. ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'' என்பது போல சிறுவயதிலேயே கைகளால் ஆற்றப்படும் தொழில்களில் ஈடுபடுவதால், கைத்தொழில் குறைவானது குறிப்பிட்ட சமூகத்தினர்தான் அத்தொழிலைச் செய்ய வேண்டும் என்ற பிழையான கருத்தையும் சாதியமைப்பையும் தகர்த்து நன்மனப்பாங்கு வளர வழி வகுக்கின்றது.

பாடசாலை வெறுமனே மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார் செய்யும் நிலையமாக இயங்காது வாழ்க்கைக்குத் தயார் செய்யும் நிலையமாக இயங்கவேண்டியது அவசியமாகும். பரீட்சையில் சித்தியெய்தும் யாவரும் வாழ்க்கையில் சித்திபெறுவதில்லை. எனவே பரீட்சைக்குத் தொழிற்பாடத்தை தெரிவு செய்யாத ஒரு மாணவன் தொழிற் கல்விகள் கற்கவேண்டியதில்லை என்று கருதுவது பிழையான கருத்தாகும். எல்லாத் தொழிற் கல்வி நெறிகளும் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படாமல் இருப்பது உண்மையாக இருக்கலாம். அதற்காகத் தொழிற்கல்வி அவசியம் இல்லை என்று கருதுவது மடமையாகும். பாடசாலையில் கல்விகற்கும் மாணவர் தொகையில் ஒருவீதமானோரே பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்றார்கள் என்பதும் மீதி 99 வீதத்தினரும் பட்டப்படிப் பின்றியே தம் வாழ்வை அமைத்துக்கொள்கின்றார்கள் என்பதும் கவனத்துக்குக் கொள்ளவேண்டியதாகும். எனவே பொதுப் பாடசாலைக் கல்வி 99 வீதமானோருக்கு ஏற்பவே போதிக்கப்படும்போது அந்த ஒரு வீதத்தினரும் சேர்ந்தே பயன் பெறுகின்றார்கள் என்பது முக்கியமானதாகும். தொழிற் கல்வியின் முக்கியத்துவத்தை உணராது செயற்பட்டதாலேயே இன்று வேலைவாய்ப்பு இல்லை என்ற கோஷம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்பதை மனதில் இருத்துவோமாக.

# நோயற்ற வாழ்வும் யோகாசனமும்

ந. சிவசுப்பிரமணியம்
*யோகாசன ஆசிரியர்*

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது ஆன்றோர் வாக்கும், வெளிப்படையான உண்மையுமாகும். நோயற்ற வாழ்விற்கு உறுதியான உடல் தேவை. உறுதியான உடல் என்னும்போது எம் உடலிலுள்ள சகல உறுப்புக்களும் சரிவரத் தத்தமது கடமைகளைச்செய் வதே என்பது கருத்து. உடலின் உள் வெளி உறுப்புக்களைச் சரியான நிலையில் இயங்கச் செய்யும் மகிமை யோகாசனமென்ற தேவாமிர்தத் திற்கே உரியது. நாம் நல்லதைச் சிந்திக்க வேண்டும், அதைச் செயற் படுத்த வேண்டும். யோகாசனம் மகிமையானதுதான் என்று யாவரும் சிந்திப்பதுண்டு. ஆனால் செயற்படுத்துவதில்லை.

யோகக் கலை என்பது ஓர் தெய்வீகக் கலை. இது முனிவர்களி டையே இலைமறை காய்போல இருந்து வந்ததால் இக் கலை துறவிகட்கே உரியது என்று நாம் முன்பு எண்ணிவந்தோம். இப்போது முகில் மறைப் பால் விடுபட்ட சூரியனைப்போல உலகெங்கும் பிரகாசிக்கத் தொடங்கி விட்டது. அமெரிக்கா, ஜேர்மனி, யப்பான், அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகள் யோகாசனத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளன. கீழ் நாட் டில் ஆரம்பித்த இத் தெய்வீகக் கலை இப்போது மேல் நாடுகளில் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது.

யோகப் பயிற்சி ஆசிரியர்களின் கருத்துக்களோடு எனது சிறிய அனுபவத்தையும் சேர்த்துச் சில குறிப்புகளைக் கூறுகின்றேன். ஆசனத் தாற் தீராத நோய்களில்லை. என்றும் அழகோடும் ஆரோக்கியத்தோ டும் இருக்க விரும்புகிறீர்களா ? ஆசனத்தை நாடுங்கள். யாவரும் என்றும் பதினாறு வயது மார்க்கண்டேயராகலாம். அதாவது ஒருவ னின் முள்ளந் தண்டும் முள்ளந் தண்டுக் கொடியும் இளமையோ டிருந்தால், பிறப்புப் பத்திரத்தில் வயது போய்க் கொண்டிருந்தாலும் உடல் முதுமையடையாது; இளமையோடிருக்கும்.

ஆசனம் பழகுவோர் முதலில் மதுபானம், புகைத்தல் இரண் டையும் அறவே நீக்க வேண்டும். அத்தோடு தேநீர், காப்பி, உறைப்பு, புளிப்பு முதலியவற்றையும் நாளாந்தம் குறைத்துக்கொண்டு வரவேண் டும். மாமிசத்தையும் படிப்படியாகக் குறைத்தல் நன்று. ஏனெனில் உணவு வித்தியாசத்தால் ஒருவனுடைய குண பேதங்கள் மாற்றமடை கின்றன. ஆசனம் பழகுவது காலையிலா? மாலையிலா? என்பது கேள்வி. காலையே சிறந்த நேரமாகும். யார் பழகலாம்? எவ் வயதினர் பழக

லாம்? என்றால் ஆண் பெண் இரு பாலாரும் மூன்று வயதிலிருந்தே எவ் வயதினரும் பழகலாம். பதினைந்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சிரசாசனம், உட்டியாண, நௌலி மூன்றையும் விட்டுச் செய்வது நன்று. காசிப் பல்கலைக் கழகத்தினர் எலிகளுக்கும் யோகாசனப் பயிற்சி கொடுத்து ஆராய்கின்றனர்.

ஆசனங்களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது படுத்திருந்து செய்வது, இரண்டாவது உட்கார்ந்து செய்வது, மூன்றாவது நின்று செய்வது, நான்காவது பாதத்தை மேலே தூக்கிச் செய்வது என்பனவாகும். முதல் இரண்டு வகைகளைச் சேர்ந்த ஆசனங்களைப் பலவீனரும், நீண்ட நாள் நோயாளிகளும் செய்வது நல்லது. சாதாரணமானவர்களுக்கு நான்கும் நல்லதும் முக்கியமானதுமாகும். ஆசனங்கள் எதை எடுத்துப் பார்த்தாலும் முதுகெலும்பிற்குப் பயிற்சி கொடுப்பதாகவே யிருக்கும். பெண்கள் மாத விடாய்க் காலங்களிலும் சில நாட்கள் முன்னும் பின்னும் பயிலக்கூடாது. கர்ப்ப ஸ்திரீகள் பயிற்சியுடையோரோடு கலந்து ஏற்ற ஆசனங்களை மட்டும் செய்வது நல்லது.

என்றும் இளமையோடும், அழகோடும், நோயின்றியும் வாழ விரும்பினால் ஆசனங்களைச் செய்யுங்கள்; பணம் செலவு செய்யத் தேவையில்லை. வைத்தியச் செலவைச் சேமியுங்கள். எமது உடம்பினுள் எத்தனையோ உறுப்புக்களிருக்கின்றன. சில உறுப்புக்கள் எமது கட்டுப்பாட்டுக்குள் அமைகின்றன. பல உறுப்புக்கள் தமது விருப்பத்தின்படி நடக்கின்றன. குழலற்ற பல தசைக் குவளங்களிருக்கின்றன. அவைகளினால் சுரக்கப்படும் பல வித திரவங்களே எமது உடல் வேலைகளில் முக்கிய பங்கு எடுக்கின்றன. இக் குவளங்களின் தொழிற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டின் சத்திர சிகிச்சையாற்றான் ஓரளவு செய்யலாம். ஆனால் எமது உடலுறுப்புக்களில் எதுவித மாற்றங்களும் செய்யாமல் ஆசனப் பயிற்சியால் சீராக்க முடியும். ''தைறோயிட்'' ''பிட்ருட்டறி'' முதலிய இராச குவளங்கள் சீராகத் தொழிற்பட்டால் இளமையும், அழகும் ஆரோக்கியமும் நிலையாக நிற்கும்.

யோகாசனமென்பது ஒரு தெய்வீகக் கலை. அது புனிதமானதும் புதுமையானதுமாகும். இக் கலையைச் சிலர் மேடைக் காட்சியாக்கியும் வியாபாரக் கடையாக்கியும் வருகின்றனர். இதைச் சிந்திக்க வெட்கமும் துக்கமுமாயிருக்கிறது. மாணவர்க்கு நாம் தேகப் பயிற்சி சொல்லிக் கொடுக்கும்போது தலை தொடங்கிக் கால் வரைக்குமோ அல்லது கால் தொடங்கித் தலை வரைக்குமோ ஓர் ஒழுங்கு முறையாகச் சொல்லிக் கொடுக்கிறோம். அப்படியே யோகாசனத்தையும் சில ஒழுங்குகளின் படி செய்ய வேண்டுமென்று ஆசனத்தில் ஆழ்ந்த அறிவுடையோர் நூல்

கள் மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துள்ளார்கள். சில சந்தர்ப்பத்தில் மேடையில் ஆசனம் செய்வோர் இதைக் கவனத்திற் கெடுக்காது, பார்வையாளர்கள் கை தட்டிச் சிரிக்கக்கூடிய ஆசனங்களைச் செய்கின்றனர். இது ''சர்க்கஸ்'' விளையாட்டாகுமே தவிர ஆசனப் பயிற்சி ஆகாது.

ஆசனங்கள் ஒவ்வொன்றிலும் பல நுணுக்கங்கள் இருக்கின்றன. ஆசனங்கள் பயிலும்போது சுவாசங்கள் மிகமுக்கியமானதும் உயிர்நாடியானதுமாகும். சில ஆசனங்கள் சுவாசத்தை உள்ளே இழுத்தும், சில சுவாசத்தை வெளியே விட்டும், சிலவற்றிற்குச் சாதாரண நிலையிலும் செய்ய வேண்டுமென்பது விதி. இன்னும் முக்கியமானது ஒவ்வொரு ஆசனங்கள் செய்யும்போதும் அந்த ஆசனத்தால் ஆட்சி செய்யப்படும் உறுப்புக்கள் எந்தெந்த நிலையில் இருக்க வேண்டுமென்பது முக்கியமானது. இவற்றை யெல்லாம் கவனிக்காமல், ஒருவர் மேடையில் செய்தால் நுணுக்கங்களைக் கவனிக்காது நன்ருக வளைகிருர் — நிமிருகிருர் என்று கரகோசம் செய்கிரேம்.

ஒவ்வொரு நோய்க்குமுரிய ஆசனங்களைப்பற்றி விபரித்துக் கூற இக் கட்டுரை போதாது. எனினும் முக்கியமான சில நோய்களுக்குரிய ஆசனங்களைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். சுவாசப்பை சம்பந்தமான தும்மல், தொய்வு, நெஞ்சில் சளி போன்ற நோய்களுக்கு நாடிசுத்தி அல்லது பிராணு யாமம், புயங்காசனம், மத்யாசனம், சர்வாங்காசனம் முதலியன செய்து பலனடையலாம். பிராணுயாமம் வேறு ஆசனம் வேறு என்று சிலர் வாதாடுவர். பிராணு யாமமும் ஆசனமும் எம் இரு கண்கள் போன்றவையாகும். சல ரோக சம்பந்தமானேர் தனுராசனம், பக்ஷிமோத்தாசனம், மயூராசனம், சர்வாங்காசனம் இவற்றைச் செய்யலாம். குடலிறக்கம், அண்டவாய்வு உள்ளவர்கள் உட்டியாணு, நௌளி செய்யலாம். இளமையைக் கெடுத்தோரும், நரம்புப் பெலவீனமுள்ளோரும் கலாசனம் செய்யலாம். இவ் வா ச ன த் தா ல் உடல் இளமையுமடையும். கருப்பை சம்பந்தமான வியாதிகட்குப் பக்ஷிமோத்தாசனம் மிக நன்று. மூல வியாதி உடையோர் மயூராசனமும், உட்டியாணு, நௌளியும் செய்யலாம். சலத்தில் கல்லுடையோர் சர்வாங்காசனம், தநுராசனம், பக்ஷி மோத்தாசனம் மூன்றையும் செய்யலாம். கண் வருத்தங்களைச் சிரசாசனம் மூலம் மாற்றலாம். உடலும் அழகு பெறும். பொதுவாகச் சர்வாங்காசனத்தால் எந்த வியாதியையும் குணமாக்கலாம். சர்வாங்காசனம் செய்தால் கண்டிப்பாக மத்யாசனம் காற்பங்கு நேரமாகுதல் செய்ய வேண்டும். உடல் பருத்த, வண்டி பெருத்த சகோதர சகோதரிகளே! பொறுமையோடு ஆசனப் பயிற்சி செய்யுங்கள். அழகிய உடலைப் பெறலாம்.

வெறும் வயிற்ருேடு ஆசனத்தைச் செய்யுங்கள். உணவுண்டால் நான்கு மணித்தியாலங்கள் கழித்தே செய்யவேண்டும். ஆசனம் கலைந்து ஒரு மணித்தியாலத்தின் பின்பே குளித்தல் வேண்டும். ஆசனங்களையும் ஏனைய பயிற்சிகளையும் ஒரே நேரத்தில் கலந்து செய்யக்கூடாது. வெவ் வேறு நேரங்களில் செய்யலாம். ஆசனங்களில் நான் பெற்ற அனுபவங் கள் சிலவற்றையும் கூறவேண்டியது அவசியமாகின்றது. தற்போது இளைப் பாறிய அதிபராயுள்ள நான் முப்பத்தைந்து வருடங்களாகத் தொடர்ந்து ஆசனப்பயிற்சி செய்து வருகிறேன். எது வித நோய்களுமின்றி, ஆரோக் கியமாகவும், உடல் உறுதியுடனும், மன நின்மதியுடனும் வாழ்கிறேன். என் உதவியை நாடும் நோயாளிகட்கு நோய்க்கேற்ற ஆசனங்களைக் கூறி செய்து பயனடைய ஊக்குவிக்கிறேன். 1979 ம் ஆண்டு தொடக்கம் வட மாகாணத்திலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்குக் கல்விப் பகுதியாரின் கட்டளைப்படி ஆறும் வகுப்புத்தொடங்கி பத்தாம் வகுப்புவரை பாடத் திட்ட ஒழுங்கு ஆசனங்களை புத்தூக்க வகுப்புகள் மூலம் கற்றுக் கொடுத்து வருகிறேன். இது எனது மனப்பூர்வமான தொண்டாகும்.

ஆசனப்பயிற்சி உடலை மாத்திரமன்றி உள்ளத்தையும் பண்படை யச் செய்கிறது. ஆசனப் பயிற்சி பெறுபவன் நல்லதைச் சிந்திக்கிருன், நல்லதைச் செய்யத் தூண்டப்படுகிருன். இவ்வுண்மையை நன்கறிந்த எமது அரசாங்கம், சிறப்பாகக் கல்விப் பகுதியினர், நடப்பு ஆண்டு தொடக்கம் யோகாசனத்தைக் கட்டாய பாடமாக்கியுள்ளனர். ஆறும் வகுப்பில் ஆரம்பிக்கும் ஆசனப் பயிற்சி உயர் வகுப்புவரை விரிந்து கொண்டு போகிறது. ஆசனப் பயிற்சியில் ஆரம்பித்து வரும் மாணவர் களின் வருங்கால வாழ்வில் புதுமலர்ச்சி உண்டாகி சமாதானமாக விரிந்த மனப் பாங்கோடு வாழ்வான். சமுதாயத்திற்கு நல்லவனுவான், நாட்டுக்கு நல்லவனுவானென்பது திண்ணம்.

இறைவனுடைய அன்புக் குழந்தைகளாகிய நாம் அனைவரும் தீய பழக்கங்களை அறவே நீக்கி, ஆசனப் பயிற்சி செய்து ஆரோக்கிய மாகவும் அழகோடும், சகோதர மனப்பான்மையோடும் வாழ வேண்டு மென்பதே எனது மிகக் கனிவான விருப்பமாகும்.

---

துன்பப்படும்போது ஓராயிரம்முறை கடவுளை நினைப்பதைவிட இன்புறும் போது ஒருமுறை அவரை நினைப்பதே மேல்.

— ஆபிரகாம் லிங்கன்

# "ஜனரஞ்சக இசையும் கர்நாடக இசையும்"

"இயலிசைவாரிதி"
"ஸாஹித்ய சிரோமணி"
பிரம்மஸ்ரீ. ந. வீரமணிஐயர் அவர்கள்
DIPLOMA IN MUSIC, DIPLOMA IN NATYA
(University of Madras)
விரிவுரையாளர் — ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்
பிரதம பரீட்சகர்
நாட்டியக்கலை — பரீட்சைத் திணைக்களம் — கல்வி இலாகா.

நான்கு வேதங்களான. ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் ஆகியவற்றுள், ஸாம வேதஸாரமே ஸங்கீதமாகும். தர்மார்த்த காமமோக்ஷங்களை நல்கும், தெய்வீகக்கலை யாகவே, ஸங்கீதம் கருதப்பட்டு வருகின்றது. மனத்தை இறைவன் பால் இழுத்து இசைவிப்பது இசை. இசை ஒரு பக்திக்கலை. மனிதனுடைய மனத்திலே உணர்ச்சியை எழுப்பி தெய்வீக அழகையும், மனச்சாந்தியையும், பேரின்பத்தையும் அளிக்கின்ற பண்பு இசைக்கு உண்டு. இறைவன் நாதப்ரம்மமாக விளங்குகிறான். அவனை அடைவதற்கு மஹனீயர்கள் ஸங்கீதத்தை உபாஸித்து மோக்ஷபதவியை அடைந்துள்ளனர். ஸாலோக, ஸாரூப, ஸாமீப, ஸாயுஜ்ஜ மோக்ஷப்ரதான ஸாதனமாகக் கருதப்படும் கர்நாடக ஸங்கீதம், இன்று எந்த நிலையில் இருக்கிறதென்பதை ஆராய்ந்தால் கடந்த நூற்றாண்டிலே கர்நாடக ஸங்கீதத்திற்கு ராஜயோகம் என்றே கருதத் தோன்றுகிறது. கர்நாடக ஸங்கீதம், அப்போது உற்ற சிறப்பைக் கூறவேண்டுமானால் காரணம் திரிமூர்த்திகளான ஸ்யாமா ஸாஸ்த்திரிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், தியாகராஜஸ்வாமிகள் ஆகிய வாக் கேயக்காரர்களே. இவர்கள் தங்கள் அரிய ஸாஹித்யங்களாலும் அருமையான இசை யமைப்புக்களாலும், கர்நாடக ஸங்கீத உபாசனைகளாலும் ஸங்கீத யோகம் செய்தார் கள். யோகம் என்பது சேர்க்கை. ஜீவப்ரம்ம சேர்க்கைக்கு உதவும் சாதனைகளை, பக்தி யோகம், ஞான யோகம் என யோகமார்க்கம் கூறும். இசையினால் பரம்பொருளுடன் ஜீவனை இணைக்கும் மார்க்கம், ஸமரஸம் பொழியும், ஸப்தஸ்வர ரஸமான கர்நாடக ஸங்கீதம் இன்று எந்த நிலையில் இருக்கிறது என்பதைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

முற்காலத்தைப் போலல்லாமல் இசையை வளர்ப்பதற்கு அரிய, புதிய, நவீன ஸாதனங்கள் மலிந்து காணப்படுகின்றன. இக்காலத்தில், நல்ல நல்ல ஆராய்ச்சி இசை நூல்கள், ஸங்கீத சபாக்கள், அடிக்கடி ஸங்கீதக்கச்சேரிகள், வானொலி, சினிமா, ஒலிபெருக்கி, பதிவுப்பன்னி, டெலிவிஷன் போன்ற வசதியான பல வளர்ச்சிச் சாதனங் கள் இருந்தும், கர்நாடக ஸங்கீதத்தின் தரம் உயர்ந்திருக்கிறதா? என்ற ஆச்சரியம் மிக்க பதிலைத்தரும் கேள்வி உதயமாகிறதது. ஒருதோடிராகத்தை எட்டு நாட்களாகப் பாடி, வந்த சங்கதிகள் திரும்பவும் வராமல் பாடிய, ஒரு தோடிசீதாராமையரைக் காணமுடியவில்லையே! எட்டுக்களைச் சௌக்கத்தில், பல்லவி பாடி பஞ்சகதிகளில் நடைபேதம் செய்து, ஸ்வரப்பிரஸ்தாரங்களை அள்ளி இறைத்த ஒரு பல்லவி கோபாலை யரைப் பார்க்க முடியவில்லையே! ராக ஜீவபாவத்துடன் திரிஸ்தாயிகளிலும் ஆலாபனை செய்து கமகம், பிர்க்காக்களை அநாயாசமாக அள்ளிச் சொரிந்த நாதஸ்வரச் சக்கர

வர்த்தி ஸ்ரீ T. N. ராஜரத்னம்பிள்ளையைக் காணமுடியவில்லையே! கர்நாடக ஸங்கீத லக்ஷண க்ரந்தங்களை ஆராய்ச்சி செய்து அவைகளிலுள்ள ஸாரத்தைக் கிரஹித்து ஆயிரமாயிரம் அபூர்வக் க்ருதிகளை ஆக்கித் தந்த ஒரு மைசூர் வாஸுதேவாச்சாரி யாரைக் காணமுடியவில்லையே! லயம் என்ருல் என்ன என்பதை இந்திய ஸங்கீத வித்வத் சபைகளிலே, நிருபித்த தவில் மேதை யாழ்ப்பாணம் ஸ்ரீ தக்ஷிணமூர்த்திப்பிள்ளையைப் பார்க்க முடியவில்லையே! கர்நாடக ஸங்கீத மேளகர்த்தா ராகங்களை நுணுக்கமாக ஆராய்ந்து யாழ்நூல் தந்த ஒரு ஸ்வாமி விபுலானந்தரைக் காணமுடியவில்லையே! சுருங்கக் கூறினுல் கர்நாடக ஸங்கீத வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள ஆர்வம் மட்டும், வளர்ந்ததே தவிர, ஆக்கபூர்வமான ஸாதனைகள் ஆயிரத்தில் ஒன்றுதான் வளர்ந்திருக் கிறது. மேற்கூறியவை ஒரு ஆஸ்த்திக கர்நாடக ஸங்கீத ரஸிகனின் ஒரு அபிப்பிராயம்.

இனி, ஜனரங்க இசையை ரஸித்து அனுபவிக்கும், ஒரு தற்கால இளம் ரஸி கனின் நோக்கினை அவதானிப்போம். காலச்சக்கரம் வேகமாகச் சுழல்கிறது. எங்கும் ஒரு வேகம், எதிலும் ஒரு உத்வேகம். துரிதகாலத்திலே எல்லாம் இயங்குகின்றன. நாளாந்த வாழ்க்கையிலே கூட ஒரு பரபரப்பு, ஒரு விறுவிறுப்பு. இந்தத் துரித காலப் ப்ரமாணங்கள் ஏன் இப்படி இயங்குகின்றன? ஆறுதல், நிதானம், சாந்தம், அமைதி, அடக்கம், பணிவு இவைகளுக்குப் பொருள் கூற நேரமில்லாதபடி, காலச்சக்கரம் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்றுகிறது. எனினும் இதயத்திலே ஒரு தாஹம், ஒரு இசைத் தாஹம். பரபரப்பும், விறு விறுப்பும் கொண்ட அந்த இளம் இதயம், தனது இயக்கத்திற்கு ஏற்ற துரித காலப்ரமாண இசையை நாடுகிறது. மனச்சோர்வு நீங்க வானெலியைத் திறந்து விடுகிருன். அந்த இளம் ரஸிகன் "எந்தரோமஹானுபாவு" என்ற பஞ்சரத்னப் பாடல் ஒலிக்கிறது மிகுந்த சௌககாலத்தில். அந்த இளைஞனுக்கு இப்பாடலை ரஸிக்க முடியவில்லை. திடீரென்று வானெலி மீட்டர் குமிழைத் திருகுகிருன். உடனே இடியோசை போன்ற வாத்யக்கருவிகள் முழங்க, ஒரு பொப்பிசைப் பாடல் ஒலிக்கிறது, துரித காலப்பிரமாணத்தில். அவனையும் அறியாமல் அவனது தலை ஆடு கிறது. கைகள் அப்பாடலில் காலப்ரமாணத்திற் கேற்பக் கொட்டப்படுகின்றன. இசையின் வேகம் கூடுகிறது. அசைந்த கால்கள் துள்ளுகின்றன. உணர்ச்சி வசப்பட்ட அந்தப் "பொப்" ரஸிகன் ஒரு "பைலா" வையே ஆடிவிடுகிருன். ஜனரங்க இசை அவனை உணர்ச்சி வசப்படுத்தி வேருேர் உலகத்திற்கு, அழைத்துச் சென்று விடுகிறது. அவனது அறிவு, ஆற்றல், ஞானத்திற்கேற்ப, அவனுச்கு இசையின்பம் கிடைக்கிறது. மேற்கூறியவை ஒரு பொப்பிசை ரஸிகனின் ஒரு நோக்கு.

இனி ஒரு மெல்லிசை ரஸிகனின் ஒரு நோக்கினை அவதானிப்போம். தெளி வான, இனிமையான கருத்துக்கள். யாவருக்கும் புரியக் கூடிய வகையிலே எளிய சொற்களால் புனைந்த நல்ல போதனை தரும் கவியமைப்பு. கற்பனைக் காட்சிகளைத் தூண்டக்கூடிய சொல்லாட்சி. மென்மையான தேசிய ராகங்களைக் கொண்ட ஜனரஞ் சகமான இசையமைப்பு, பாடலின் ஆரம்ப நடு இறுதிகளில், பாவம் நிறைந்த, குழைந்த, இனிய வாத்யஇசை, பாவம் தெளிக்கும் பாடல், மதுர குரல் மூலம் இசைக்கப் பெறுகிறது. சுகமளிக்கும் மென்மை அந்தப் பாடலில் இருக்கிறது. பாஷை புரிகிறது. மொழியறிவு கவிதை நயத்தை இசையுடன் பருக வாய்ப்புத் தருகிறது. மஹாஜன அரங்கத்திலே மெல்லிசைக்கு ஒரு தனி மவுசு. இதனுல் இது ஜனரஞ்சக இசையாகிறது. மேற்கூறியவை ஒரு மெல்லிசை ரஸிகனின் அபிப்பிராயமாகும். இனி ஜனரங்க இசை ரஸிகனுன கிராமீயப்பாடல் ரஸிகனை நோக்குவோம். தாலாட்டுப் பாடல் தொடக்கம், இறுதி ஒப்பாரி வரைக்கும், இந்த ஜனரஞ்சக இசையே வாழ்க் கையாகி விடுகிறது. தெம்மாங்கு, நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, கிளிக்கண்ணி

பாம்பாட்டிப் பாடல், அம்மானைப் பாடல், சித்தர்பாடல், ஊஞ்சற்பாடல், கப்பற்பாடல், கும்மிப்பாடல், ஏற்றப்பாடல் போன்றே பாமரகானங்கள் எவ்வளவோ தத்துவங்களை மக்களுக்கு ஊட்டிவைக்கிறது. இத்தகைய பாடல்களின் வர்ணமெட்டுக்கள் கிராமீயத்தை யொட்டி' யாவரையும் கவரும் வண்ணம் அமைந்திருந்தாலும், மெல்லிசை பொப் பாடல்கள் போல் இளம் ரஸிகர்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருப்பது குறைவாகவே தென்படுகிறது. இது ஒரு துர்ப்பாக்கியம். ஜனரங்க இசையான இத்தகைய நாட்டுப்பாடல்களை மீண்டும் பிரபல்யமடையச் செய்வதற்கு, ஸங்கீத அபிமானிகள் முயற்சிகள் எடுப்பது பாராட்டப்பட வேண்டியதொன்று. பாமரகானமாகிய நாட்டுப் பாடல் ரஸிகனின் நோக்கினை அவதானித்த நாம், இப்போது கர்நாடக ஸங்கீதத்தில் தமிழிசை ரஸிகனின் ஒரு நோக்கினைக் காண்போம். இந்தத் தமிழிசை ரஸிகனுக்கு சமஸ்கிருதமோ, தெலுங்குப் பாஷையோ தெரியாது. ஆனால் பரமஞானஸ்தன், மஹா புத்திசாலி, துணிச்சலாக உண்மையைக் கூறும் யதார்த்தவாதி, கர்நாடக ஸங்கீதக் கச்சேரிகளிலே அவனுடைய ரஸனை யதார்த்தமானது.

இசை இனியது, தமிழிசை அதனினும் இனியது. தமிழிசை உள்ளத்தோடு உணர்வோடு, வாழ்க்கையோடு பொருந்தியது. ஏற்றம் உள்ளது. வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் அரும்பியது. இன்றும் இயல்பு பொன்றாது, பொலிவு குன்றாது, ஆற்றல் ஆறாது நிலைத்து நிற்கின்றது. இதற்கு முடியவில்லை. இதன் வாழ்வு எல்லையற்றது. இதன் தன்மை இன்பந்தருவது. இதன் ஆற்றல் அளவிடற் கரியது. இதன் தரம் ஒப்புவமை அற்றது. செந்தமிழ்ப் பாடல்களை பக்தி பரவசத்துடன், பாடலின் பொருள் உணர்ந்து, ராசபாவத்துடனும் ஸாஹித்ய பாவமும் பொருந்த இசைக்கும் போது, நிலைத்து நின்று இனிக்கும் கற்கண்டின் சுவையை அந்தத் தமிழிசை ரஸிகன் அனுபவிக்கிறான். மெல்லிசைத் தமிழ்ப் பாடல்களைச் சுவைக்கும் போது, வெல்லக் கட்டியைப் போல் கரைந்தினிக்கும் சுவையை அனுபவிக்கிறான். பிறமொழிப் பாடல்களைச் சுவைக்கும் போது கரும்பின் சாற்றினைத்தான் சுவைக்கிறான். இசை இனிமைதான். இருந்தும் ஏன் அப்படி? பிறமொழிப் பாடல்களுலுள்ள ஸாஹித்ய பாவங்களை அந்த ரஸிகனால், மொழி தெரியாத காரணத்தால் பூரணமாக ரஸித்து அனுபவிக்க முடியவில்லை. பிறமொழிப்பாடலிலுள்ள ராகபாவங்களையும், கற்பனை சங்கதிகளையும் தான் அந்த ரஸிகன் ரஸிக்கிறான். பண்முறையாகப் பாடும் தேவார திருவாசகங்களை மெய்தானரும்பி விதிர் விதிர்க்க, ஊனுருக, உளமுருகக், கண்ணீர் பெய்ய, பக்தி வயப்பட்டு ரஸித்துப் பரவசமாகினான். பக்தியும், இசையும், மொழியும் பூரணத்துவமாக இருக்கும் தன்மையை உணர்ந்த ரஸிகன், தன் மனம் கவர்ந்த, தன்னால் புரிந்து கொண்டு அனுபவிக்கும் இசையை ரஸிப்பதில் ஆச்சரியம் இல்லை அல்லவா?

''ஜீவன்'' இல்லாமல் ஸங்கீதம் இல்லை. இந்த ஜீவ பாவத்தைக் கொடுப்பது உணர்ச்சி. உணர்ச்சியைத் தருவது ஸாஹித்ய அர்த்தபாவம். இந்த அர்த்த பாவத்தை உணரவைப்பது மொழி. அதாவது பாஷை. பாஷையைப் புரிந்துகொள்ள முடியாத பாடகன், பாஷையைப் புரிந்துகொள்ள முடியாத பாடலை, பாஷையைப் புரிந்து கொள்ள முடியாத ரஸிகர் மத்தியிலே, பாஷையைப் புரிந்துகொண்டவன் போல் பாவனை செய்து பாடுகிறான். பாஷையைப் புரிந்து கொள்ள முடியாத ரசிகனும், பாஷையைப் புரிந்து கொண்டவர் போல் பாசாங்கு செய்து ''ஆஹா'' ''பேஷ்'' ''பீரமாதம்'' ''பலே'' ''அருமை'' என்றெல்லாம் கூறி, கரும்பின் சாற்றினைச் சுவைப்பது போல், அந்த ஞானஸ்தன் பாடும் கர்நாடக இசையின் இனிமையை மட்டும் ரஸித்துவிட்டு, அற்புத

மான தெய்வீகமான ஸாஹித்யங்களின் தத்துவார்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல், கரும்புச் சக்கையாகத் தள்ளிவிடுகிறார்கள். பாடகன் பாடலின் கருத்தை நன்கு புரிந்தால்த்தானே, ஸாஹித்யங்களின் அர்த்த பாவங்களையும், ஜீவனையும் ராக பாவத்துடன் இணைக்க முடியும்? அந்த ஜீவனுடன் பாடினால் தானே பூரணமாக ரஸிக்க முடியும்? அன்றியும், அக்ஷரசுத்தம், தெளிவான சொல்லாட்சி, கருத்திற் கேற்ப பதம் பிரித்துப் பாடும் ஞானம், இவை மொழிப் பயிற்சியால் ஏற்படக்கூடி யவை. பிற மொழிகளில், பாண்டித்யம், அடையாவிட்டாலும், பாடல்கள் பாடும் அந்தப் பாடலின் அர்த்த புஷ்டியையாவது அறிந்து கொள்ளும் வகையிலேனும் பாடலை ஜீவனுடன் பாடுவது அவசியம் அல்வா?.

மேற்கூறிவை ஒரு தமிழிசைப் பிரியனின் அங்கலாய்ப்பு. இதனை நன்குணர்ந்த அண்ணாமலை சர்வகலாசாலை தமிழிசை வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டு அளப்பரி யது. பாராட்டுவதற்குரியது. தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

இதுவரை, ஒரு ஆஸ்த்திக கர்நாடக ஸங்கீத ரஸிகர், ஜனரஞ்சக இசைப் பிரி யர்களான, மெல்லிசை, பொப், கிராமீயப்பாடல் ரஸிகர்கள், ஒரு தமிழிசைப்பிரியர், ஆகியோரது நோக்குகளை அவதானித்தபோது ஒரு பேருண்மை புலனாகின்றது. எக் காலத்திலும் இசை எல்லோருடைய மனத்தைக் கவர்கிறதென்பதும், அவரவர், அறிவு, ஆற்றல், ஞானம் ஆகியவற்றிற்கு ஏற்றவண்ணமே ரசிகத்தன்மையும் அமை கிறதென்பதும் புலனாகிறது. கர்நாடக ஸங்கீத ரஸிகன், உயர்ந்த நோக்கில், ஜன ரஞ்சக இசையை ரஸிப்பதுபோல, ஜனரஞ்சக இசை ரசிகனும் கர்நாடக இசையை உயர்ந்த நோக்கில் ரஸிக்கும் ஒரு காலம் வருமாயின், அது கர்நாடக ஸங்கீத வளர்ச் சியின் சிகரமான காலம் எனலாம். இதை உணர்ந்தே கர்நாடக ஸங்கீதக் கச்சேரி களின் இறுதியில், ''துக்கடா'' என்ற உருப்படியை கச்சேரி ''பந்தா''வில் சேர்த் துள்ளார்கள். கர்நாடக ஸங்கீத வித்வான்கள். ''துக்கடா'' உருப்படி ஏறக்குறைய மெல்லிசைப்பாடல் போன்றிருந்தாலும், கச்சேரிகளில் பாடுவதற்குரிய கனம், காத்திரம் கொண்டது. எனினும் ஜனரஞ்சக இசை ரசிகர்களை வசீகரித்து, சுத்தமான கர்நாடக இசையை ரஸிக்கச் செயயும் ஒரு மனோவசியப் பாடலே இந்தத் துக்கடா உருப்படி மலரில் தேன் இருப்பதுபோல.

இதை இன்னும் சில வித்வான்கள் கையாண்டு, பெரும் வெற்றி கொண்ட இசைக்கச்சேரிகள் பலவற்றை இன்றும் நாம் காணமுடிகிறது. கர்நாடக ஸங்கீதக் கச்சேரிகளில் ''துக்கடா'' என்ற பெயரில் வித்வான்கள் பாடிவருவதனால் கர்நாடக ஸங்கீதமும் ஜனரஞ்சக இசையும் வளர்ச்சியடைந்து வருவது கண்கூடு.

(சைவ மஹாஜன வித்தியாலயப் பழைய மாணவன்)

# பொருட்களின் விலை அதிகரிப்பதற்கு எரிபொருட்களின் விலை அதிகரிப்பும் ஒரு காரணம்

இன்று விடம்போல பொருட்களின் விலைகளானது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதைக் கண்டு மக்கள் தம் எதிர்காலம் பற்றியும் பொருட்களின் நாளாந்த விலை ஏற்றத்தைப் பற்றியும் எண்ணிக் கலங்குகிறுர்கள். ஒவ்வொரு நாட்டு அரசாங்கங்களும் தம்முடைய எதிர்காலத்திற்காகவும், ஏராளமான மக்களின் நன்மதிப்பைப் பெறுவதற் காகவும் விலைகளைக் குறைப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளும் கூட விலைகளை மேலும் உயர்த்துவதாக அமைகின்றதே அன்றி குறைக்கின்றதாக இல்லையே என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். இந்த முயற்சிகள் வீண்போவதற்குக் காரணம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். அதாவது இரண்டு உலகமகாயுத்தங்களின் பின்னர் ஏற்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்புகளுக்கும் 1965ம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளுக்கும் இடையில் பெருமளவு வித்தியாசம் உள்ளது. முன்னைய விலை அதி கரிப்பானது யுத்தம், உற்பத்தி அழிவு, உற்பத்தியின்மை போன்றவற்றினுல் ஏற் பட்டதாகும். இரண்டாவதாகக் கூறிய விலை அதிகரிப்பானது முன்னைய காரணங்களன்றி எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டு நடவடிக்கையினுல் ஏற்பட்டது.

எரிபொருட்களின் விலை அதிகரிப்பதற்கு காரணம் எரிபொருட்களுக்கு நெகிழ்ச்சி அற்றதேவை இருப்பதாகும். அதாவது சமுத்திரங்களிற் நகரும் இராட்சதக் கப்பல் கள் தொடக்கம் சிறுகுடிசைகளில் எரியும் கும்பிவிளக்குகள் வரையும் எரிபொருட் களினுலேயே இயங்குகின்றன. கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் குடிசைக் கைத்தொழிலாகச் செய்த நெசவுத் தொழில் கைத்தொழிற் புரட்சியின் பின்னர் இயந்திரமயமானது. இயந்திரத்திற்கு எரிபொருள் தேவையாகும். இதைத் தொடர்ந்து போக்குவரத்து விருத்தி ஏற்பட்டு புகையிரதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனுல் மாட்டு வண்டிப் போக்குவரத்துக்கள் கைவிடப்பட்டன. வயல்களில் ஏர் கொண்டு உழும்முறை கைவிடப்பட்டு இயந்திரங்கள் மூலம் உழுதல் இடம்பெறுகின்றது.

ஆகவே, எங்கு பார்த்தாலும் இயந்திரமயம். இயந்திரமயத்தினுல் எரி பொருட்களின் தேவை அதிகரிப்பு ஏற்பட்டது. இதனுல் அவற்றின் விலை அதி கரிப்பு உருவாயது. இதுவே இன்றைய உலகின் பிரச்சனை நிறைந்த விடய மாக உள்ளது. ஒரு பொருளின் உற்பத்திச் செலவானது மூலப்பொருட் செலவு கூலி, தொழிற்சாலைச் செலவு, நிர்வாகச் செலவு என்ற பல்வேறு செலவுகளால் உள்ளடக்கப்படுகிறது. எரிபொருட்களின் அதிகரிப்பினுல் ஒவ்வொரு செலவுகளும் அதிகரிக்கவேண்டிய நிற்பந்தம் ஏற்படுகின்றது. அதாவது சில மூலப்பொருட்கள் இயந் திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே இங்கு எரிபொருட்களின் விலை அதிகரிப்பு இயந்திரச்செலவை அதிகரிக்கின்றது. மேலும் மூலப்பொருள் உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து முடிவுப் பொருட்களாக்கும் இடத்துக்குக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவு அதிகரிக்கின்றது. பொருட்களின் விலை அதிகரிப் பினுல் தொழிலாளர்கள் வாழ்க்கைச்செலவு அதிகரிக்க அவர்கள் தம் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய கூலி உயர்த்தக் கோருகிறுர்கள். இக் கூலி உயர்வும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. போக்குவரத்துச் செலவு அதிகரித்துக் கொண்டு வந்தால் பொருட் களின் விலை அதிகரிக்கும். அதாவது மூலப்பொருள் கொண்டு செல்லும் செலவுகள் தொழிலாளர்களை அவர்கள் வசிக்கும் இடத்துக்கு எடுத்து தொழில் செய்யும் இடங் களுக்கு கொண்டு செல்லும் செலவுகள் யாவும் அதிகரிக்கின்றன. இந்தப் போக்குவரத்துச் செலவானது இன்றைய நிலையில் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதற்கு பொருட் களின் விலை அதிகரிப்பே காரணமாகும். தொகுத்து நோக்கும்போது பொருட்களின் விலை அதிகரிப்பதற்கு எண்ணெய் விலை அதிகரிப்பே முக்கிய காரணம் என்பது தெளி வாகிறது.

அ. மகேந்திரராசா
க. பொ. த. (உயர்தரம்)

# "திருவாசகம் என்னும் தேன்"

திருநெறியெனப் போற்றப் பெறுவதாகிய சைவசமயத்தின் உயர் நிலையையும், இறைவன் இயல்பையும், அவன் அடியார் பெருமையையும் தெளிவாக விளக்குவன பன்னிரு சைவத் தமிழ்த் திருமுறைகளாகும். இவை பன்னிரண்டும் மக்கள் உள்ளுருகிப் பயின்று சிந்தையிலிருத்தவும் அவற்றின் மேன்மையை உணர்ந்துய்யவுமுரியன. பன்னிரு திருமுறைகளுள் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

திருவாதவூர்ச் செம்மலாகிய மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்த திருவாசகம் என்னுந் தேன் நமது ஊனினை உருக்குவது, உள்ளொளி பெருக்குவது, உவப்பிலா ஆனந்தமாகிய தேனினைச் சொரிவது, உள்ளத்திடை ததும்பி நிற்பது, என்புத் துளைதோறும் பாய்ந்து நிரம்புவது நினைந்தொறும், காண்டொறும், பேசுந்தொறும், எப்பொழுதும் அனைத்தெலும்பும் நெகப் பேரின்பம் பயப்பது. கன்னெஞ்சை உருக்கும் கனிவிலும் கண்ணுதற் பெருமான் கருணைக்கு நம்மை ஆளாக்கும் பான்மையிலும் திருவாசகத்துக் கீடு திருவாசகமே.

இறைவன் பாற் கொண்ட அன்புப் பேரூற்றினின்றும் பீறிட்டெழுந்த அனுபவப் பெருவெள்ளமே அவர் யாத்த திருவாசகமாகும். அன்னாரின் மணிவாசகத்தில் முதிர்ந்த சிவானுபவம் ஒன்றே ஆதி முதலந்தம் மீறுகப் புரையிட்டுச் செல்கின்றது.

> "புன்புலால் யாக்கை புரை புரை கனியப்
> பொன்னெடுங் கோயிலாப் புகுந்து
> என்பெலாம் உருக்கிய ஈசனே"

இடைவிடாது சிக்கெனப் பிடித்த தன்மை இவர் இறைவனிடத்துக் கொண்டிருந்த பக்தி மேம்பாட்டினைப் புலப்படுத்துகின்றது.

> "பார்பதம் அண்டமனைத்துமாய் முளைத்துப்
> பரந்த தோர் படரொளிப் பரப்பே"

என்ற றெடக்கத்துப் பாடல் மூலம் இறைவனின் வியாபகத்தை வியந்து கூறுகிறார். ஞான ஒழிப் பிழம்பானவன் இறைவன். ஆதவன் முன் இருள் போல இறைவன் முன் மாயா காரியத் தொகுதியனைத்தும்

அழிந்து நிற்குந் தன்மை புலனுகிறது. மேலும் படரொளிப் பரப்பாகப் பரந்த இறைவன் வேறு வேறு இடங்களில் எங்ஙனம் எழுந்தருளுவான் என்ற வினு எழுமல்லவா? ஆம்! அவன் சிறப்புப் பெற்ற அடியார்களின் சிந்தையின் கண் தேன் ஒழுக்குகள் போன்று ஒழுந்தருளியுள்ளான். அது மாத்திரமன்று. ஆலயங்கள் தோறும் சிவமூர்த்தியாகவும் விளங்குகிறுன்.

''சீருறு சிந்தை எழுந்த தோர் தேனே
திருப்பெருந்துறை யுறை சிவனே''

என அழகாகச் சொல்லியுள்ளார். தேனே! சிவனே! படர்ந்த ஒளிப் பரப்பே! என அடிகளார் எடுத்தாண்ட சொற்கள் நயம் மிகுந் தவை. ஒவ்வொரு சொல்லும் பொருண்மை மிக்கவை. தான் கருதிய பொருள் நிறைந்த சொல்லாலேயே சொற்பஞ்சமின்றி எழுதிக் காட்டிய பெருமை எம் மணிவாசகரையே சாரும்.

திருவாசகம் இரங்கற் சுவை மிகுந்த பாடற்றெகுதி, திருப்பெருந் துறையில் ஞானுசாரியனுகிய இறைவனைத் தரிசித்து அக்கணமே பிரிந்த மணிவாசகர் பிரிவுத் துன்பத்தினுல் இரங்குகிறுர். இரங்கி நைந்துருகுகின் றுர். யான் பொய்யுடையேன்; என்மனமோ வஞ்சம் நிறைந்தது. என் அன்பும் களங்கமுடையது. தீவினையேன் நின்னை நினைந்து நினைந்து வருந்தி அழுவேனுயின் உனையடைவேன். தேனே! அமுதே! தித்திக்கும் கரும்பின் தெளிவே! அடியேன் உன்னை வந்தடையுமாறு அருள் பாலித்திடுக! என இரந்து வேண்டுகின்றுர்.

மேலும் இப்பிரபஞ்ச வாழ்க்கையினைக் கூறுமிடத்து வாதவூரர் பாசம் என்னும் கொடுவினையின் பாற்பட்டு அதனுல் மொத்துண்டு ஈற்றில் ஐந்தெழுத்தின் துணைக் கொண்டு ஈடேறிய செய்தியினுற் பந்த மெனும் கயிற்றுற் கட்டுண்டு கிடக்கும் எமக்கும் உய்யும் வகையிது வெனச் சொல்லாமற் சொல்லி வைக்கின்றுர்.

''தனியனேன் பெரும் பிறவிப் பௌவத்து எவ்வத்தடந்
திரையால் எற்றுண்டு பற்றென்றின்றிக்
..................................................
..................................................
முனைவனே முதலந்த மில்லாமல் லற்கரை காட்டி
ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே''

என நயம்பட வுரைக்கின்றுர்.

மேலும் திருவாசகத்தை பன்முறை ஓதியுணர்ந்த இராமலிங்க சுவாமிகளும் அதன் பெருமையைக் கூறுமிடத்து

''வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''

எனப் பரிவுடன் பகர்கின்றார். பாடலைப் படிப்பவர் உள்ளமும் அப்பாடற் பொருளும் அத்துவித நிலையை யடைதல் வேண்டும். அந் நிலையையே ''நான் கலந்து பாடுங்கால்'' என்கிறார் சுவாமிகள். திருவாசகத்தின் சுவை ஊன் கலந்து உயிர் கலந்து இனிப்பது, உயிரிற் கலந்து தன் வசமாக்கும் கனிவு திருவாசகப் பாடல்களைப் பொருளுணர்ந்து ஓதுவாராயின் கல் நெஞ்சமும் கரையும். ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்னும் மூதுரையும் இது பற்றி எழுந்ததே. ''திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையாம்'' மாணிக்கவாசகப் பெருமான் தாம் இறைவன்பாற் கொண்ட காதலைத் திருவாசக மென்னுங் கனிரசம் மூலம் எம்முடன் பகிர்ந்து அனுபவிக்க ஏற்படும் பாங்கு சாலவும் போற்றுதலுக்குரியது.

செல்வி தில்லையம்பலம் — புஷ்பராணி
க. பொ. த. உயர்தரம் முதலாம் வருடம்

---

வாழ்க்கையின் எல்லாக் காரியங்களும் அன்பு, அறிவு, உழைப்பு ஆகிய மூன்று குணங்களின் மீது அமைந்துள்ளன. முக்காலியின் ஒரு கால் ஒடிந்துபோனால் அது நிற்காது. மூன்று கால்களும் இருக்க வேண்டும். முக்காலி என்ற பெயரிலேயே அதன் உருவம் அடங்கியுள்ளது. வாழ்க்கையின் நிலையும் இதுவே. ஞானம், பக்தி, கர்மம் அல்லது இடையறாத உழைப்பு என்ற இவை வாழ்க்கையின் மூன்று கால்கள். இம்மூன்று கால்களும் சேர்ந்து அமைப்பது ஒரு பொருளையே.

— வினோபா

# இன்றைய உலகில் வள்ளுவர்

பல்லாற்றுனும் ஆராய்ந்து பார்க்குமிடத்து திருவள்ளுவர் இயற்றிய திருமறை, அழியாச் செல்வம் என்று இன்று சொல்லப்பட்டு வருகிறது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் கடைச்சங்ககாலத்தில் அரங்கேற்றிய உலகப் பொதுமறை தொன்மை வாய்ந்தது. இத்தகைய நூலின் சிறப்புக் கருதியே பல்வேறு மன்றத்தினரும் வள்ளுவர் விழாக்களையும் திருக்குறட் போட்டிகளையும் நடாத்தி வருகின்றனர். பல மொழி பேசுவோரும் தத்தம் மொழிகளில் இந் நூலை மொழிபெயர்த்தும் உள்ளனர்.

உலகிற்கு ஒளி கொடுக்கும் மணிவிளக்காகத் திருக்குறள் விளங்குகிறது. இந்நூலின் பெருமையால் இதனை அருளிய பொய்யா மொழித் தேவரின் பெயரும் அழியாது இன்றும் நிலைத்து வாழ்கின்றது. இந்நூலின் கண் அமைந்த குறட்பாக்களின் அமைப்பு அதனை யாத்தவருக்குப் பெருமையைக் கொடுக்கிறது.

வள்ளுவநாயனுர் இயற்றிய குறள் மணிகளான முத்துக்குவியலில் உள்ள ஒவ்வொரு மணியும் ''கடுகைத் துளைத் தேழ்கடலைப் புகுத்திய'' பாங்கில் அமைந்துள்ளது. இந்நூல் இயற்றிய காலந் தொட்டு எக்காலத் திற்கும், எம்மதத்தவருக்கும் பொதுவான நூலாக அமைந்திருத்தலினுற் போலும் இதற்குப் ''பொதுமறை'' என்ற பெயரும் ஏற்படலாயிற்று

''வள்ளுவர் தந்த திருமறை தமிழ் மாதின்
இனிய உயிர்நிலை

என்று தேசியவிநாயகம்பிள்ளை பாடியுள்ளார். இந்நூல் தமிழ் மாதின் உயிராக விளங்குவதாயின் இதன் உயர்நிலை நன்கு புலனுகிறது. இன்றைய உலகில் வள்ளுவர் என்ற விடயத்தில் நாம் முதலில் உணரக் கூடியது யாதெனில் இன்றைய உலகில் மட்டுமல்ல என்றும் இந்நூலின் கண் அமைந்த பொருள் கடல்போல் ஆழமும், வான் வெளி போல் விரிவும் கொண்டதாயிருக்கின்றமையாகும், இது மட்டுமல்லாது வையத்து வாழ்வாங்கு வாழும் முறையினையும், அறிவுரைகளையும். அறவுரைகளையும் அரசியல் ஒழுங்குகளையும், பழமொழிகளையும், உவமைகளையும், நகைச் சுவைகளையும் ஒருங்கே தன்னகத்தே கொண்டுள்ளது இதனுல் இந்நூல் எக்காலத்திற்கும் ஏற்ற இன்ப நிலையமாக விளங்குகிறது.

இன்றைய உலகில் சுருக்கமும், விளக்கமும், சுவையும், பொலிந்த தூயமறை என்று கூறக்கூடிய நிலையில் திருக்குறளைத் தவிர வேறு ஒரு

நூலுமில்லை என்று கூறிவிடலாம். எனவே தான் சங்கமருவிய காலத்துப் புலவர்கள் இதனை அழியா மறை, தூயமறை, பொதுமறை என்றெல்லாம் புகழ்ந்துள்ளனர்.

அடுத்து இன்றைய உலகில் வள்ளுவர் என்ற விடயம் பற்றி எழுத வேண்டியநிலை ஏற்படக்காரணம், இந்நூலின் சிறப்பும், அமைப்பும் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய முறையில் அமைத்திருக்கின்றமையாகும்.

மக்களின் நல்வாழ்வுக்காக இந்த உத்தம நூலைத் தந்துதவிய பெருமானின் பிறப்பும், வரலாறும், உள்ளவாறே உணர முடியாமை நம் துர்ப்பாக்கியமாகும். எனினும் அவர் இயற்றிய பொது மறையைக் கொண்டு அவரது வாழ்வையும், ஊர்ச்சிறப்பையும், நாம் ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொள்ளலாம். இவர் உலகில் பரவியிருந்த வேற்றுமையை நன்குணர்ந்தவர். எனவேதான் இவர் உயர்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று நினைத்தார். முயன்றார். அவரது அரும் முயற்சியும், ஊக்கமுமே திருக்குறள் என்னும் தூய கருவூலமாகத் தமிழ் நாட்டிற்குக் கிடைத்தது. இன்று அதனைத் தமிழ்நாடு மட்டுமன்றி உலகம் முழுதும் கற்றுப் பயன் பெற்று வருகின்றது.

இப்புனிதநூலை, இன்பத் தேன்கூட்டை, தெவிட்டாததீந்தமிழாலாய திருநூலை எல்லோரும் கற்றுப் பயன் பெறவேண்டும். ஒரு அளவு தமிழில் தரமடைந்த ஒவ்வொருவனும் கற்றல் அத்தியாவசியம் என்பதை உணர்ந்துதான் போலும் உயர்கல்வியில் தமிழ்ப்பாடத்தில் திருக்குறள் கட்டாய நூலாக வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய விலைமதிப்பற்ற அரிய பொக்கிஷத்தை பின்வருமாறு பாடிப் புகழ்ந்துள்ளனர்.

''வள்ளுவர் எழுதிய ஒரு நூலாம்
வையம் போற்றிடும் பெரும் நூலாம்
தெள்ளமுதினைத் தரு நூலாம்
திருக்குறளாகிய திருநூலாம்.

**வாழ்க வள்ளுவர்! வாழ்க வள்ளுவம்!**

செல்வி இ. தெய்வவிமலா
வகுப்பு 10 A

# நீர்

"வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் குறள் நீரின் மகிமையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. உலகின் நிலப்பரப்பிலும் நீர்ப்பரப்பு அதிகமாகும். உலகின்கண் வாழும் உயிருள்ளன அனைத்திற்கும் நீர் அத்தியாவசியமாகும். நீரில்லாத இடங்களில் உயிரினங்களைக் காண்பது அரிது. இதிலிருந்து. உயிர் வாழ்வனவற்றிற்கு நீர் எவ்வளவு இன்றி யமையாதது என அறியக்கிடக்கின்றது,

ஒரு தாவரத்தில் அண்ணளவாக 75 வீதம் தொடக்கம் 95 வீதம் வரை நீருண்டு. தாவரக் கலமொன்றின் முதலுருவின் தொழிற்பாட்டிற்கு இஃது மிகவும் இன்றியமையாததாகும். கனிப் பொருட்களை கரைசல் வடிவத்தில் உறிஞ்சுவதற்கும், ஆக்கிய உணவுப் பதார்த்தங்களைத் தாவரத்தின் பல் வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கும், பல்வேறு இரசாயன மாற்றங்கள் நிகழ்வதற்கும் நீர் அத்தியாவசிய மாகும்.

இவ்வாறு விலங்கினங்களின் கலத் தொழிற்பாடு, இரத்தச் சுற்றோட்டத் தொழிற்பாடு, சுவாச, உணவு, கழிவுத் தொழிற்பாடு ஆகியவற்றிலும் நீர் முக்கிய பங்கை வகிக்கின்றது. ஆறு, கடல், குளம், கேணி, கிணறு, மழை வீழ்ச்சி ஆகியவற்றின் மூலம் நாம் நீரைப் பெறுகின்றோம். மேற் கூறியவற்றிலுள்ள நீர் சூரியனின் உதவியினாலும், ஆவியுயிர்ப்பு மூலமும் நீராவியாகி மேலே சென்று குளிர்ச்சியடைவதனால் மீண்டும் மழையாகப் புவியை வந்து அடைகிறது.

விஞ்ஞான உலகில் நீரைப்பற்றிய ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டனர். நீரானது, ஐதரசன், ஒட்சிசன் ஆகிய மூலகங்களால் ஆன ஒரு சேர்வை எனவும், அதற்கு $H_2O$ என்ற மூலக்கூற்றுச் சூத்திரத்தையும் கொடுத்தனர். அமிலம் கலந்த நீர் மின் பகுப்பின்போது ஐதரசன், ஒட்சிசன் ஆகிய வாயுக்களாக மின் வாய்களில் பெறப்பட்டன. இவ்வாறு பல முறை செய்யப்பட்ட பரிசோதனைகள்மூலம் நிரின் அமைப்பு அறியப்பட்டது. ஐதரசன், ஒட்சிசன் ஆகிய மூலகங்களின் அணுக்கள் 2 : 1 என்ற விகிதத்தில் பங்கீட்டு வலுப் பிணைப்பு மூலம் நீர் மூலக் கூறுகளை உண்டாக்குகின்றன,

நீரை அவற்றின் தன்மைக்கேற்ப இருவகைகளாகப் பிரிக்கலாம்:

(1) வன்னீர்.
(2) மென்னீர்.

சவர்க்காரத்துடன் விரைவில் நுரையை ஏற்படுத்தாத நீர் வன்னீர் ஆகும். கடல் நீர், கிணற்று நீர் இதற்கு உதாரணங்களாகும். சவர்க்காரத்துடன் விரைவில் நுரையை ஏற்படுத்தும் நீர் மென்னீர் ஆகும். மழை நீர், ஆற்று நீர் என்பன இதற்கு உதாரணங்களாகும். தூய நீரானது நிறம், மணம், சுவை அற்ற ஒரு திரவமாகும். இது மின்னைக் கடத்தாது. இதன் கொதி நிலை 100 பாகை சதமளவை யாகவும் உறைநிலை 0 பாகை சதமளவையாகவும் இருக்கும்.

உயிருள்ளன நீரை நீராகவும், உணவிற் கலந்தும் உட்கொள்ளு கின்றன. நாம் ஒவ்வொருவரும் நாளாந்தம் ஏறக்குறைய நாலு இருத்தல் நீர் அருந்துகிறோம். ஆனல் அவ்வளவு நீரும் உடல் வளர்ச் சிக்குப் பயன்படுவதில்லை. உட்கொள்ளும் நீரின் ஒரு பகுதி சிறுநீர், வியர்வை, சுவாசத்தின்போது வெளி விடப்படும் நீராவி ஆகிய கழிவுப் பொருட்களாக உடலிலிருந்து வெளியேறுகிறது, தாவரங்களும் நீரை ஆவியுயிர்ப்பின்போது வெளிவிடுகின்றன. உயிருள்ளன, நீரை உள் ளெடுத்தலும், வெளி விடுதலும் நடைபெரு விடின் அவை உலர்ந்து இறந்துவிடும். எனவே எல்லா உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு நீர் இன்றியமையாதவொரு பொருளாகும்.

இலிங்கேஸ்வரன் வே.
வகுப்பு ; 8 — ஏ.

---

பாலில் சத்துப்பொருளும் உள்ளது. கெடுவதற்கு ஏற்ற தன்மையும் அமைந் துள்ளது. மனிதருடைய மனமும் அத்தகையதே. மனத்தில் உயர்ந்து விளங்கு வதற்கு உரிய நல்ல இயல்புகளும் உண்டு. தாழ்வதற்கு உரிய தீய இயல்புகளும் உண்டு.

— டாக்டர் மு. வரதராசனுர்

# இலவசப் பாடநூல் விநியோகம்

மாணவர்களாகிய நாம் கல்வியிற் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக கல்வித்திணைக்களம் இலவசப் பாடப்புத்தகங்களைத் தந்துள்ளது. இதனால் வறிய மாணவர்களும் வித்தியாசமில்லாமல், சிரமமின்றிப் படித்து முன்னேறலாம். இந்நூல்கள் எங்கள் அரசாங்கத்தால் எமக்குக் கொடுக்கப்பட்ட நன்கொடைகள். இப் புத்தகங்களைக் கொண்டு நாம் நன்றாகப் படித்து முன்னேறுவோம். நாங்கள் இவற்றை நன்றாகப் பேணிப் பாது காத்து, அடுத்த வகுப்பு மாணவர்களுக்கும் உதவ வேண்டும். இதுவே; நாம் கல்விச் சேவையினர்க்குச் செய்யும் கைமாறுகும்

*''நன் கிதைப் பேணி*
*நலமே கற்று*
*நற்குணம் பெற்ற*
*நற்குடியாவோம்''*

பா. குமரவேள்
(IVம் வகுப்பு)

# ENGLISH DAY IN OUR SCHOOL

We had our English Day on July 19th last year. We made preparations for it many days ahead and we enjoyed the rehearsals. Our English teachers took great pains to train us and make us perfect in the various items,

We decorated our school hall for the English Day. Our teachers did help us to erect a stage and to make all arrangements for the day. Children from Grade I to Grade 10 took part in all the activities. We had items such as Action Songs, Playlets, Recitation, Speeches etc. We also had Folk dances, We had two plays which really attracted the aduience They were 'Sri Sangabo' and 'The Sleeping beauty.' I took part in the playlet 'Sri Sangabo'

The guests were our C E. O English N R, Mrs. J G. Varnar, Mr. S. Thananchayan C E. O - Manipay, Mr. S. Theivathavapalan In Service Adviser English and our Principal Mr. K. Ratnam, At the end of the day's entertainment the chief guest remarked that they were happy at the standard of English displayed by all the performances. They praised our achiecements and made us proud and happy.

We were so sorry that a bigger crowd could not see the performances as our school hall is small. Our English Day was agreat success and we hope to have a better English Day this year.

**N. Pushparajah**
*Grade 10*

# MY VILLAGE

Inuvil is my village. It is a big village. Most of the people in my village are Farmers. Some of them are employed in the Government and the Private Sector. There are Government and private establishments in Inuvil.

The Jaffna - Kankesanturai road runs through my village. We have road and rail link to Jaffna and other distant places.

Uduvil, Chunnakam, Kondavil, Manipay are our neighbouring villages. We have good schools and other amenities. Various societies and youth leagues labour hard for the betterment of our village. They organize shramadana campaigns, film shows, culturral shows and sports at times for the good of our village.

Inuvil is primarily a Hindu village. But the Christian missionary too did a great service to us by establishing a private hospital and some schools.

I am proud of my village.

**S. Vijayaluxmy**
*Grade 9*

# MY FIRST DAY AT SCHOOL

Although I was only five years old when I first went to school I can distinctly recall to mind all what I experienced on my first day at school.

On an auspicious day my mother dressed me in a new suite and my father took me to school. When I erraived at the school the head-master welcomed us with a smile and patted me on my shoulders. He conducted me to my new class and handed me over to the teacher who was in charge of the class. All the claassmates crowed round me and it took sometime for her to restore order. My teachar gave me a seat in the front row just opposite her table. I sat on the small chair and started looking at the things in the class. I saw severel things in the classroom but the only thing that frightened me most was a small cane on the teacher's table. I started to cry. My teacher called me and patted me She asked me whether I could read. To her utter surprise I told her I could read the whole book and write all the letters in the alphabet. She praised me and my fear vanised in no time.

When the bell rang for the interval I ran out of the class-room to meet my father who had come in time to take me home.

**R. Satheeswary**
*Grade 8 'B'*

## I LOVE......

I love my teachers hence I love my school.
I love my parents hence I love my village.
I love my brothers, sisters and friends hence I love my Society.
I love my Society hence I love my Country.

**K. Vanaja**
*Grade 8 B*

---

## FOR WANT OF......

For want of fuel energy is lost
For want of energy the mechine is lost
For want of a mechine the man's want is lost
For want of a want the man is lost
For want of a man the world is lost.

**B. Balakumar**
*Grade 7 A*

---

## MYSELF

I am a school boy. I am in Grade Four. I study Tamil, English, Religion and other subjects. My favourite subject is English. I have two sisters and a brother. I have a pet dog. Its name is Jimmy. I play with it in the evening. I have a small home garden.

My hobby is collecting stamps and picture cards. I have a nice album too.

**S Sritharan**
*Grade 4*

# மாணவ மன்றம்

நமது மாணவ மன்றம், கல்வியின் சிறப்பைப் பல வழிகளிலும் விருத்தி செய்து மாணவர்களின் திறனை மேன்மையுறச் செய்வதற்கு மாதமிரு முறை கூட்டப்படுகின்றது.

ஒவ்வொரு தவணை ஆரம்பத்திலும் மன்ற உத்தியோகத்தர்கள் புதிது புதிதாகத் தெரிவு செய்யப்படுவார்கள். மாணவ உத்தியோகத்தரின் ஆற்றலுக்கு ஏற்ப அவர்களின் செயற்பாட்டை ஊக்க முயற்சிகள் கொடுக்கப்படுகின்றன. பேச்சுகள், பாடல்கள், விவாத மேடைகள், கருத்தரங்குகள், அறிவுப் போட்டிகள், நாடகங்கள், கவியரங்குகள். கட்டுரை, கவிதை, பத்திரிகை ஆக்கங்கள் ஆதியன நடை பெறுகின்றன. மன்றத்தைச் சிறப்பிக்கும்முகமாக வெளியிலிருந்து சிறந்த கருத்து வழங்குவோரையும் அழைப்பிக்கிறோம்.

மாணவர்களிடமிருந்து பெறப்படும் சந்தாப்பணத்தைக்கொண்டு, வாசிப்புத் திறனை வளர்ப்பதற்கும், இன்பப் பொழுது போக்குவதற்கும் அறிவைத் தூண்டுவதற்கும் சிறு சஞ்சிகைகள் வாங்கி வழங்குகின்றோம்.

மாணவர் திறனை ஊக்குவிக்குமுகமாகத் திறன் மிக்கோருக்குத் திறனுக்கேற்பப் பரிசில்கள் வழங்கி வருகின்றோம்.

ஒவ்வொரு வருடமும் சிறந்த முறையில் கலை விழாக்கள் கொண்டாடுகின்றோம். வளர்ந்து வரும் இம் மன்றம் பாடசாலைப் பொன் விழாச் சிறப்புற பல் வகையிலும் வாழ்த்துகின்றது,

மன்றச் செயற்குழு.

## சிரமதானப்பணியில்




வித்தியாலய
அபிவிருத்திச்
சபையும்

இந்து மகா சபையும்



எமது மாணவிகள்



எமது மாணவர்கள்

# சமய விழாக்கள்



# சைவ மன்றம்

எமது பாடசாலை, சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்க்கும் நோக்கமாகத் தாபிக்கப்பெற்றது. ஆதலால் சைவ சமய சம்பந்தமான விடயங்கள் அனைத்திலும் பங்குபற்றுகிறது. சமய குரவர்கள் நால்வருடன் ஐந்தாங் குரவராகிய நாவலரையும் நினைவு கூர்ந்து குருபூசைகள் நடாத்தி வருகின்றோம். ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்துக் கடைசி வெள்ளிக்கிழமையன்று பாடசாலை மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் சமய தீட்சை ஆகிய சைவப் பிரவேசம் நடாத்துகின்றோம்.

புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவை விமரிசையாகக் கொண்டாடி வருகின்றோம். அத் தினங்களிற் சமயப் பெரியார்களை அழைத்துச் சமய சம்பந்தமான பேச்சுக்களையும், கருத்தரங்குகளையும், சமய அறிவுப் போட்டிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடாத்தி மாணவர் மத்தியில் சைவப் பற்றினையும் தமிழறிவினையும் மேன் மேலும் விருத்தி செய்து வருகின்றோம்,

வாரந் தோறும் வெள்ளிக்கிழமைகளில் சிவ புராண பாராயணமும், குறிப்பிட்ட ஆசிரியர்களின் சமயச் சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றன. சமய விழாக் காலங்களில் ஆலயத் தொண்டுகள் சிறப்புறச் செய்யப்படுகின்றன.

பாடசாலை மாணவர்கள் அனைவரும் அகில இலங்கை விவேகானந்த சபை நடாத்தும் சமயப் பரீட்சைகளிற் தோற்றித் திறமைச் சித்திகளும், பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பாடல் பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய தேவஸ்தானங்களுக்குச் சுற்றுலாச் சென்று நீங்காச் சமயப் பற்றை ஊட்டி வருகின்றோம்.

ஆண்டிறுதியில் தேவார சமய அறிவுப் போட்டிகள் நடைபெற்று மாணவர்க்குப் பரிசில்கள் வழங்கப்பெற்று வருகின்றன. நாவலர் காட்டிய வழியில் சைவத்தையும் தமிழையும் கற்று, மேன்மைப்படுத்திச் சிறப்புற நமது சைவ மன்றத்தினர் அயராது உழைத்து வருகின்றனர்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ச. செல்வநாயகம்
பொறுப்பாசிரியர்.

# விஞ்ஞான மன்றம்

எமது பாடசாலையின் விஞ்ஞானமன்றம் மாதம் இருமுறை கூடும். இதனால் நாம் கூடிய அறிவைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. மாண வர்களுக்கிடையே கட்டுரைப் போட்டிகள், வினுவிடைப் போட்டிகள், பல நடைபெறுவதனால் அவர்கள் பொது அறிவு நிகழ்ச்சிகளில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

சென்ற ஆண்டு எமது மன்றம் ஒருநாள் சுற்றுலா ஒன்றை அதிபரின் அனுமதியுடன் மேற்கொண்டு விஞ்ஞானக்கல்வி சம்பந்தமான சில இடங் களைத் தரிசிக்கவிரும்பி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றைப் பார்வையிட்டது.

பிறிதொரு நாளில், தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட திகதிகளில் அவ்விடத்தைப் பார்வையிடச் சென் றது. இதில் எமது விஞ்ஞான ஆசிரியர்களும் பங்குபற்றினர். மாணவர் கள் விஞ்ஞானம் சம்பந்தமான பல பரிசோதனைகளையும், அவதானிப்புக் களையும் செய்கை மூலம் அறிந்து கொண்டனர். 3 நாட்கள் இந்நிலையத்தில் பயிற்சி நடைபெற்றது.

கல்வி மட்டுமன்றி ஆராய்ச்சி சம்பந்தமான அறிவுரைகளையும் எமது விஞ்ஞான ஆசிரிய, ஆசிரியைகள் எமக்கு வழங்குகின்றனர். மேலும் எமது மன்றம் வளர்ச்சிபெற மன்ற அங்கத்தவர்களும் புதியன புகுத்தி ஆவன செய்வர் என நம்புகிறோம், அங்கத்தவர்கள் அனைவர்க்கும் நன்றி.

மன்றக் குழு

# சமூகக் கல்வி மன்றம்

எமது பாடசாலைச் சமூகக் கல்வி மன்றம் மாதத்திற்கொருமுறை கூடும். இம் மன்றம் எமது அறிவை விருத்தி செய்கின்றது. இதன் மூலம் மாணவர்கள் ஒன்றுகூடிப் பல்வேறு கருத்துக்களையும் பரிமாறக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. மன்ற நிகழ்ச்சிகளில் பேச்சுக்கள், வினவிடைப் போட்டிகள் என்பன இடம் பெறும்.

எமது மன்றம் கடந்த வருடம் ஒரு சுற்றுலாவை மேற்கொண் டது. உயர்தர வகுப்பு மாணவ மாணவிகள் சேர்ந்த குழு, அதிபர், உதவி அதிபர், சமூகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோருடன் மேற்படி சுற்றுலாவை மேற்கொண்டது. ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குபற்றினர்கள். பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்பளம், திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டது.

மேலும் இலங்கையின் பழைய இராசதானியாக இருந்த அநுரத புரத்திலுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற புத்த விகாரைகளையும். ரூவான் வெலிசாய. ஆயிரங்கால் மண்டபம், வெள்ளரசுமரம் ஆகிய வற்றையும் பார்த்து மகிழ்ந்தோம். மிகுந்தலை மலைக்குச் சென்று, அங் குள்ள தாது கோபத்தைப் பார்வையிட்டோம். இச் சுற்றுலா எமக்கு அறிவை ஊட்டக் கூடியதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது.

இம் மன்றத்தை நடத்துவதற்கு எமக்கு உறுதுணையாயிருந்து உதவியுள்ள எமது அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்,

செயற் குழு

# The English Literary Union

Patron : Principal
Advisors : Mr. T. Shanmuganathan
Mrs. S. Velauthapillai
Mrs. C. G. Selvadurai
Miss. J. Apputhurai
President : Mas. N. Pushparajah
Secretary : Miss. S. Vijayaluxmy
Treasurer : Mas. M. Sivarajah

The year under review is a remarkable and a successful one for our English Literary Union. The number of members both in the Senior and Primary Section are greatly increased this year. Although our diary is filled with countless programmes we are able to arrange only a few meetings in each group.


The enthusiastic young members of this union show a very keen intererest in delivering speeches, taking part in Dramatic activities and do their parts to the best of their abilities. The English Day held last year would speak of their talents.

We can proudly stress that we have attained fairly a high standard in Literary activities like any other big schools in our circuit.


It is no doubt, but quite evident that the same prestige would be maintained throughout by the growing youths of this Alma Mater.

With the best regards to all our members and devoted teachers.


S. Vijayaluxmy
Secretary



தாச்சிக் குழு



வலைப்பந்தாட்டக் குழு



கரப்பந்தாட்டக் குழு



1979 - இல்ல விளையாட்டுப் போட்டிகளின்போது

# விளையாட்டுத்துறை அறிக்கை

எமது பாடசாலை யாழ் மாவட்டத்தில் ஒருகிராமப்புறப் பாடசாலையாக இருக்கிறது. அதனால் பெரிய கல்லூரிகளிற் கிடைக்கக்கூடிய சகல வசதிகளும் கிட்டுவதில்லை. கனிஷ்ட இடைநிலை வகுப்புக்கு வந்ததும் பெரும்பாலான ஆர்வமுள்ள மாணவர்கள் கல்லூரிகளை நாடிச் சென்று விடுவர். வசதிகுறைந்தவர்களும் ஆர்வம் குறைந்தவர்களுமே தம்வசதிகளுக்காகப் பிள்ளைகளை இங்கு கல்வி பயில அனுப்புகின்றனர் அப்படி இருந்தும் எமது அரிய முயற்சியால் வட்டாரக் கல்விப் பகுதியினரால் நடத்தப்படும் சகல விளையாட்டுப் போட்டிகளிலும் எமது பாடசாலை பங்கு பற்றி பல இடங்களைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது

எமது பாடசாலைக்கு ஒரு சிறந்த விளையாட்டு மைதானம் இன்மை காலங்காலமாக இருந்து வரும் பெருங்குறையாகும். அத்துடன் பயிற்சி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியரும் இல்லை. அப்படியிருந்தும் வருடா வருடம் விளையாட்டுப் போட்டியைச் சிறப்பாக நடாத்தி வருகிறோம். எமது ஸ்தாபகர்களின் பெயரால் அமைந்த மூன்று இல்லங்களும் இவ்விளையாட்டுப் போட்டியைச் சிறப்பிக்கின்றன அவ்வில்லங்கள் முறையே அப்பாக்குட்டி, மயில்வாகனம், பொன்னையா என்பன.

**1979**-ம் ஆண்டு விளையாட்டுப்போட்டியை பாடசாலைக்குரிய சிறிய மைதானத்திலேயே நடாத்தினோம். அப்போட்டியில் யாழ் மாவட்டக் கல்வி அதிகாரி திருவாளர். நவரத்தினம் அவர்கள் பிரதம அதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. அப்போட்டியைச் சிறப்புற நிகழ்த்த உதவிய ஏனையபாடசாலை ஆசிரியர்கட்கும், பழைய மாணவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வருடந்தோறும் கல்விப் பகுதியினரால் நடாத்தப் படும் பலபோட்டிகளிற் பங்குபற்றி பல இடங்களைப் பெற்றிருப்பது குறிபிடற் குரியது. அத்துடன் மாவட்ட ரீதியிலும் பங்கு பற்றிச் சில இடங்களைப் பெற்றிருக்கிறோம்.

இம்முறை நடைபெற்ற வட்டாரத் தேகப் பயிற்சிப் போட்டியில், எமது பாடசாலையிலிருந்து நான்கு குழுக்கள் கலந்து கொண்டன. அதில் மேற்பிரிவு ஆண்கள் 1-ம் இடத்தையும் கீழ்ப்பிரிவு ஆண்கள் 3-ம் இடத்தையும், கீழ்ப்பிரிவுப் பெண்கள் 3-ம் இடத்தையும் பெற்றனர். இது மகிழ்ச்சிக்குரிய சாதனை எனலாம். பயிற்சி பெற்ற சாதரண ஆசிரியர்களே இம்மாணவர்களைப் பயிற்றியவர்கள். அவர்களின் விடாமுயற்சியே எமது வெற்றிக்குக் காரணம் எனலாம்.

கடைசியாக ஒன்று கூற விரும்புகிறோம். எமது பாடசாலைக்குச் சிறந்த விளையாட்டுமைதானமும் விசேடபயிற்சி பெற்ற ஆசிரியரும் போதிய விளையாட்டு உபகரணங்களும் இருந்தால் நாம் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிகளிற் கலந்து கொண்டு பரிசில்கள் பெற முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

த. நடராசா

(விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

# க. பொ. த. உயர்தர மாணவர் மன்றம்

| | |
|---|---|
| போஷகர்: | திரு. க. இரத்தினம், அதிபர் |
| பொறுப்பாசிரியர்கள்: | திரு. இ. கணேசராசா |
| | திருமதி க. இராசையா |
| தலைவர்: | செல்வன். ப. விஜியேந்திரன் |
| உப தலைவர்: | செல்வி. இ. வசந்தமோகன |
| செயலாளர்: | செல்வி. த. மனோகரி |
| துணைச் செயலாளர்: | செல்வன். மா. கருணாகரன் |
| பொருளாளர்: | செல்வன். செ. தயாபரன் |
| பத்திராதிபர்: | செல்வன். அ. கதிர்காமநாதன் |
| பத்திரிகைக் குழுவினர்: | செல்வன். ச. சிவசோதிநாதன் |
| | செல்வி. க. அருள்சோதி |
| | செல்வி. மு. நிர்மலாதேவி |

எமது வித்தியாலயத்தில் க. பொ. த. உ/த வகுப்பு இவ் வருடம் முதற் பருவத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எமது மன்றம் இரண்டாம் பருவ ஆரம்பத்திலேயே செவ்வனே இயங்கத் தொடங்கியது. எனவே எம் மன்றப் பணிகளையிட்டு அதிகம் எடுத்துரைக்க முடியாமைக்கு வருந்து கிறோம்.

எமது மன்ற உறுப்பினர் பயன் பெறும் வகையில் வாரந்தோறும் எமது மன்றம் கூடுகின்றது . நிகழ்ச்சிகள் சில வாயினும் எமக்கு உற்சா மும் ஊக்கமுந்தரும் மூன்று சிறப்புரைகள் குறிப்பிடத்தக்கவை. முறையே

(1) திரு. K. தேவராஜா
பொருளியல் விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்

(2) திரு. P. சிவநாதன்
பொருளியல் விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்

(3) செல்வி. த. சகலகலாவாணி
பட்டதாரி மாணவி யாழ் பல்கலைக்கழகம்

இவர்களுக்கும்எம் நன்றி

வருங்காலத்தில், பட்டிமன்றங்கள், விவாதங்கள், அறிஞர் பலரது கருத்தரங்குகள் என்றின்ன பல நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். எமது பத்திரிகைக்குழு "இளந்தென்றல்" என்றவொரு சஞ்சிகை வெளியிடவும் எண்ணியுள்ளது. எமது தேவை யுணர்ந்து ஆங்காங்கே ஆலோசனைகளை யும் குறிப்புகளையும் வழங்கியுதவும் பொறுப்பாசிரியர்களிருவருக்கும், அதிபர் அவர்களுக்கும் எமது நன்றிகள் பல.

த. மனோகரி
செயலாளர்

# ஆசிரிய மன்றம்

எமது மன்றம் கொள்கையாற் பெரியதாயினும் எண்ணிக்கையாற் சிறியது. ஆசிரியர்களுக்கான சகல வசதிகளையும் எம்மாற்செய்து கொடுக்க முடியாவிடினும் ஓரளவாவது உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறோம். அவற்றுக்கென எமக்கொத்துழைப்பு நல்கிவரும் அதிபர் அவர்களுக்கு எங்கள் நன்றி.

எம்மன்றத்து உறுப்பினர்களாகச் சேர்வோரை வரவேற்கிறோம். எம்மை விட்டுப்பிரிந்து சென்றோரையும் வாழ்த்துகிறோம். எம்மன்றத்திலிருந்து இளைப்பாறிச் சென்றோரையும், அவர்களது சேவைகளையும் நாம் மறப்பதற்கில்லை. அன்னோருட்பலர் இன்றும் தொடர்ந்து இப்பாடசாலை நலனில் அக்கறை செலுத்தி வருதல் கண்டு நாம் பூரிப்படையாமலிருக்கமுடியாது. அத்துடன் அவர்களைப் பாராட்டாமலிருக்கவும் முடியாது.

எமது உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து உதவி புரிதலைத் தத்தமது தலையாய கடனாகக் கொண்டிருத்தல் மெச்சுதற்குரியது. எமது பாடசாலை மனையியற் பிரிவினரின் உதவிக்கும் நாம் மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

த. நடராசா.
செயலாளர்

க. நடராசா.
தலைவர்

## வித்தியாலயப் பணியில் எமது ஆசான்கள்

1. திரு. K. இரத்தினம் (அதிபர்)
2. செல்வி. N. சிவசுப்பிரமணியம் (துணைஅதிபர்)
3. திரு. M. S. கணபதிப்பிள்ளை
4. ,, T. நடராசா
5. திருமதி R. செல்லத்துரை
6. ,, R. தியாகராசா
7. ,, S. சிவபாலசிங்கம்
8. ,, S. இராசரெத்தினம்
9. திரு. T. சண்முகநாதன்
10. திரு. S. சிவகுமார்
11. ,, K. நடராசா
12. ,, S. செல்வநாயகம்
13. ,, P. பாலநாதன்
14. திருமதி S. வேலாயுதபிள்ளை
15. ,, T. ஹென்றி
16. ,, P. அரியராசா
17. ,, K. இராசையா
18. ,, S. G. செல்வதுரை
19. ,, K. செல்வராசா
20. திரு. S. லோகேஸ்வரன்
21. ,, R. கணேசராசா
22. ,, S. கமலநாதன்
23. செல்வி. S. விஜயலட்சுமி
24. ,, J. அப்புத்துரை



எமது ஆசிரியர்கள் — 1980



வித்தியாலயப் பாதுகாவலர்கள் (Prefects) — 1979

# நன்றி ஒரு சொல் . . . .

நன்றி கொல்வார் நன்றிலர்
நன்றி கொள்வார் நலர் எனும்
நற்பண்பு நாம் கொண்டு

**எமது பொன் விழாவிற்கு வருகை தந்த**

- பிரதம விருந்தினர்
- சிறப்பு விருந்தினர்களுக்கும்

**எமது பொன் மலருக்கு**

- ஆசியுரை
- ஆய்வுரை
- வாழ்த்துரை
- கருத்து நிறைந்த கட்டுரைகள் வழங்கிய அன்பர்களுக்கும்
- கவிதைகள், கட்டுரைகள் தந்த எம் மாணவச் செல்வங்களுக்கும்
- விளம்பரங்கள் தந்துதவிய வணிகப் பெருமக்கள், ஆதரவாளர்களுக்கும்

**இம் மலரை**

- அழகுற அச்சிட்டுதவிய யாழ் — செட்டியார் அச்சகத்தினருக்கும் சைவப்பிரகாச அச்சகத்தினருக்கும்

**இன்னும்**

- பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் ஆக்கித்தந்த இணுவில் துர்க்கா அச்சகத்தினருக்கும்
- கவினுறு படங்களை எடுத்துதவிய போட்டோ ஸ்ரீக்கும்
- பட ' புளொக் ' குகளைச் செய்துதவிய ஞானம்ஸ் புகைப்பட நிறுவனத்தாருக்கும்

**எம் கலை விழா**

- இனிது நடைபெற உதவிய அன்பர்கள், ஆதரவாளர்களுக்கும்
- மேடை, ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும்
- இங்கு வருகை தந்து சிறப்பித்த சபையோருக்கும்

## நன்றிகள் கோடி நாம் சொன்னோம்

மலர்க் குழு

**With Kind Regards**

**Visit**

- **Friut Trees**
- **Sales & grower**

# NEW LANKA FARM

K. K. S. Road,
INUVIL.

Prop: *S. K. Thuraisingham J. P.*

அன்பளிப்பு

# குபேரன் ஏஜென்சிஸ்

மட்டக்களப்பு.

உரிமையாளர்: K. குமாரசாமி

**Agencies for:**

**B. C. C.**

&

J. L. MORRISON

அன்பளிப்பு:



# ஸ்ரீ சிவகாமி

## கைத்தறி நெசவு நிலையம்

இணுவில்

பல்லப்ப வைரவர் துணை

கண்ணன் மெற்றல் கிறசர்

கட்டிடம் சம்பந்தப்பட்ட

கல், மண், கிறசர் ஆதியன

குறைந்த விலையில் குறித்த நேரத்தில்

பெற உகந்த இடம்

# கண்ணன் மெற்றல் கிறசர்

*With Heartiest Greetings*

**to our Alma Mater**

***Visit***

*Kannan Metal Crusher*

***for***

***All Your Building Items***

- METAL
- SAND
- CRUSHER

Prop: **P. CHANDRALINGAM**

Inuvil Railway Station - Prox

**INUVIL.**

எம்மை உருவாக்கிய இணுவையூர்

சைவமகாஜனாவின் பொன்விழாவும்

மலரும் சிறப்புற எமது உளங்கனிந்த
நல்லாசிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறுமுகம் தில்லையம்பலம் குடும்பத்தினர்

With best compliments
of:

**T. EHAMPARANATHAN**

SELVANATHAN TRADERS
16, Parussella Road,
**YATIYANTOTA.**

வாயார வாழ்த்துகிறோம்

# SARASWATHI STORES

**General Merchants & Commission Agents**

**Dealers in all kinds of Rice and Ceylon Produce**

**No. 48, Old Moor Street,**
**COLOMBO - 12.**

Phone: 35331

&

# *K. K. INDUSTRIES*

**No. 48, Old Moor Street,**
**COLOMBO - 12**

எமது பாடசாலை 50 ஆண்டுகள் பூர்த்தி செய்து

## பொன்விழாக் கொண்டாடும் இன்றைய தினத்தில்

★

அதன் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களையும்

நாம் நினைவு கூறுவது நம் தமிழ்ப்பண்பல்லவா?

| | | | | |
|---|---|---|---|---|
| அமரர் | திரு | மு. | அப்பாக்குட்டி | வைத்தியர் |
| ,, | ,, | சி. | மயில்வாகனம் | மலாயன் பென்சனர் |
| ,, | ,, | க. | பொன்னையா | மனேஜர் |
| ,, | ,, | சி. | சபாபதிப்பிள்ளை | உபாத்தியாயர் |
| ,, | ,, | ஆ. | செல்லப்பா | தலைமை ஆசிரியர் |

## VALLIPURAM PRESS

- *Printers*
- *Book Binders*
- *Rubber stamp*

  *&*

  *Block Makers*
- *Stationers etc*

V

10, Bazaar Street,
VAVUNIYA.
T.' Phone: 326

ஆசி வழங்குகிறோம்

V

## விநாயகர் ஸ்ரோர்ஸ்

K. K. S வீதி
இணுவில்.

*உரிமையாளர்:*

பொ. இராமநாதபிள்ளை

For
Cycle Repairing work
*Visit us*

## ANUJA CYCLE WORKS

Prop: *S. Loganathan*
K. K. S. Road,
INUVIL.

*Space Donatad by*

V

## PHOTO SRI

(OUT DOOR PHOTOGRAPER)
Kurumpasiddy,
TELLIPPALAI.

★

உங்கள்
படப்பிடிப்பாளர்

## போட்டோ ஸ்ரீ

குரும்பசிட்டி,
தெல்லிப்பளை.

*With best wishes*

*from*

# KARE RAM STORES

**GENERAL MERCHANTS**

No. 1, Public Market Building,

**Grand Bazaar,**

**MANNAR.**

எங்களிடம்

பல சரக்குச் சாமான்கள், சாய்ப்புச் சாமான்கள்

திறம் புகையிலை "லீலா", சுருட்டு

சுத்தமான நல்லெண்ணெய்

முதலியனவும்

விவசாயிகளுக்குத் தேவையான

உரவகைகள், கோழித்தீன்வகைகள்

தமரோன், அம்புஸ், சுமிசிலின்

மருந்துகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ளலாம்

# லீலா ஸ்ரோர்ஸ்

காங்கேசன்துறை வீதி:

சுன்னாகம்

*With Heartiest Greetings*

General Merchants, News Agents & B. C. C. Distributors

# THAMOTHARA STORES

★

Props: **K. S. Thamotharampillai & Bro**

**Phone: 247**

**Grand Bazaar**
**Mannar**

அன்பளிப்பு:

கைத்தறிப் புடைவைகள்,
வர்ணக்குடைகள்
மற்றும்
நம் நாட்டு, வெளிநாட்டு
உற்பத்திப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்
யாவற்றிற்கும்

V

# ஏ. வி. பி.

ஏ. வி. பி. பான்ஸி ரேடேஸ்
B3 7, நவீன சந்தை சுன்னாகம்.
தொலை பேசி, 217.

சஞ்சிகைகள்
தினசரிகள்
சினிமாப் புத்தகங்கள்
பழவகைகள்
மற்றும்
நுகர்ச்சிப் பொருள்களுக்கு
எம்மை நாடுங்கள்

V

**ச. கிருஷ்ணராஜா**
புத்தகக் கடை
K. K. S வீதி
இணுவில்.

நவீன டிசைன்களில்
நகைகள் வேண்டுமா?
இன்றே விஜயம் செய்யுங்கள்

V

## தாமோதரம்ஸ்
## நகைத் தொழிற்சாலை

கே. கே. எஸ். வீதி இணுவில்

Visit

**THAMOTHARAMS**
**Jewellery Work Shop**
K. K; S Road, INUVIL.

குறித்த நேரத்தில் சிறந்த நவீன
அச்சுவேலைகளுக்கு
புதுப்பொலிவுடன்
திகழும்

## சைவப்பிரகாச
## அச்சகம்

450, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 356

For all your
**House hold requirements:**

Visit

# City Furniture

97, KASTURIAR ROAD,
**JAFFNA.**

லிங்கம் ஸ்ரோர்ஸாரின் அன்பளிப்பு

எங்களிடம்

பலசரக்குச் சாமான்கள்

சாய்ப்புச் சாமான்கள்

திறம் புகையிலை, திறம் சுருட்டு என்பன

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

# லிங்கம் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: க. கனகசபை

கே. கே. எஸ், வீதி

இணுவில்

அன்பளிப்பு

பொன் விழாக் காணும்
சைவ மகாஜனாவிற்கு
எமது இதயங் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

"மலர்விழி களஞ்சியம்"

# விறகு காலை

உரிமையாளர்: மூ. பரமலிங்கம்.

காரைக்கால் வீதி, இணுவில்,

எமது

ஆசிகளுடன் கூடிய

அன்பளிப்பு

K. K. விசுவலிங்கம்

கே. கே. எஸ் றேட்

இணுவில்

With best wishes from:

# KALAWATHY CAFE

Agent Virakesari & Mithiran

T. Phone: 211

Main Street
Mannar

விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்

உங்கள் விளைபொருட்களாகிய
கிழங்கு, வெங்காயம், மிளகாய்
போன்றவற்றை
அதிக விலைக்கு விற்கக்கூடிய
சிறந்த ஸ்தாபனம்

**பெட்டா டிரேட் கம்பனி**

இல. 90, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - II.

With best compliments of

**Pettah Trade Company**

No. 90, 4th Cross Street,
COLOMBO - 11

விழா சிறக்க

எமது நல்லாசிகள்

**Dr. K. பாலசுப்பிரமணியம்**

# சக்தி மருந்துச்சாலை

கே. கே. எஸ் வீதி :: சுன்னாகம்

தரமான

ஜவுளி வகைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

# சிவகாமசுந்தரி புடைவைக் கடை

கே. கே. எஸ். வீதி, இணுவில்.

உரிமையாளர்: [illegible]. சதாசிவம்

★

**Heartiest Greetings to**

**Saiva Mahajana Golden Jubilee Celebrations**

# Sivakamasundari Textiles

**K. K. S. Road**

**INUVIL.**



*For* Quality Photographs

Blocks &

Photostatprints



# GNANAMS

(AIR CONDITIONED)

**JAFFNA. HELLO: 7067**

# சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாழ்த்துக்கள்

எம்மிடம்

- கட்டடப் பொருட்கள்
- கால்நடை உணவுகள்
- விவசாய இரசாயனப் பொருட்கள்
- மோட்டார், நீர் இறைக்கும் இயந்திர உதிரிப் பாகங்கள்
- புடைவை வகைகள்
- மற்றும் சகல விதமான நுகர்ச்சிப் பொருட்கள்

யாவும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்வதற்கு

இன்றே விஜயம் செய்ய வேண்டிய

எமது

மொத்தவிற்பனை நிலையங்கள்

● இணுவில் ● சுன்னாகம் ● ஏழாலை

**சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

சுன்னாகம்.

தொலைபேசி: சுன்னாகம். 303

Heartiest Greetings
on
the occasion of their
Golden Jubilee Celebration.

COLOMBO RESTAURANT

No. 77, Kasturiar Road,
JAFFNA.

# FASHION HOUSE

65, K. K. S. Road,

JAFFNA.

எம்மிடம்

அலுமினியம்

எவர்சில்வர் பாத்திரங்கள்

அழகு சாதனப் பொருட்கள்

சூட்கேஸ் வகைகள்

மற்றும்

தற்கால நாகரீகத்திற் கேற்ற வகையில்

தயாரிக்கப்பட்ட

நாகரீகப் பொருட்கள்

விளையாட்டுச் சாமான்கள்

யாவும் நிதான விலையில் கிடைக்கும்

# பெஷன் ஹவுஸ்

65, கே. கே. எஸ். ரோட்,

யாழ்ப்பாணம்.

*With the best compliments from:*

# MILKA INDUSTRIES

*Manufacturers*
*of*
**TOFFEES, SWEETS**
**BULTO, GLUCOSE**
**&**
**CAMPHOR**

**தரமான இனிப்பு வகைகளுக்கு**
**மில்கா தயாரிப்புக்கள்**

Milka Bulto
மில்கா புல்ட்டோ

Milka Beauty Balls
மில்கா பியூட்டி பேர்ல்ஸ

Milka Kadabi
மில்கா கடாபி

Milka Cocoa Cigar
மில்கா கொக்கோ சுருட்டு இனிப்பு

Milka Lemon & Orange Drops
மில்கா தோடம்பழ இனிப்பு

Milka Cut Rolls
மில்கா கட் றோல்ஸ்

Milka Glucose — D
மில்கா குளுக்கோஸ்

New Kamadenu Camphor
நியூ காமதேனு கர்ப்பூரம்

*Visit:*

# MILKA INDUSTRIES

Manufacturers of Milka Products

**THAVADY — JAFFNA.**

*Warm Greetings*
*from:*

★

# *PARASTO*
# *BULIO & SWEETS*

**Manufacturer & Distributor**

# K. BALAA

**Kokulam, : : Inuvil.**

With Greetings

# SELVAM BROS.

— GENERAL MERCHNTS —

Grand Bazaar,
MANNAR.

பொன் விழாச் சிறப்புற வாழ்த்துகிறோம்

செட்டியார் அச்சகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

MOIL

TRADE MARK

# மல்ரி ஒயில்

## இன்டஸ்றீஸ்

## லிமிட்டெட்

கே. கே. எஸ். வீதி,

இணுவில்.

தமது

வாழ்த்துக்களைத்

தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

சுகாதாரமுறையிலமைந்த

★ தேங்காய் எண்ணெய்

★ நல்லெண்ணெய்

★ இலுப்பெண்ணெய்

★ வேப்பெண்ணெய்

ஆகிய எண்ணெய் வகைகளை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

# Multii Oil Industries Ltd.

K. K S. Road, INUVIL.

Hello: 339 CHUNNAKAM.

இணுவையூர்
சைவ மகாஜனாவின் பொன்விழாவுக்கும்
இவ் வித்தியாலயத்தின் உயர்ச்சிக்கும்
எமது நல்லாசிகள்


சி. சின்னத்துரை & சகோதரர்

39, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 284

தந்தி: கல்இ


செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.